## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# இந்து சமய அறநிலையங்கள்

கொள்கை விளக்கக் குறிப்பு

**2024–2025**

மானியக் கோரிக்கை எண். 47


**பி.கே. சேகர்பாபு**

இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
**2024**

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை**

**இந்து சமய அறநிலையங்கள்**

**மானியக் கோரிக்கை எண்.47**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

**2024–2025**

**பொருளடக்கம்**


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1–3 |
| 2 | இந்து சமய அறநிலையத் துறையின் தோற்றம் | 3–11 |
| 3 | இந்து சமய அறநிலையங்கள் ஆணையம் (1960–1962) | 11–13 |
| 4 | சட்டம் மற்றும் நிருவாக அமைப்பு | 14–15 |
| 5 | இந்து சமய நிறுவனங்கள் | 15–20 |
| 6 | உதவித்தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம் | 20–22 |
| 7 | நிருவாக கட்டமைப்பு | 22–26 |

| | | |
|---|---|---|
| 8 | மண்டல மற்றும் கோட்ட அளவிலான நிருவாகம் | 27–39 |
| 9 | புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவு | 40–43 |
| 10 | திருக்கோயில் நிருவாகம் | 43–44 |
| 11 | திருமடங்கள் | 45–47 |
| 12 | இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கை | 48–50 |
| 13 | ஆலோசனைக்குழு | 50–52 |
| 14 | மாவட்ட குழு | 52–53 |
| 15 | மாநிலக் குழு | 53–54 |
| 16 | அறங்காவலர்கள் நியமனம் | 54–58 |
| 17 | இந்து சமய அறநிறுவனங்களின் அசையாச் சொத்துகளின் நிருவாகம் | 58–69 |
| 18 | திருப்பணி (புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல்) | 69–78 |
| 19 | பாதுகாப்புக் கையேடு | 78–79 |
| 20 | மாநில அளவிலான வல்லுநர் குழு | 79–80 |

| | | |
|---|---|---|
| 21 | வரைபடக் குழு | 80–82 |
| 22 | சுவரோவியங்களை புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல் | 82 |
| 23 | திருக்குளங்களை சீரமைத்தல் மற்றும் மழைநீர் சேகரித்தல் | 82–83 |
| 24 | மாவட்ட ஆட்சியர் ஒப்புதல் பெற்ற பொறியாளர் பட்டியல் | 84–85 |
| 25 | திருக்குட நன்னீராட்டல் | 85–88 |
| 26 | மரத்திருத்தேர் தங்க ரதங்கள் மற்றும் வெள்ளி ரதங்கள் | 88–91 |
| 27 | தங்க முதலீட்டுத் திட்டம் | 91–93 |
| 28 | அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் பணி நியமனம் | 93–95 |
| 29 | கலைஞர் தலமரக்கன்றுகள் நடும் திட்டம் | 95–96 |
| 30 | அன்னைத் தமிழில் வழிபாடு | 96–99 |
| 31 | அன்னதானத் திட்டம் | 99–103 |
| 32 | வஸ்திர மரியாதை | 103–104 |

| | | |
|---|---|---|
| 33 | ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள் | 104–105 |
| 34 | சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் | 105 |
| 35 | யானைகள் சிறப்பு நலவாழ்வு | 105–107 |
| 36 | பசுக்கள் காப்பகம் | 107–108 |
| 37 | மின்கல சிற்றுந்துகள் | 109 |
| 38 | கம்பிவட ஊர்திகள் | 109–110 |
| 39 | ஒரு கால பூஜை திட்டம் | 110–111 |
| 40 | அரசு மானியம் | 111–114 |
| 41 | ஆன்மீக பயணம் | 115–117 |
| 42 | பக்தர்களுக்கான வசதிகள் | 118–119 |
| 43 | சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்குதல் | 119–120 |
| 44 | திருக்கோயில்களில் நூலகங்கள் | 120 |
| 45 | ஆணையர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை | 120–121 |
| 46 | பெருந்திட்ட வளாக மேம்பாட்டு பணிகள் | 121–123 |

| | | |
|---|---|---|
| 47 | வள்ளலார் சர்வதேச மையம் | 123–124 |
| 48 | பக்தர்கள் தங்கும் இடங்கள் | 124–125 |
| 49 | பக்தர்களுக்கான சிறப்பு அடிப்படை வசதிகள் | 126 |
| 50 | திருக்கோயில்களில் இலவச முடி காணிக்கை | 126–127 |
| 51 | மாற்றுத் திறனாளிகளுக்கான கட்டணமில்லா திருமணத் திட்டம் | 127–128 |
| 52 | கட்டணமில்லா திருமணத் திட்டம் | 128–129 |
| 53 | திருக்கோயில்களில் உழவாரப் பணி | 129–130 |
| 54 | திருக்கோயில்கள் பாதுகாப்பு | 130–136 |
| 55 | அருளாளர்கள் விழா | 136–150 |
| 56 | முத்தமிழ் முருகன் மாநாடு | 150–151 |
| 57 | கல்வி மற்றும் அறப்பணிகள் | 151–156 |
| 58 | பயிற்சிப் பள்ளிகள் | 156–162 |

| | | |
|---|---|---|
| 59 | சமூக நல நிறுவனங்கள் | 162–166 |
| 60 | பதிப்பக வெளியீடு | 166–171 |
| 61 | பயிற்சித் திட்டங்கள் | 171–172 |
| 62 | திருக்கோயில் பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள் | 172–182 |
| 63 | கிராமக்கோயில் பூசாரிகள் நலத்திட்டங்கள் | 183–184 |
| 64 | இந்து சமய அறநிலையத்துறை மற்றும் திருக்கோயில்களின் செயல்பாடுகளை கணினி மயமாக்குதல் | 184–191 |
| 65 | கட்டணமில்லா தொலைபேசி சேவை | 191 |
| 66 | நிறைவுரை | 192–194 |

## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை
## இந்து சமய அறநிலையங்கள்

## மானியக் கோரிக்கை எண்.47

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2024–2025

### முன்னுரை

நன் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே

– நாவுக்கரசர்

என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற நாவுக்கரசரின் கொள்கைக்கு ஏற்ப மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து திருக்கோயில்களின் நலன் கருதி, தூய்மை, பாதுகாப்பு, புனரமைப்பு, திருக்குட நன்னீராட்டு, பக்தர்களின் நலனைக் கருதி அடிப்படை வசதிகள் மேம்பாடு மற்றும் அன்னதானத்திட்டம் ஆகியவற்றில் இந்து சமய

அறநிலையத் துறை முழு கவனம் செலுத்தி பல்வேறு திட்டப்பணிகளை செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

**பண்பாட்டுக் களஞ்சியங்களாகத் திகழும் திருக்கோயில்கள்**

திருக்கோயில்கள் பக்தர்களின் நம்பிக்கை களமாக மட்டுமல்லாமல், திருக்கோயில் சார்ந்த நினைவுகூர்தல், பக்தர்கள் வாழ்வியலின் ஒவ்வொரு அசைவுகளிலும் இடம்பெற்று வருகிறது என்பதைக் கருத்திற்கொண்டு அவர்களின் உள்ளகிடக்கையை உணர்ந்து வழிபாட்டு அனுபவத்தை மேம்படுத்தும் பொருட்டு, அடிப்படை வசதிகளை நவீனப்படுத்துவதோடு அன்றாட பூசைகளை நடத்துதல், திருவிழாக்களைக் கொண்டாடுதல், பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் போன்ற பல்வேறு முன்னெடுப்புகளில் அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது.

திருக்கோயில்களில் இறைவனுக்கு சமர்ப்பிக்கப்படும் அர்ச்சனைகள் பக்தர்கள் புரிந்துகொள்ளும் வகையில் அன்னைத் தமிழில் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு,

திருக்கோயில்களில் திருமுறை மற்றும் பிரபந்தங்கள் முறையாக ஓதுவார் மற்றும் பிரபந்த விண்ணப்பர்களைக் கொண்டு இசைக்கப்படுகின்றன. தொன்மை மாறாமல் வழிபாட்டு மரபுகளைப் பின்பற்றுவதோடு, உரிய கால இடைவெளியில் திருக்கோயில்களுக்குத் திருப்பணி மற்றும் திருக்குட நன்னீராட்டு செய்வதை உறுதி செய்து தேவையான புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உரிய பராமரிப்பு நிபுணர்களின் அறிவுரையோடு புனரமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், திருக்கோயில் சொத்துகளைப் பேணிக்காத்தல், திருக்கோயில் சொத்துகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்ற பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2. இந்து சமய அறநிலையத்துறை – தோற்றம்**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து திருக்கோயில்களும் மிகச் சிறந்த வரலாற்றுப் பின்னணி

கொண்டவையாகும். மன்னராட்சி காலத்திலிருந்து திருக்கோயில் வரலாற்றையும் தொன்மைக் கால திருக்கோயில் மரபையும் கல்வெட்டுகளும் ஓலைச் சுவடிகளும் எடுத்துக்காட்டுகின்றன. திருக்கோயில்கள் மன்னர்களால் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளைகள் வாயிலாகவும், மக்கள் முன்வந்து உவந்தளித்த கொடைகளாலும் கட்டப்பட்டவையாகும். மன்னர் வரிசையில் அவ்வக்காலத்திற்கேற்றவாறு பல்லவ, சேர, சோழ, பாண்டியர், நாயக்க மன்னர்கள் அவரவர் பங்களிப்பினை நல்கி திருக்கோயில்களுக்கு அறன் சேர்த்து அர்ப்பணித்தனர்.

முன்னோர்களின் எண்ண ஓட்டத்தை கருத்திற்கொண்டு திருக்கோயில்களில் நடைபெறும் வழிபாடுகள் தங்குதடையின்றி நடப்பதற்காகவும், திருக்கோயில் பராமரிப்பினை உறுதி செய்வதற்காகவும், நிதிப் பற்றாக்குறையைத் தவிர்க்கும் பொருட்டும் திருக்கோயில்களுக்குப் பெருமளவில் நிலங்கள் கொடையாக வழங்கப்பட்டுள்ளன. திருக்கோயில்களில்

விளக்கேற்றவும், விளக்கேற்றியவருக்கு வேண்டிய வசதிகள் அளித்தும், வழிபாடு தொடர்பான சேவைகளில் மலர் மாலை கட்டி வழங்குதல், இறைவனை வீதி உலாவிற்கு எழுந்தருளச் செய்தல், திருவிழாக்கள் நடத்துதல், திருக்கோயில்களில் நடனம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடத்துதல் போன்றவற்றிற்கும் நிலங்கள் கொடையாக வழங்கப்பட்ட செய்திகளை திருக்கோயில் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

மேற்கண்ட திருக்கோயில் சேவைகளைத் தடையின்றி மேற்கொள்ளும் பொருட்டு நிலங்கள், கட்டடங்கள், பொன், வெள்ளி போன்ற மதிப்புறு பொருட்களை திருக்கோயில்களுக்கு கொடையாக பக்தர்களும் வழங்கியுள்ளனர். இவ்வாறு வழங்கிய கொடைப் பொருட்கள், திருக்கோயில் சொத்துகள் மற்றும் அதன் நிர்வாகத்தை முறையாக பராமரிக்க அரசர்கள் பன்னெடுங்காலமாக தனிக்கவனம் செலுத்தி வந்துள்ளனர். மன்னர்கள் இதில் நேரடியாக கண்காணிப்பதோடு இப்பணிகளின் முன்னேற்றத்தை

அறிந்துகொள்ள சமய பெரியோர்களை நிர்வாகக் குழுக்களில் இடம்பெறவும் செய்துள்ளனர்.

திருக்கோயில்கள் மற்றும் அறக்கட்டளைகள் நிருவாகத்தைக் கண்காணிக்கும் பொருட்டு வங்கம், மதராஸ் மற்றும் பம்பாய் மாகாணங்கள் முறையே 1810, 1817 மற்றும் 1827–ஆம் ஆண்டுகளில் ஒழுங்கு முறைகளைப் பிறப்பித்தன. திருக்கோயிலில் வழிபாட்டில் உள்ள திருக்கோயில் தெய்வத் திருமேனியே நிலையான இளவல் மற்றும் சட்ட நபராகக் கருதப்பட்டார்.

திருக்கோயில்களின் சொத்துகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை உறுதி செய்ய 1817–ஆம் ஆண்டு, மதராஸ் நிலைக் கொடைகள் மற்றும் வாரிசு இன்மையால் அரசுப் பொருட்கள் ஒழுங்காற்று முறை எண்.VII, 1817–ன்படி, வருவாய் வாரியத்திற்கு பொது மேற்பார்வை செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டது. இந்த ஒழுங்காற்று முறை மூலமாகத் திருக்கோயில்களின் செலவினங்களை மேற்பார்வை செய்ய உள்ளூர்

முகவர்கள் நியமனம் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டது. 46 ஆண்டுகள் கடந்த பின்னர், இந்த ஒழுங்காற்று முறை போதுமான செயல் திறன் இல்லாததாக உள்ளது என்று இந்து தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் காரணமாக, இந்த ஒழுங்காற்று முறை கைவிடப்பட்டு, சமய கட்டளைகள் சட்டம், 1863 (சட்டம் XX/1863) இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் கீழ் திருக்கோயில்களைக் கண்காணிப்பதற்காக உள்ளூர் குழுக்கள் நியமிக்க வழிவகை செய்யப்பட்டது. இந்தக் குழுவின் உறுப்பினர்கள் ஆயுட்கால உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். இந்தச் சட்டமும் திறனற்றதாக இருந்தது.

இதனைத் தொடர்ந்து, 1908 உரிமையியல் விசாரணை முறைச் சட்டம், பிரிவு 92 உள்ளிட்ட பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. திருக்கோயில்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கக் கூடிய மைய முகமைகளாக உரிமையியல் நீதிமன்றங்கள்

விளங்கின. உரிமையியல் மன்றங்களில் வழக்கு நடத்தும் நடைமுறை மந்தமாகவும் கடினமாகவும் இருந்த நிலையில், திருக்கோயில் நிருவாகத்திடம் இருந்த அபரிமிதமான வளங்கள் தனியார் வசம் சென்றதைக் காணமுடிந்தது. திருக்கோயில்களின் மதிப்புமிக்க சொத்துகள் குறித்து ஆவணங்கள் பராமரிக்கப்படவில்லை. அதனால் மதராஸ் மாகாண சட்ட மேலவையிலும், இம்பீரியல் சட்டமன்றத்திலும் திருக்கோயில்களில் நடக்கும் நிருவாகச் சீர்கேடுகளைத் தடுப்பதற்கும் களைவதற்கும் தனிநபர் மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

நீதிக்கட்சி ஆட்சியின் போது, முன்னோடிச் சட்டமாக, 1927 மதராஸ் இந்து சமய அறக்கொடைகள் சட்டம் இயற்றப்பட்டு, திருக்கோயில்களுக்குச் செயல் அலுவலர்கள் நியமனம் செய்யும் வகையில் 'மதராஸ் இந்து சமய அறநிலைய வாரியம்' அமைக்கப்பட்டது. இச்சட்டத்திற்கு சமுதாயத்தில் ஏற்கனவே வலுவாக இருந்த அமைப்புகளிடமிருந்து பல எதிர்ப்புகள்

எழுந்தன. மதராஸ் மாகாணத்தின் அப்போதைய முதல்வர் பனகல் ராஜா சர் பனங்கட்டி இராமராயனிங்கர் அப்போதைய ஆங்கிலேய வைசிராய் இர்வின் பிரபு அவர்களிடம் இச்சட்டத்தின் அவசியத்தை ஏற்றுக்கொள்ளச் செய்து ஒப்புதலைப் பெற்றார்.

பின்னர், சட்டங்கள் I/1928, V/1929, IV/1930, XI/1931, XI/1934, XII/1935, XX/1938, XXII/1939, V/1944, X/1946, V/1947 ஆகியன இயற்றப்பட்டன. 1950–ஆம் ஆண்டு, திருக்கோயில்கள் மற்றும் அறக்கட்டளைகளின் சொத்துகள் மற்றும் நிதி தவறாகப் பயன்படுத்தப்படுவதாக குடிமக்கள் பலர் சட்ட ஆணையத்திடம் புகார் தெரிவித்ததாக திரு.சி.ஆர்.தாஸ் அவர்களின் தலைமையிலான சட்ட ஆணையம் குறிப்பிட்டது. தனது வரம்பிற்குள் இல்லையென்றாலும் முறைகேட்டைக் கட்டுப்படுத்தவும் வரன்முறை செய்யவும் சட்டம் இயற்றலாம் என்று சட்ட ஆணையம் பரிந்துரை செய்தது.

1951–ஆம் ஆண்டு மதராஸ் இந்து சமய மற்றும் அறக்கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டு, ஆணையரைத் தலைவராகக் கொண்டு பல நிலைகளில் அலுவலர்களுக்கு அதிகார வரம்புகள் வரையறுக்கப்பட்டு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை உருவாக்கப்பட்டது. இந்து கோயில்கள் மற்றும் மடங்களின் மதச்சார்பற்ற விவகாரங்களை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் இத்துறைக்கு வழங்கப்பட்டது. திருக்கோயில் பணியாளர்களில் பரம்பரை முறை ஒழிக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் அதிகாரம், கடமைகள் மற்றும் பொறுப்புகள் வகுக்கப்பட்டன. இந்தச் சட்டத்தைப் பல்வேறு அமைப்புகள் எதிர்த்தன. பல்வேறு நீதிமன்றங்களில் நீண்டகாலமாக நடந்த வழக்கினைத் தொடர்ந்து, உச்சநீதிமன்றம் சிரூர் மடம் வழக்கில் இந்தச் சட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கது என அறிவித்துச் சில பிரிவுகளை மட்டும் நீக்கியது.

இந்நிலையில் முன் வகுத்த அனைத்து சட்டங்களையும் நீக்கிவிட்டு இறுதியாக தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தை 1959–ஆம் ஆண்டு தமிழக அரசு நிறைவேற்றியது. புது சட்டத்தின் வரைவினை சட்ட மன்றத்தில் அறிமுகப்படுத்தும் போது திருக்கோயில்களின் சொத்துகள் சட்ட விரோதமாக திருக்கோயில்களின் அறங்காவலர்கள் பெயர்களிலும் அவர்கள் குடும்ப உறுப்பினர்கள் பெயர்களிலும் மாற்றப்பட்டு 600–க்கும் மேலான வழக்குகள் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளன என்று அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் குறிப்பிடப்பட்டது.

**3. இந்து சமய அறநிலையங்கள் ஆணையம் (1960 – 1962)**

இந்து சமய அறநிலையங்கள் தொடர்புடைய பொருண்மைகள் குறித்து விசாரிப்பதற்காக இந்திய அரசாங்கம் இந்து சமய அறநிலையங்கள் ஆணையத்தை அமைத்தது. இந்த ஆணையத்தில்

இடம் பெற்றிருந்த உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு:–

**தலைவர்**

டாக்டர்.C.P.இராமசுவாமி ஐயர்

**உறுப்பினர்கள்**

1. ஸ்ரீ சங்கர் சரண், ஓய்வுபெற்ற நீதிபதி, அலகாபாத் உயர் நீதிமன்றம்
2. ஸ்ரீ மகாபிர் பிரசாத், தலைமை வழக்குரைஞர், பீகார்
3. சுவாமி ஹரிநாராயண் ஆனந்த், பொதுச் செயலாளர், பாரத் சாது சமாஜ்
4. ஸ்ரீ P.காமேஸ்வர ராவ், ஓய்வு பெற்ற ஆணையர், இந்து சமய அறநிலைய வாரியம், சென்னை

மேலும், ஸ்ரீ கே.வேங்கட சுவாமி நாயுடு, வழக்குரைஞர், சென்னை மற்றும் திரு. கே.சி. சென், ஓய்வு பெற்ற நீதிபதி, மும்பை உயர்நீதிமன்றம் ஆகியோர் கூடுதல் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

குழு தனது அறிக்கையில் குறிப்பாக சமய அறநிலையங்களைக் கண்காணிக்க சட்டப்படியான

அமைப்புகள் இல்லாத அனைத்து மாநிலங்களிலும், அறங்காவலர்களின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த சட்டங்கள் அமலில் உள்ள மாநிலங்களில் உள்ளது போன்ற அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும். 1959–ஆம் ஆண்டு சென்னை இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தில் பிரிவு 97–ல் வழங்கப்பட்டுள்ளபடி ஒரு பொது நல நிதி உருவாக்கிக் கொள்ளலாம் என தெரிவித்தது.

தற்போது ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி, ராஜஸ்தான், பீகார், மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம், ஜம்மு & காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் இந்து சமய அறநிலையங்கள் தொடர்பான சட்டங்கள் உள்ளன. வெளிநாடுகளில் மலேசியாவில் 1906–ல் இயற்றப்பட்ட இந்து அறநிலையச் சட்டம் மற்றும் சிங்கப்பூரில் 1968–ல் இயற்றப்பட்ட இந்து அறநிலைய சட்டம் நடைமுறையில் உள்ளன.

## 4. சட்டம் மற்றும் நிருவாக அமைப்பு

### தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959

இந்து சமய அறநிலையத்துறைக்கு ஆணையர் தலைவராக உள்ளார். பல்வேறு நிலைகளில் குறிப்பிட்ட ஆட்சி எல்லைகள் கொண்ட அதிகாரம் பெற்ற சார்நிலை அலுவலர்கள் ஆணையரின் தலைமையின் கீழ் பணியாற்றி வருகின்றனர். இந்தச் சட்டத்தின் அதிகார வரம்பு, சமணசமய மற்றும் அறநிறுவனங்களுக்கும் பொருந்தும் வகையில் வரையறுக்கப்பட்டது.

இந்தச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களின் உரிமைகளையும், கடமைகளையும் விளக்கியுள்ளது. இந்து சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் நிருவாகத்திற்குத் தேவையான சட்டப்படியான வழிமுறைகளை வழங்கியுள்ளது. இந்து சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள்

நிதிநிலையை மேம்படுத்தவும் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் பல்வேறு வழிமுறைகளை இந்த சட்டம் தெளிவுபடுத்துகிறது.

**5. இந்து சமய நிறுவனங்கள்**

இந்து சமய அறநிலையத் துறை நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் கீழ்க்கண்டவாறு 46,159 இந்து சமய அற நிறுவனங்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | 43,631 |
| 2. | மடங்கள் | 45 |
| 3. | திருமடத்துடன் இணைந்த திருக்கோயில்கள் | 69 |
| 4. | குறிப்பிட்ட அறக்கட்டளைகள் | 1,129 |
| 5. | அறக்கட்டளைகள் | 1,263 |
| 6. | சமணத் திருக்கோயில்கள் | 22 |
| | **கூடுதல்** | **46,159** |

இத்துறை ஆளுகையின் கீழ் உள்ள வழிபாட்டுத்தலங்கள், திருமடங்கள், அறக்கட்டளைகள் ஆகிய நிறுவனங்களுக்கு அவற்றின் புவியியல்

அமைவிடத்தினை சார்ந்த அட்ச, தீர்க்க ரேகைகளின் அடிப்படையில் புவி அமைவிட குறியீடு எண் வழங்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

உப திருக்கோயில்கள், கன்னியாகுமரி தேவசம் போர்டு சார்ந்த இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள், புதுக்கோட்டை சமஸ்தானம், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம், சிவகங்கை சமஸ்தானம் மற்றும் இராமநாதபுர சமஸ்தானம் நிருவாகத்தில் உள்ள திருக்கோயில்கள் மற்றும் அறக்கட்டளைகள் மேற்கண்ட மொத்தத் திருக்கோயில்களின் எண்ணிக்கையை உயர்த்திக் காட்டுவனவாக உள்ளன.

## 5.2 இந்து சமய நிறுவனங்களின் வகைப்பாடு

இந்து சமய நிறுவனங்கள் அதன் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் பட்டியலைச் சாராத நிறுவனங்கள் என பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:–

| வ. எண் | வகைப்பாடு | ஆண்டு வருமானம் | நிறுவனங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | **பட்டியலைச் சாராத நிறுவனங்கள்** | | |
| | சட்டப்பிரிவு 49(1)–ன் கீழ் | ரூ.10,000/–க்கும் குறைவாக | 34,660 |
| 2. | **பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள்** | | |
| | சட்டப்பிரிவு 46(i) | ரூ.10,000/–லிருந்து ரூ.2 இலட்சத்திற்கு குறைவாக | 3,795 |
| | சட்டப்பிரிவு 46(ii) | ரூ.2 இலட்சத்தில் இருந்து ரூ.10 இலட்சத்திற்கு குறைவாக | 620 |
| | சட்டப்பிரிவு 46(iii) | ரூ.10 இலட்சமும் அதற்கு மேலும் | 586 |
| 3. | உபகோயில்கள் | – | 6,453 |
| 4. | மடங்கள் | – | 45 |
| **கூடுதல்** | | | **46,159** |

உப கோயில்களும், கன்னியாகுமரி தேவசம் போர்டு, புதுக்கோட்டை சமஸ்தானம், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம், சிவகங்கை சமஸ்தானம் மற்றும்

இராமநாதபுரம் சமஸ்தானம் ஆகியவற்றின் ஆளுகைக்கு உட்பட்ட திருக்கோயில்களும் மேற்கண்ட வகைப்பாட்டினுள் அடங்கும்.

**5.3 அறக்கட்டளைகள்**

திருக்கோயில்களின் பராமரிப்பிற்காகவும், பூஜைகளுக்காகவும், திருவிழாக்கள் நடத்துவதற்கும், கட்டளைகள் இறையன்பர்களால் ஏற்படுத்தப் பட்டுள்ளன. கட்டளைகள் தொடர்ந்து நடத்துவதற்கென சொத்துகள் திருக்கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்டன. முக்கிய கட்டளைகள் பின்வருமாறு: –

**ஆளவந்தார் அறக்கட்டளை**

ஆயிரம்காணி ஆளவந்தார் என அழைக்கப்படும் ஆளவந்தார் சுவாமிகள் 1814–ஆம் ஆண்டு, உயில்சாசனம் மூலம் திருவிடந்தை அருள்மிகு நித்தியகல்யாண பெருமாள் திருக்கோயிலுக்கும் மாமல்லபுரம் அருள்மிகு ஸ்தலசயன பெருமாள் திருக்கோயிலுக்கும் திருமலை திருப்பதி பிரம்மோற்சவத்தில் பாகவத ததியாராதனை கைங்கர்யம்

நடத்திவரவும் சொத்துகளை தானமாக வழங்கி கட்டளைகளை ஏற்படுத்தினார். இக்கட்டளைக்கு சொந்தமாக நஞ்சை 71.24 ஏக்கரும், புன்செய் 1057 ஏக்கரும், மானாவாரி 2.24 ஏக்கரும் உள்ளன.

**மேடைத்தளவாய் கட்டளை**

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர் காலத்தில் விஸ்வநாத நாயக்கர் ஆட்சியில் தளவாய் அரியநாதர் முதலியாரின் பங்கு அளப்பரியது ஆகும். மேற்படி வம்சாவழியினரால் மேடைத்தளவாய் கட்டளை ஏற்படுத்தப்பட்டு தற்போதைய தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள 31 கிராமங்களில் 1176.16 ஏக்கர் / சென்ட் நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளன. மேற்படி நிலங்களில் இருந்து வரும் வருவாயினைக் கொண்டு மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள 19 திருக்கோயில்களுக்கு நித்திய, வார, மாத மற்றும் வருட உற்சவங்கள் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

**பிள்ளையன் கட்டளை**

திருநெல்வேலி மாவட்டம் மற்றும் நகர் பிள்ளையன் கட்டளை திருநெல்வேலி குறுநில மன்னர் திருவடமலையப்ப பிள்ளையன் என்பவரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி பிள்ளையன் கட்டளைக்கு தற்போதைய தென்காசி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் 986.37.03 ஹெக்டேர்ஸ் நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளன. மேற்படி நிலங்களின் வருவாயினைக் கொண்டு திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் உள்ள 10 திருக்கோயில்களுக்கு நித்திய, வார, மாத மற்றும் வருட உற்சவங்கள் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

**6. உதவித் தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம்**

சட்டப்பிரிவு 92(1)–ன் கீழ் உதவித் தொகையும், சட்டப்பிரிவு 92(2)–ன் கீழ் தணிக்கைக் கட்டணமும் சமய நிறுவனங்களிடமிருந்து இந்து சமய அறநிலையத் துறையின் உதவி ஆணையர்கள் வழியாக பெறப்பட்டு

இந்து சமய அறநிலைக் கொடைகள் நிருவாக நிதிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. உதவித் தொகை மற்றும் தணிக்கை கட்டண விகிதங்கள் பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளன: –

**உதவித் தொகை சட்டப்பிரிவு 92(1)**

| வ.எண் | ஆண்டு வருமானம் | விழுக்காடு (%) |
|---|---|---|
| 1. | ரூ.5,000/–க்கும் குறைவாக உள்ளவற்றிற்கு | --- |
| 2. | ரூ.5,000/–க்கும் மேலாக, ரூ.20,000/–க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு | 4% |
| 3. | ரூ.20,000/–க்கும் மேலாக, ரூ.60,000/–க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு | 5% |
| 4. | ரூ.60,000/–க்கும் மேலாக, ரூ.2,00,000/–க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு | 6% |
| 5. | ரூ.2,00,000/–க்கும் மேலாக, ரூ.5,00,000/–க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு | 7% |

| | | |
|---|---|---|
| 6. | ரூ.5,00,000/– மற்றும் அதற்கு மேல் உள்ளவற்றிற்கு | 12% |

**தணிக்கைக் கட்டணம் சட்டப்பிரிவு 92 (2)**

| **வ.எண்.** | **ஆண்டு வருமானம்** | **விழுக்காடு (%)** |
|---|---|---|
| 1 | ரூ.5000/–க்கு குறைவாக உள்ளவற்றிற்கு | --- |
| 2 | ரூ.5000/–க்கு மேலாக ரூ.5,00,000/–க்கு மிகாமல் உள்ளவற்றிற்கு | 1.5% |
| 3 | ரூ.5,00,000/– மற்றும் அதற்கு மேல் | 4% |

**7. நிருவாகக் கட்டமைப்பு**

சமய நிறுவனங்களின் நிருவாகத்தை முறைப்படுத்தவும் மேற்பார்வையிடவும் 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் கீழ், இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாகத் தலைவராக ஆணையர் உள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறையின் பொது நிருவாகம், பணியாளரமைப்பு, சமய நிறுவனங்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துகள் மேலாண்மை, திருப்பணி, நீதிமன்ற வழக்குகள் போன்ற பல்வேறு செயல்பாடுகளில் ஆணையருக்கு உதவியாக ஆணையர் அலுவலகத்தில் பல நிலைகளில் அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

| **வ. எண்** | **பதவி** | **பணியிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | கூடுதல் ஆணையர் (நிருவாகம்) – (இ.ஆ.ப.,) | 1 |
| 2. | கூடுதல் ஆணையர் (விசாரணை) | 1 |
| 3. | கூடுதல் ஆணையர் (கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்கள்) | 1 |
| 4. | கூடுதல் ஆணையர் (பொது) | 1 |
| 5. | இணை ஆணையர் (தலைமையிடம்) | 1 |
| 6. | இணை ஆணையர் (சட்டச் சேர்மம்) | 1 |

| | | |
|---|---|---|
| 7. | இணை ஆணையர் (திருப்பணி) | 1 |
| 8. | இணை ஆணையர் (சரிபார்ப்பு) | 1 |
| 9. | உதவி ஆணையர் (சட்டச் சேர்மம்) | 1 |
| 10. | உதவி ஆணையர்/ நிருவாக அலுவலர் (கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியம்) | 1 |
| 11. | உதவி ஆணையர் | 8 |
| 12. | ஆசிரியர், 'திருக்கோயில்' திங்களிதழ் | 1 |

ஆணையர் அலுவலகத்தில் நிலங்கள் பாதுகாப்பிற்கு வருவாய்த் துறை அலுவலர்கள், திருப்பணிக்கான பொதுப்பணி / ஊரக வளர்ச்சித் துறை பொறியாளர்கள் என மாற்றுப் பணியில் பிற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

**தலைமை அலுவலகத்தின் பணியாளர் அமைப்பு – மாற்றுப் பணி அலுவலர்கள்**

| வ. எண். | பதவி | பணியிடங்களின் எண்ணிக்கை | தாய்த்துறை |
|---|---|---|---|
| 1. | தலைமைப் பொறியாளர் | 1 | பொதுப்பணித்துறை |
| 2. | கண்காணிப்புப் பொறியாளர் | 2 | பொதுப்பணித்துறை |
| 3. | தனி அலுவலர் (திருக்கோயில் நிலங்கள்) (மாவட்ட வருவாய் அலுவலர் நிலை) | 4 | வருவாய்த்துறை |
| 4. | செயற் பொறியாளர் (கட்டுமானம்) | 3 | பொதுப்பணித்துறை, நீர்வள ஆதாரத் துறை |
| 5. | செயற் பொறியாளர் (மின்) | 1 | பொதுப்பணித்துறை |
| 6. | உதவிக் கோட்டப் பொறியாளர் (கட்டுமானம்) | 6 | பொதுப்பணித் துறை, நீர்வள ஆதாரத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை |
| 7. | உதவிக் கோட்டப் பொறியாளர் (மின்) | 1 | பொதுப்பணித்துறை |

| | | | |
|---|---|---|---|
| 8. | துணை ஆட்சியர் | 4 | வருவாய்த்துறை |
| 9. | சிறப்பு வட்டாட்சியர் | 2 | வருவாய்த்துறை |
| 10. | உதவிப்பொறியாளர் (கட்டுமானம்) | 12 | தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை |
| 11. | உதவிப்பொறியாளர் (மின்) | 2 | பொதுப்பணித்துறை |
| 12. | முதுநிலை வரை தொழில் அலுவலர் | 2 | பொதுப்பணித்துறை |
| 13. | வரைதொழில் அலுவலர் | 6 | பொதுப்பணித்துறை |
| 14. | இளநிலை வரை தொழில் அலுவலர் | 6 | நீர்வள ஆதாரத் துறை |
| 15. | முதுநிலை கணக்கு அலுவலர் | 1 | கருவூலக் கணக்குத் துறை |
| 16. | உதவி கணக்கு அலுவலர் | 1 | கருவூலக் கணக்குத் துறை |
| 17. | இணை இயக்குநர்/ மக்கள் தொடர்பு அலுவலர் | 1 | செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை |
| 18. | வட்டத் துணை ஆய்வர் | 4 | நில அளவை மற்றும் நிலவரித் திட்டத்துறை |

## 8. மண்டல மற்றும் கோட்ட அளவிலான நிருவாகம்

இந்து சமய அறநிலையத்துறையின் நிருவாகம் மாநில அளவில் 20 மண்டலங்களையும் 36 கோட்டங்களையும் உள்ளடக்கியது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஓர் இணை ஆணையரும், ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஓர் உதவி ஆணையரும் நியமிக்கப்பட்டு நிருவாகம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மண்டல இணை ஆணையர்கள் மற்றும் கோட்ட உதவி ஆணையர்களின் ஆளுகை எல்லை குறித்த விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### அலுவலர்களின் ஆளுகை எல்லை

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | ஆளுகை எல்லை |
|---|---|---|---|
| 1. | இணை ஆணையர், சென்னை –1 | 1. உதவி ஆணையர், சென்னை | சென்னை மாவட்டம் திருவொற்றியூர், தண்டையார் பேட்டை, மாதவரம், பெரம்பூர், புரசைவாக்கம், எழும்பூர், அம்பத்தூர் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | அயனாவரம் ஆகிய வருவாய் வட்டங்கள் |
| 2. | இணை ஆணையர், சென்னை–2 | | சென்னை மாவட்டம் மயிலாப்பூர், அமைந்தகரை, மதுரவாயல், மாம்பலம், கிண்டி, வேளச்சேரி, ஆலந்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய வருவாய் வட்டங்கள் |
| 3. | இணை ஆணையர், காஞ்சிபுரம் | 2. உதவி ஆணையர், காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் மாவட்டம் |
| | | 3. உதவி ஆணையர், செங்கல்பட்டு | செங்கல்பட்டு மாவட்டம் |
| 4. | இணை ஆணையர், வேலூர் | 4. உதவி ஆணையர், திருவள்ளூர் | திருவள்ளூர் மாவட்டம் |
| | | 5. உதவி ஆணையர், வேலூர் | வேலூர், திருப்பத்தூர் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | இராணிப்பேட்டை மாவட்டங்கள் |
| 5. | இணை ஆணையர், திருவண்ணாமலை | 6. உதவி ஆணையர், திருவண்ணாமலை | திருவண்ணாமலை மாவட்டம் |
| | | 7. உதவி ஆணையர், கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 6. | இணை ஆணையர், சேலம் | 8. உதவி ஆணையர், சேலம் | சேலம் மாவட்டம் |
| | | 9. உதவி ஆணையர், தருமபுரி | தருமபுரி மாவட்டம் |
| 7. | இணை ஆணையர், ஈரோடு | 10. உதவி ஆணையர், ஈரோடு | ஈரோடு மாவட்டம் |
| | | 11. உதவி ஆணையர், நாமக்கல் | நாமக்கல் மாவட்டம் |
| 8. | இணை ஆணையர், கோயம்புத்தூர் | 12. உதவி ஆணையர், கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் |

| | | | |
|---|---|---|---|
| 9. | இணை ஆணையர், மயிலாடுதுறை | 13. உதவி ஆணையர், மயிலாடுதுறை | மயிலாடுதுறை மாவட்டம் |
| | | 14. உதவி ஆணையர், கும்பகோணம் | தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் மற்றும் திருவிடை மருதூர் வருவாய் வட்டங்கள் |
| 10. | இணை ஆணையர், நாகப்பட்டினம் | 15. உதவி ஆணையர், நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் மாவட்டம் |
| | | 16. உதவி ஆணையர், திருவாரூர் | திருவாரூர் மாவட்டம் |
| 11. | இணை ஆணையர், தஞ்சாவூர் | 17. உதவி ஆணையர், தஞ்சாவூர் | தஞ்சாவூர் மாவட்டம் (திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் வட்டங்கள் நீங்கலாக) |
| | | 18. உதவி ஆணையர், புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம் |

| | | | |
|---|---|---|---|
| 12. | இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி | 19. உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மாவட்டம் (இலால்குடி மற்றும் துறையூர் வருவாய் வட்டங்கள் நீங்கலாக) |
| | | 20. உதவி ஆணையர், பெரம்பலூர் | பெரம்பலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இலால்குடி மற்றும் துறையூர் வருவாய் வட்டங்கள் |
| 13. | இணை ஆணையர், திருப்பூர் | 21. உதவி ஆணையர், திருப்பூர் | திருப்பூர் மாவட்டம் |
| | | 22. உதவி ஆணையர், கரூர் | கரூர் மாவட்டம் |
| 14. | இணை ஆணையர், திண்டுக்கல் | 23. உதவி ஆணையர், திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம் |
| | | 24. உதவி ஆணையர், தேனி | தேனி மாவட்டம் மற்றும் மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி மற்றும் பேரையூர் |

| | | | |
|---|---|---|---|
| | | | வருவாய் வட்டங்கள் |
| 15. | இணை ஆணையர், சிவகங்கை | 25. உதவி ஆணையர், பரமக்குடி | இராமநாதபுரம் மாவட்டம் |
| | | 26. உதவி ஆணையர், சிவகங்கை | சிவகங்கை மாவட்டம் |
| 16. | இணை ஆணையர், மதுரை | 27. உதவி ஆணையர், மதுரை | மதுரை மாவட்டம் (உசிலம்பட்டி மற்றும் பேரையூர் வருவாய் வட்டங்கள் நீங்கலாக) |
| | | 28. உதவி ஆணையர், விருதுநகர் | விருதுநகர் மாவட்டம் |
| 17. | இணை ஆணையர், திருநெல்வேலி | 29. உதவி ஆணையர், திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம் |
| | | 30. உதவி ஆணையர், நாகர்கோயில் | கன்னியாகுமரி மாவட்டம் |

| | | | |
|---|---|---|---|
| 18. | இணை ஆணையர், தூத்துக்குடி | 31. உதவி ஆணையர், தூத்துக்குடி | தூத்துக்குடி மாவட்டம் |
| | | 32. உதவி ஆணையர், தென்காசி | தென்காசி மாவட்டம் |
| 19. | இணை ஆணையர், விழுப்புரம் | 33. உதவி ஆணையர், விழுப்புரம் | விழுப்புரம் மாவட்டம் |
| | | 34. உதவி ஆணையர், கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி மாவட்டம் |
| 20. | இணை ஆணையர், கடலூர் | 35. உதவி ஆணையர், கடலூர் | கடலூர் மாவட்டம் |
| | | 36. உதவி ஆணையர், அரியலூர் | அரியலூர் மாவட்டம் |

## 8.2 இணை ஆணையரின் பணிகள்

இந்து சமய அறநிலையத் துறையில் மண்டல அலுவலராக இணை ஆணையர் உள்ளார். சட்டப்பிரிவு 46-ன் கீழ் வெளியிடப்பட்ட இந்து

சமய அறநிறுவனங்கள் இணை ஆணையரின் ஆளுகையின் கீழ் உள்ளன. சட்டப்பிரிவு 46(i)–ன் கீழ் வெளியிடப்பட்ட சமய நிறுவனங்களுக்குப் பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமிக்கவும், சமய நிறுவனங்களின் வரவு செலவுத் திட்டத்தினை அங்கீகரிக்கவும் இணை ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டப்பிரிவு 63–ன் கீழ் வழங்கப்பட்டுள்ள வரம்புகளின் அடிப்படையில் மனுக்களை விசாரித்து முடிவு எடுக்கவும், சட்டப்பிரிவு 64–ன் கீழ் எந்தவொரு சமய நிறுவனத்திற்கும் நிருவாகத் திட்டம் வகுக்கவும், சட்டப்பிரிவு 21A–ன் கீழ் உதவி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைச் சீராய்வு செய்திடவும் இணை ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தவிரவும், சட்டப்பிரிவு 46(i)–ன் கீழ் பிரசுரம் செய்யப்பட்ட சமய நிறுவனங்களில் தவறிழைக்கும் அறங்காவலர்களை சட்டப்பிரிவு 53–ன் கீழ் பணியிடை

நீக்கம், பணிநீக்கம் அல்லது பணியறவு செய்ய இணை ஆணையருக்கு அதிகாரம் உள்ளது.

சட்டப்பிரிவு 54–ன் கீழ் பரம்பரை அறங்காவலர் பதவியில் ஏற்படும் காலியிடத்திற்கு வாரிசுதாரரை அங்கீகரித்துப் பதிவு செய்து கொள்ளவும், சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டடங்களில் ஏற்படும் ஆக்கிரமிப்புகளைச் சட்டப்பிரிவு 78–ன் கீழ் விசாரித்து வெளியேற்றுவதற்கு உத்தரவிடவும் இணை ஆணையருக்கு அதிகாரம் உள்ளது. இவை தவிர, அவ்வப்போது ஆணையரால் ஒதுக்கப்படும் பிற பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பும் இணை ஆணையருக்கு உள்ளது.

**8.3 துணை ஆணையர் / சரிபார்ப்பு அலுவலரின் பணிகள்**

சமய நிறுவனங்களின் விலையுயர்ந்த ஆபரணங்கள் மற்றும் இதர விலையுயர்ந்த பொருட்கள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகளைச் சரிபார்த்திட

தலைமையிடத்தில் இணை ஆணையர் நிலையில் ஒரு சரிபார்ப்பு அலுவலர் உள்ளார். சமய நிறுவனங்களின் விலையுயர்ந்த ஆபரணங்கள் மற்றும் இதர விலையுயர்ந்த பொருட்களைச் சரிபார்த்து மதிப்பீடு அறிக்கை தயாரித்திட ஏதுவாக துணை ஆணையர் நிலையில் ஒரு சரிபார்ப்பு அலுவலரை மண்டல இணை ஆணையர் கொண்டுள்ளார். மேற்கண்ட வழிமுறையில், தங்கம், வெள்ளி மற்றும் வைர மதிப்பீட்டு நிபுணர் ஒருவரும் இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் ஒருவரும் அவர்களுக்கு உதவுகின்றனர். அவர்களுக்கு ஒதுக்கப்படும் சிறப்பு பணிகளுக்கும் அவர்கள் பொறுப்புடையவர்கள் ஆவர்.

### 8.4 உதவி ஆணையரின் பணிகள்

இந்து சமய அறநிலையத் துறையில் உதவி ஆணையர் என்பவர் ஒரு மாவட்ட நிலை அலுவலராவார். சட்டப்பிரிவு 49(1)–ன் கீழ் பட்டியலைச் சேராத இந்து சமய நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரமும், வரவு செலவுத் திட்ட அங்கீகாரம்

மற்றும் பரம்பரை அல்லாத அறங்காவலர் நியமனம் குறித்து ஆணை பிறப்பிக்கும் அதிகாரமும், சமய நிறுவனங்கள் தொடர்பாக புகார்கள் வரப்பெறின் அவற்றின் மீது விசாரணை மேற்கொண்டு துறையின் ஆளுகையின்கீழ் கொண்டுவர முதல் அறிக்கை அளிக்கும் அதிகாரமும் உதவி ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளன.

சட்டப்பிரிவு 92-ன் கீழ் உதவித் தொகை மற்றும் தணிக்கைக் கட்டணங்களை வசூல் செய்வதற்காக சமய நிறுவனங்களை, உதவி ஆணையர் மதிப்பீடு செய்து, அதனை ஆணையருக்கு அறிக்கையாக வழங்குவார். மேலும், அவர் சட்டப்பிரிவுகள் 93 மற்றும் 102-ன்கீழ் சட்ட நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட செலவுத் தொகைகளை வசூல் செய்து, தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதிக் கணக்கில் செலுத்திடவும் வகை செய்வார். ஆணையரால் அவ்வப்போது ஒதுக்கப்படும் பிற

பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய பொறுப்பும் உதவி ஆணையருக்கு உள்ளது.

### 8.5 ஆய்வரின் பணிகள்

இந்து சமய அறநிலையத்துறையில் பணிபுரியும் மண்டல இணை ஆணையர்கள் மற்றும் கோட்ட உதவி ஆணையர்கள் ஆகியோருக்கு உதவி புரிய வட்ட அளவில் 264 ஆய்வர் பணியிடங்கள், துறை சார்ந்த வழக்குகளைக் கையாள 29 வழக்கு ஆய்வர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

சமய நிறுவனங்கள் தொடர்பாக வரப்பெறும் புகார்கள் மீது விசாரணை மேற்கொண்டு, துறையின் ஆளுகையின் கீழ் கொண்டுவர முதல் அறிக்கையை உதவி ஆணையருக்கு அளிப்பதும், சமய நிறுவனங்களைக் காலமுறைப்படி ஆய்வு மேற்கொள்வதும், உதவித் தொகை, தணிக்கைக் கட்டணம், பரிசீலனைக் கட்டணம் மற்றும் நீதிமன்றங்களால் விதிக்கப்படும் செலவு தொகைகளை வசூல் செய்வதும் ஆய்வரின் பணிகளாகும்.

சமய நிறுவனங்களால் தயாரித்து அளிக்கப்பட்ட சொத்துப் பதிவேடு, திட்டப் பதிவேடு மற்றும் மரப்பதிவேடு ஆகியவற்றைப் பெற்று, சரிபார்த்து உதவி ஆணையரின் ஒப்புதலுக்கு அளித்தல், இத்துறை அலுவலர்களிடமிருந்து வரப்பெறும் அனைத்து மனுக்கள் மற்றும் குறிப்புகளின் மீது விசாரணை மேற்கொண்டு அறிக்கை அளித்தல், அறங்காவலர்கள் நியமனத்திற்கான விண்ணப்பங்களை விசாரித்து சரிபார்த்து அறிக்கை அனுப்புதல், ஏலம், ஒப்பந்தப்புள்ளி திறப்பு, உண்டியல் திறப்பு போன்றவற்றைக் கண்காணித்தல், துறை ஆளுகையின் கீழ் உள்ள சமய நிறுவனங்களுக்கு உதவித் தொகை நிர்ணயம் செய்வதற்காக அவற்றின் வரவு செலவு பட்டியல்களைச் சரிபார்த்து அறிக்கை அளித்தல், உயர் அதிகாரிகளால் அவ்வப்போது ஒதுக்கப்படும் பிற பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியனவும் ஆய்வரின் பணிகளாகும்.

**9. புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவு**

திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான மதிப்பீடுகளைக் கூர்ந்தாய்வு செய்தல், பணிகளை மேற்பார்வையிடல், அளவீடுகளைக் குறித்தல், குறிக்கப்பட்ட அளவீடுகளைச் சரிபார்த்தல் போன்ற பணிகளைப் பொறியாளர்கள் மற்றும் வரைதொழில் அலுவலர்கள் மேற்கொள்கின்றனர். இதற்காக இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் தலைமைப் பொறியாளரை முதன்மையாக கொண்டு 322 பணியிடங்கள் கொண்ட திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பாதுகாத்தல் பணிப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தலைமைப் பொறியாளர் | 1 |
| 2 | கண்காணிப்புப் பொறியாளர் | 2 |
| 3 | செயற் பொறியாளர் (கட்டுமானம்) | 23 |
| 4 | செயற் பொறியாளர் (மின்) | 3 |

| | | |
|---|---|---|
| 5 | உதவி செயற்பொறியாளர் / உதவி கோட்டப் பொறியாளர் (கட்டுமானம்) | 44 |
| 6 | உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) | 7 |
| 7 | உதவி பொறியாளர் (கட்டுமானம்) | 88 |
| 8 | உதவி பொறியாளர் (மின்) | 14 |
| 9 | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 2 |
| 10 | வரை தொழில் அலுவலர் | 26 |
| 11 | இளநிலை வரைதொழில் அலுவலர் | 42 |
| 12 | தலைமை ஸ்தபதி (செயற் பொறியாளர் நிலையில்) | 1 |
| 13 | மண்டல ஸ்தபதி (உதவி செயற்பொறியாளர் நிலையில்) | 21 |
| 14 | உதவி ஸ்தபதி (உதவி பொறியாளர் நிலையில்) | 38 |
| 15 | தட்டச்சர் | 6 |
| 16 | ஓட்டுநர் | 2 |
| 17 | அலுவலக உதவியாளர் | 2 |
| **கூடுதல்** | | **322** |

(i) திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பாதுகாத்தல் பணிப்பிரிவு பணியிடங்களுக்கு என தனியே பணி

விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பணி விதிகள் ஏற்படுத்தப்பட்டதன் தொடர்ச்சியாக, இந்தப் பணித் தொகுதியில் நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டிய பதவிகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்படும்.

(ii) பாரம்பரியமிக்க திருக்கோயில்களைப் புனரமைப்பு மற்றும் பாதுகாத்தல் பணி மேற்கொள்ளும் போது ஆலோசனை வழங்குவதற்காக இந்திய தொல்லியல் துறையில் அலுவலர்களாகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களில் 18 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 9.2 துறை அலுவலர்கள் பயன்பாட்டிற்காக புதிய ஊர்திகள் கொள்முதல்

2021–2022–ஆம் நிதி ஆண்டிற்கான சட்டப்பேரவை அறிவிப்பின்படி, ரூ.8 கோடி செலவில் 108 ஊர்திகள் கொள்முதல் செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கரங்களால் அலுவலர்களுக்கு துறைபணிகளில் மேம்பாடான

செயல்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டது.

### 10. திருக்கோயில் நிருவாகம்

ஒவ்வொரு சமய அறநிறுவனங்களும் அதன் நிருவாக அடிப்படையில் தனித்தன்மை கொண்டதாக விளங்குவதோடு அறங்காவலர்களால் நிருவகிக்கப்பட்டு அதற்கான பணியாளர்களை நியமித்துக் கொள்ளும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன எனினும், இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 45(1) மற்றும் அப்பிரிவின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி செயல் அலுவலரை நியமிக்கும் அதிகாரம் ஆணையருக்கு உள்ளது.

### 10.2 செயல் அலுவலர்கள்

திருக்கோயில்களின் வருமானம், அசையும் மற்றும் அசையாச் சொத்துகள், அவற்றின் முக்கியத்துவம், பணிச்சுமை மற்றும் இதர பணிகளைக் கருத்திற்கொண்டு திருக்கோயில்களின் நிருவாகத்தைச் செம்மையுடன் நிருவகிக்க 668

செயல் அலுவலர் பணியிடங்கள் பல்வேறு நிலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**செயல் அலுவலர்கள் வகைப்பாடு**

| **வ.எண்.** | **செயல் அலுவலர் நிலை** | **பணியிடங்கள்** |
|---|---|---|
| 1. | இணைஆணையர் | 11 |
| 2. | துணைஆணையர் | 9 |
| 3. | உதவி ஆணையர் | 27 |
| 4. | செயல்அலுவலர்–நிலை 1 | 100 |
| 5. | செயல்அலுவலர்–நிலை 2 | 117 |
| 6. | செயல்அலுவலர்–நிலை 3 | 250 |
| 7. | செயல்அலுவலர்–நிலை 4 | 154 |
| **கூடுதல்** | | **668** |

## 10.3 திருக்கோயில்களில் பொறியியல் பிரிவு

முக்கிய திருக்கோயில்களில் கோயில்களைப் பழமை மாறாமல் பாதுகாத்தல், பழுதுபார்த்தல், புதுப்பித்தல், சீரமைத்தல் மற்றும் புதிய கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கென பொறியியல் பிரிவு தனியே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 11. திருமடங்கள்

இந்து சமய அறநிலையத் துறையின் மேற்பார்வையின் கீழ் 56 திருமடங்கள் இருந்து வந்துள்ளன. தற்போது 45 திருமடங்கள் மட்டுமே உள்ளன. மீதமுள்ள 11 திருமடங்கள் தங்களுடைய தனித்தன்மையை இழந்துவிட்ட காரணத்தால் அவை திருக்கோயில்கள் வரிசையில் சேர்க்கப்பட்டுள்ளன. திருமடங்களுள் சைவ நெறியை வளர்க்கும் பணியில் மதுரை ஆதீனம் என்றழைக்கப்படும் திருஞானசம்பந்தர் சுவாமிகள் மடம், திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரம் ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், பேரூர் ஆதீனம், மயிலம் பொம்மபுர ஆதீனம் மற்றும் கோயம்புத்தூர் சிரவை ஆதீனம் போன்றவையும், வைணவ நெறியை வளர்க்கும் பணியில் அகோபில மடம், வானமாமலை மடம், திருக்குருங்குடி மடம், எம்பார் ஜீயர் மடம் போன்றவையும், அத்வைத நெறியை வளர்க்கும் பணியில் காஞ்சிபுரம் சங்கர மடமும் தொன்று தொட்டுத் தொண்டாற்றி வருகின்றன.

இறை வழிபாட்டுக்குரிய புகழ்மிக்கதொரு மொழியாக தமிழ் மொழியினை மேம்படுத்தியதில் திருமடங்களின் பங்களிப்பு மதிப்பிட முடியாததாகும். தலைமுறை தலைமுறையாகச் சங்க இலக்கியத்தைப் படித்துப் பயன்பெறுவதற்கு ஏதுவாகத் திருமடங்கள் தமிழ் ஓலைச் சுவடிகளைத் தளரா ஊக்கத்துடன் பாதுகாத்து வந்துள்ளனர். உலகிலேயே மிகப் பழமையான மொழியாகிய தமிழின் ஓலைச் சுவடிகளைப் பேணிப் பாதுகாப்பதன் மூலம் சமயத்தைப் பின்பற்றுவோருடைய பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் திருமடங்கள் முக்கியப் பங்காற்றி வருகின்றன.

மேலும், திருமடங்கள் சமயத்தைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டு நற்பண்புகளையும் நல்லொழுக்கத்தையும் மக்கள் மனதில் விதைத்து ஒரு பொறுப்புள்ள சமுதாயத்திற்கு வழிவகுக்கின்றன. திருமடங்கள் மற்ற கல்வி நிறுவனங்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் உதாரணமாகவும் விளங்கக்கூடிய கல்வி நிறுவனங்களை நடத்தி வருகின்றன. அக்கல்வி

நிறுவனங்கள் சிறந்த கல்வியாளர்கள் மற்றும் சிறந்த பண்பாளர்களை உருவாக்க உதவியாக உள்ளன. சிறந்த கல்வியாளர்களை வளர்ப்பதிலும் பண்பட்ட எதிர்காலச் சந்ததிகளை உருவாக்குவதிலும் திருமடங்கள் ஆற்றும் பணி அளவிட முடியாதது ஆகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் உள்ள ஆலோசனைக் குழுவில் உறுப்பினர்களாக மடாதிபதிகளான தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், ஸ்ரீமத் வராக மகா தேசிகன், சீர்வளர் சீர் அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், முனைவர் திருக்கயிலாய பரம்பரை பேரூர் ஆதீனம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாச்சல அடிகளார் முதலானவர்கள் இடம் பெற்று திருக்கோயில்களின் மேம்பாட்டிற்கும் மேலாண்மைக்கும் மதிப்புமிக்க ஆலோசனைகளை வழங்கி முக்கியப் பங்காற்றி வருகின்றனர்.

**12. இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கை**

இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தில் பிரிவு 87(3)–ன் கீழ் ஆண்டு வருமானம் ரூபாய் 5 இலட்சத்திற்கும் மிகுதியாக பெறும் திருக்கோயில்கள் கணக்குகளை உடனிகழ் (concurrent) தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், ரூ.1000–த்திற்கும் அதிகமாக வருமானம் பெறும் திருக்கோயில்களுக்கு ஆண்டிற்கு ஒருமுறை தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அதற்கான தணிக்கை அறிக்கைகள் சட்டப்பிரிவு 88–ன் கீழ் உரிய அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கு அனுப்பப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தணிக்கைப் பணிக்காகத் திருக்கோயிலின் உதவித் தொகை நிர்ணய வருவாயிலிருந்து சட்டப் பிரிவு 92(2)–ன்படி 1.5 விழுக்காடு முதல் 4 விழுக்காடு வரை தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

தணிக்கையாளர்கள் சுதந்திரமாகத் தணிக்கை மேற்கொள்ளும் பொருட்டும், விரைவாகத் தணிக்கைத் தடைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டும், இந்து சமய அறநிலையத் துறையிலிருந்து தணிக்கைப் பிரிவைப் பிரித்து நிதித்துறையின் கீழ் தனித்து செயல்படுவதற்கு, அரசாணை (நிலை) எண்.181, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள்.25.11.2021-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டவாறு, இந்து சமய அறநிலையத்துறையிலிருந்து தணிக்கைப் பிரிவு பிரிக்கப்பட்டு நிதித்துறையின் கீழ் அதன் இயக்குனர் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

தணிக்கை மறுப்புகளுக்கு தீர்வு காணும் பொருட்டு, உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை மேற்கொள்ளுவது போல் இத்துறையிலும் தணிக்கைத் தடைகளில் தீர்வு காணும் பொருட்டு தணிக்கைக் குழுக்களில் 3 நிலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1959, சட்டப்பிரிவு 87-ன் கீழ்

இயற்றப்பட்டுள்ள விதிகளில் இதற்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**13. ஆலோசனைக் குழு**

தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959–ல் இந்து சமய நிறுவனங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க ஆலோசனைக் குழு அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இக்குழு, அரசாணை (நிலை) எண்.04, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 06.01.2022 மற்றும் அரசாணை (நிலை) எண்.287, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 01.08.2023 –இல் அமைக்கப்பட்டுள்ளது,

இக்குழுவில் தற்போது இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு:–

**அலுவல்சார் உறுப்பினர்கள்**

| வ. எண் | பதவி | பெயர் |
|---|---|---|
| 1 | தலைவர் | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் |

| | | |
|---|---|---|
| 2 | துணைத் தலைவர் | மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் |
| 3 | உறுப்பினர் | சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ. ஆ. ப. |
| 4 | உறுப்பினர்– செயலர் | இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு.க.வீ.முரளீதரன், இ.ஆ.ப. |

**அலுவல் சாரா உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| 1 | தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் |
| 2 | ஸ்ரீமத் வராக மகா தேசிகன் |
| 3 | சீர்வளர் சீர் அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் |
| 4 | முனைவர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாச்சல அடிகளார் |
| 5 | நீதியரசர் திரு.T. மதிவாணன் (ஓய்வு) |
| 6 | திரு. சுகி சிவம் |
| 7 | திரு. ஹரிதியாகராஜன் |
| 8 | முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார் |
| 9 | திரு. ந. இராமசுப்பிரமணியன் |
| 10 | திரு. தரணிபதி ராஜ்குமார் |

| | |
|---|---|
| 11 | திரு. மல்லிகார்ஜுன் சந்தான கிருஷ்ணன் |
| 12 | திருமதி. ஸ்ரீமதி சிவசங்கர் |
| 13 | திருமதி. தேச மங்கையர்க்கரசி |

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 20.01.2022 அன்று நடைபெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் 9 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.02.2024 அன்று நடைபெற்ற இரண்டாவது ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் 10 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**14. மாவட்டக் குழு**

இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 பிரிவு 7A–ன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்ட எல்லைக்குட்பட்ட இந்து சமய அறநிறுவனங்களுக்கு பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்ய தகுதியுள்ளோர் பட்டியல் தயாரிக்க மூன்றுக்கு குறையாத ஐந்துக்கு

மிகாத அலுவல்சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட குழு அரசால் அமைக்கப்படும். சட்ட விதிகளின்படி, சமய நிறுவனங்களுக்கான பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்களை நியமனம் செய்வதற்காக தகுதிவாய்ந்தோரின் பெயர்கள் அடங்கிய ஒரு பட்டியலை இக்குழு தயாரிக்கும். மாவட்டக் குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளாகும். அவ்வகையில் 38 வருவாய் மாவட்டங்களுக்கும் மாவட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**15. மாநிலக் குழு**

இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 பிரிவு 46(iii)–ன் கீழ் உள்ள ரூபாய் 10 இலட்சம் மற்றும் அதற்கு மேல் ஆண்டு வருமானம் வரப்பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு ஐந்து பரம்பரை முறை வழிசாரா அறங்காவலர்கள் கொண்ட அறங்காவலர் குழுவை மாநிலக் குழுவின்

பரிந்துரையின் அடிப்படையில் அமைத்திடும் அதிகாரம் அரசிடம் உள்ளது.

இச்சட்டப்பிரிவின்படி, திருக்கோயில்களுக்கு பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர் நியமனம் செய்ய வரப்பெற்ற விண்ணப்பதாரர்களில் இருந்து அறங்காவலர்களை தெரிவு செய்து, பெயர்பட்டியல் அளித்திட, அரசாணை (நிலை) எண்.49, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி3.1)துறை, நாள்.30.3.2022–ல் குன்றக்குடி ஆதீனம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களின் தலைமையின் கீழ் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**16. அறங்காவலர்கள் நியமனம்**

இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 பிரிவு 47–ன்படி இந்து சமய அறநிறுவனங்களை நிருவகிக்க பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் ஒவ்வொரு அறங்காவலர் குழுவிலும் மூன்று நபர்களுக்கு

குறையாமலும் ஐந்து நபர்களுக்கு மிகாமலும் உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும். இக்குழுவில் பட்டியல் இனத்தவர் அல்லது பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த உறுப்பினர் ஒருவரும் பெண் உறுப்பினர் ஒருவரும் இடம்பெற வேண்டும். இக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டாண்டுகள் ஆகும். இதுவரை 6814 திருக்கோயில்களுக்கு அறங்காவலர் குழுக்கள் நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**16.2 அறங்காவலர் நியமனத் தகுதிகள்**

இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 பிரிவு 25A–ன் கீழ் இந்து சமய அறநிறுவனங்களில் அறங்காவலராக நியமனம் செய்யப்படுவதற்கு கீழ்க்காணும் தகுதி வரையறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:–

அ) கடவுள் நம்பிக்கை உடையவராக இருத்தல் வேண்டும்;

ஆ) நன்னடத்தை மற்றும் நற்பெயர் கொண்டவராக இருத்தல் வேண்டும். மேலும், சமய நிறுவனம் அல்லது அறக்கட்டளை அமைந்துள்ள பகுதியில் மரியாதைக்குரியவராக இருத்தல் வேண்டும்;

இ) சமய நிறுவனம் அல்லது அறக்கட்டளை நிருவாக பணியினைச் செய்வதற்கு தேவையான நேரத்தையும் ஆர்வத்தையும் பெற்றிருப்பவராக இருத்தல் வேண்டும்.

**16.3 அறங்காவலர்களை நியமிப்பதற்கான அதிகாரம்**

இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 பிரிவு 49(1)–ன்படி, ரூ.10,000/–க்கும் குறைவாக ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு, மாவட்டக் குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் மூன்று பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர் குழுவை அமைத்திட உதவி ஆணையர் அதிகாரம் பெற்றவர் ஆவார்.

இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 பிரிவு 46(i)–ன்கீழ் உள்ள, ரூ.10,000/–க்கு

குறையாமல் ரூபாய் 2 இலட்சத்திற்கு மிகாமல் ஆண்டு வருமானம் வரப்பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு, மாவட்டக் குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் மூன்று பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர் குழுவை அமைத்திட இணை ஆணையர் அதிகாரம் பெற்றவர் ஆவார்.

இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 பிரிவு 46(ii)–ன்கீழ் உள்ள, ரூபாய் 2 இலட்சத்திற்கு குறையாமல் ரூபாய் 10 இலட்சத்திற்கு மிகாமல் ஆண்டு வருமானம் வரப்பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு, மாவட்டக் குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் மூன்று பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர் குழுவை அமைத்திட ஆணையர் அதிகாரம் பெற்றவர் ஆவார்.

ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையரால் நியமிக்கப்பட்ட நபர்களுக்கும் கூடுதலாக தகுதிவாய்ந்த இரண்டு நபர்களை

அறங்காவலர் குழுவின் உறுப்பினர்களாக அரசு நியமிக்கலாம்.

### 16.4 தக்கார் நியமனம்

அறங்காவலர் குழுவின் பதவிக்காலம் முடிந்த பின்னர் அல்லது தற்காலிகமாக காலியிடம் ஏற்படும் நிலையில் அரசு, ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அதிகார வரம்பிற்குட்பட்டு அடுத்த அறங்காவலர் குழு நியமனம் செய்யப்படும் வரை, திருக்கோயிலின் அறங்காவலருக்குரிய கடமைகளை செய்திட இடைக்கால ஏற்பாடாக தகுதியான ஒருவர் தக்காராக நியமனம் செய்யப்படுவார்.

## 17. இந்து சமய அறநிறுவனங்களின் அசையாச் சொத்துகளின் நிருவாகம் நில விவரங்கள்

திருக்கோயில்கள் மற்றும் அறநிறுவனங்கள் மிகப் பெரிய பரப்புக் கொண்ட வேளாண் நிலங்கள், மனைகள் மற்றும் கட்டடங்களைச் சொந்தமாகக் கொண்டுள்ளன.

திருக்கோயில் நிலங்களின் வகைப்பாடு மற்றும் பரப்பளவு :–

| நிலத்தின் வகைப்பாடு | திருக்கோயில் நிலங்கள் | திருமட நிலங்கள் | மொத்த நிலங்கள் |
|---|---|---|---|
| | ஏக்கர் இலட்சத்தில் | | |
| நன்செய் | 1.83 | 0.21 | 2.04 |
| புன்செய் | 2.18 | 0.35 | 2.53 |
| மானாவாரி | 0.21 | இல்லை | 0.21 |
| **கூடுதல்** | 4.22 | 0.56 | 4.78 ☆ |

☆ திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை சரிபார்ப்பு மற்றும் ஒப்புநோக்குதல் செய்யும் பொருட்டு தமிழ்நாடு முழுவதும் குழுக்கள் அமைக்கப்பட்டு நில அளவை பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நில விவரங்கள் வருவாய் துறையின் "தமிழ்நிலம்" வலை தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. இப்பதிவுகளோடு ஒப்புநோக்குதல் மற்றும் சரிபார்த்தல் பணியானது தற்போது நடைபெற்று வருகிறது. அதில், மேற்சொல்லப்பட்ட மொத்தப் பரப்பளவு நிலங்களில்

3.43 இலட்சம் ஏக்கர் பரப்பளவு நிலங்கள் வருவாய்த்துறை ஆவணங்களோடு முழுமையாக ஒத்துப்போகும் இனங்கள் (fully matched items) என உறுதி செய்யப்பட்டு இணையதளத்தில் பொதுமக்கள் பார்வைகாக வெளியிடப்பட்டுள்ளது.

திருக்கோயில் நில விவரங்களை ஒப்புநோக்கும் பணியில், பகுதியாக ஒத்துப்போகும் நிலங்கள் (Partially matched) குறித்தும், அதுபோல் வருவாய்த் துறையின் தமிழ்நிலப் பதிவில் இல்லாத புதிய இனங்கள் குறித்தும் முழுமையாக ஒத்துப்போகும் இனங்களாக (Fully Matched) மாற்றுவதற்கு தொடர்புடைய சமய நிறுவனங்களால் வருவாய் துறையின் அலுவலர்கள் முன் மேல்முறையீடு செய்யப்பட்டு வருகிறது.

இந்து சமய அறநிலையத்துறையின் நிலங்கள் தொடர்பான தரவுகளுடன் (data base) வருவாய்த் துறையின் "தமிழ் நிலம்" வலைதள தரவுகளுடன் ஒப்பு நோக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இந்த ஒப்பு நோக்குதல் மூலமாக அறியப்படும் விவரங்கள்

இந்து சமய அறநிலையத்துறை தரவு தளத்தில் சரிபார்த்துப் பதிவேற்றப்படும்.

இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான அசையா சொத்துகளைப் பாதுகாத்தல், ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் ஆகியவை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு, இத்துறையின் ஒவ்வொரு உதவி ஆணையர் பிரிவிலும் ஒரு தனி வட்டாட்சியர் வீதம் 36 தனி வட்டாட்சியர்களும் மற்றும் தலைமையிடத்தில் இரு தனி வட்டாட்சியர்களும் இப்பணிக்காக வருவாய்த்துறை மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்த அலுவலர்கள் திருக்கோயில் நிலங்களைப் பாதுகாத்தல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், தனியார் வசமுள்ள திருக்கோயில் நிலங்களை மீட்டெடுத்தல் போன்ற பணிகளில் உதவிபுரிவார்கள். இவ்வலுவலர்கள் குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகைத் தொகை வசூல் செய்தல், உரிமம் பெற்ற நில அளவையர்கள் பணிகளை

மேற்பார்வை செய்தல் போன்ற பணிகளை கண்காணிப்பார்கள். இவ்வலுவலர்கள் ஆணையர் அலுவலகத்தில் பணியாற்றி வரும் 4 மாவட்ட வருவாய் அலுவலர்களின் கண்காணிப்பின் கீழ் பணியாற்றுகிறார்கள்.

மேலும், இந்து சமய அறநிறுவனங்களுக்கு சொந்தமான 22,529 கட்டடங்களும், 75,482 மனைகளும் பிற விவசாய நிலங்களும் குத்தகை/ வாடகைக்கு விடப்பட்டுள்ளன. 01.04.2023 முதல் 31.03.2024 வரையிலான காலத்திற்கு மட்டும் திருக்கோயில்களுக்குச் சொந்தமான மேற்கண்ட அசையா சொத்துகளிலிருந்து, ரூபாய்.310.32 கோடி வருமானமாக ஈட்டப் பெற்றுள்ளது.

**17.2 நியாய வாடகை நிர்ணயம்**

இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம் 1959, பிரிவு 34A திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் மனைகளுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்ய வழிவகை செய்கிறது. மண்டல

இணை ஆணையர், திருக்கோயில் செயல் அலுவலர்/ அறங்காவலர்/ அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் பதிவுத்துறை மாவட்டப் பதிவாளர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழுவால் அறநிறுவனங்களுக்குச் சொந்தமான வணிகம் மற்றும் குடியிருப்புகளாகப் பயன்படும் கட்டடங்கள் மற்றும் மனைகளுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

**17.3 வருவாய் நீதிமன்றங்கள்**

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர், மதுரை, இலால்குடி, மன்னார்குடி, நாகப்பட்டினம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. கும்பகோணம், சேலம் மற்றும் தென்காசி ஆகிய இடங்களில் வருவாய் நீதிமன்றங்களின் முகாம் இயங்கி வருகின்றன.

இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான வேளாண் நிலங்களுக்கு வரவேண்டிய

குத்தகை நிலுவைத் தொகைகளை வசூல் செய்யவும், வேளாண் நிலங்களுக்கு குத்தகைத் தொகை நிர்ணயிக்கவும், குத்தகை செலுத்த மறுக்கும் குத்தகைதாரர்களை வெளியேற்றவும், 1961–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது பொறுப்புரிமை (வேளாண்மை நிலங்களின் ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் [Tamil Nadu Public Trusts (Regulation and Administration of Agricultural Lands)] இந்து சமய அறநிறுவனங்களால் தனித் துணை ஆட்சியர் தலைமையிலான வருவாய் நீதிமன்றங்களில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு அவை தீர்வு செய்யப்படுகின்றன.

வருவாய் நீதிமன்றங்களின் முன்பாக 31.03.2024 அன்று வரை நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை மொத்தம் 4108 ஆகும். இவற்றில் 2113 வழக்குகளில் தீர்வு காணப்பட்டுள்ளன. ரூபாய் 692.30 இலட்சம் குத்தகை நிலுவைத் தொகைக்குத் தீர்ப்பாணை பெறப்பட்டு, இதுவரை, தொகை ரூபாய் 327.42 இலட்சம் வசூல்

செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலுவைத் தொகையினை வசூலிக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**17.4 நிலங்களை மீட்டல்**

இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்கள், நிலவுடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்ட நடவடிக்கையின்போது, தனி நபர் பெயரில் தவறுதலாகப் பட்டா மாற்றம் செய்யப்பட்ட இனங்களைக் கண்டறிந்து திருக்கோயில் நிருவாகத்தால் சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்து உத்தரவு பெற்று நிலங்கள் மீட்கப்படுகிறது. இவ்வரசு பொறுப்பேற்ற 07.05.2021 முதல் 31.03.2024 வரையிலான காலத்தில் 542 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 4840.92 ஏக்கர் நிலங்கள் திருக்கோயில் பெயரில் மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இந்து சமய அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்கள், வருவாய்த் துறையில் கணினி சிட்டா தயாரிக்கும்போது தவறுதலாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட இனங்களைக் கண்டறிந்து திருக்கோயில் நிருவாகத்தால் சம்பந்தப்பட்ட வருவாய்க் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்து உத்தரவு பெற்று, 31.03.2024 வரையில் 641 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 4043.38 ஏக்கர் நிலங்கள் திருக்கோயில் பெயரில் மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

## 17.5 நில நிருவாக மேம்பாடு

இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பாதுகாத்தல், ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து மீட்டெடுத்தல், குத்தகை மற்றும் குத்தகை நிலுவைகளை வசூல் செய்தல் மற்றும் வருவாய்த் துறையுடன் ஒருங்கிணைந்து செயல்படும் பொருட்டு, அரசுப்பணியிலிருந்து ஓய்வுபெற்ற, 4 துணை

ஆட்சியர்கள், 14 வட்டாட்சியர்கள், 6 நில அளவையர்கள், ஒரு வருவாய் ஆய்வாளர் மற்றும் 4 கிராம நிருவாக அலுவலர்கள் தொகுப்பூதிய அடிப்படையில் இத்துறையின் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**17.6 ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்**

07.05.2021 முதல் 31.03.2024 வரையிலான காலத்தில் 740 திருக்கோயில்களின் அசையாச் சொத்துகளில் ஏற்பட்டிருந்த ஆக்கிரமிப்பில் இருந்து 6324.71 ஏக்கர் வேளாண் நிலங்களும், 1216 கிரவுண்டு காலிமனைகளும், 187 கிரவுண்டு பரப்பிலான கட்டடங்களும் மற்றும் 137 கிரவுண்டு அளவிலான திருக்கோயில் குளக்கரைப் பகுதிகளும் மீட்டு எடுக்கப்பட்டு அந்தந்த திருக்கோயில்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட சொத்துகளின் மதிப்பு ரூபாய் 5813.35 கோடி ஆகும்.

இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், பிரிவு 79(b)–இல் ஆக்கிரமிப்புத் தொடர்பான

குற்றங்களுக்குத் தண்டனை குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மேற்சொல்லப்பட்ட சட்டப்பிரிவு 79(b)–க்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் சட்டத்திருத்தம் 29/2021 மூலம் சட்டப்பிரிவு 79(b)(3) திருத்தப்பட்டது. இதன் மூலம், பிணையில் வெளிவரமுடியாத புலன்கொள் குற்றமாகக் (Cognizable offence) குற்றவியல் விசாரணை முறைச் சட்டம், 1973 (ஒன்றியச் சட்டம் 2/1974)–இல் உள்ள அதற்குரிய பிரிவுகள் பொருந்தும் வகையில் மாற்றப்பட்டுள்ளது. இந்தத் திருத்தத்தின் மூலம் திருக்கோயில் அறங்காவலர்கள், இந்தச் சட்டத்தின் கீழ் அதிகாரம் பெற்ற அலுவலர்கள், பொதுமக்கள், ஈடுபாடுடைய நபர் போன்றவர்கள் ஆக்கிரமிப்புத் தொடர்பான புகாரினை அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**17.7 கூட்டு ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல்**

இந்து சமய அறநிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்களை நீண்ட காலமாக கூட்டாக ஆக்கிரமித்து, குடியிருப்பு பகுதிகளாக பயன்படுத்தி வருபவர்களைத்

திருக்கோயில் நலனுக்குப் பாதகமின்றி வாடகைதாரர்களாக வரன்முறைப்படுத்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**17.8 திருக்கோயில் நிலங்களை அளவீடு செய்தல்**

கடந்த 08.09.2021 அன்று திருக்கோயில் நிலங்களை நவீன புவியிடங்காட்டி உபகரணங்கள் மூலம் அளவீடுகள் மேற்கொள்ளும் திட்டம் சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் தொடங்கி வைக்கப்பட்டது. 66 DGPS கருவிகளை கொண்டு 172 நில அளவர்கள் நிலங்களை அளவீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. 08.09.2021 முதல் 31.03.2024 வரை 650 கிராமங்களில் 73997 புல எண்கள்/உட்பிரிவுகளில் உள்ள 1,63,612.46 ஏக்கர் நிலங்களில் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**18. திருப்பணி**

**திருப்பணி (புதுப்பித்தல், புனரமைத்தல் மற்றும் பாதுகாத்தல்)**

பழங்காலத்தில் மன்னர்களால் திருக்கோயில்கள் கட்டி பராமரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வந்த

ஆட்சியாளர்கள் பாரம்பரியமிக்க திருக்கோயில் அமைப்புகளைப் பராமரித்ததுடன் மேம்படுத்தியும் வந்துள்ளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அத்தகைய பாரம்பரியமிக்க, வரலாற்றுச் சின்னங்களாக திகழும் திருக்கோயில்களின் பெருமைக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில், வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் கொண்டு ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் போற்றிப் பாடப்பட்ட திருக்கோயில்களுக்கு முன்னுரிமை வழங்குவதோடு, கிராமப்புறங்களில் அமைந்துள்ள திருக்கோயில்களின் மீதும் தனிக் கவனம் செலுத்தி திருப்பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்.

## 18.2 திருப்பணி மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான நிதி ஆதாரங்கள்

திருக்கோயில்களின் திருப்பணி மற்றும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கான நிதி ஆதாரங்கள் பின்வருமாறு :–

- அரசு மானியம்
- இந்து சமய அறநிலைக் கொடைகள் நிருவாக நிதி

- இந்து சமய அறநிலைக் கொடைகள் பொது நலநிதி
- ஆலய மேம்பாட்டு நிதி
- பிற திருக்கோயில்களின் உபரி நிதி மாற்றம்
- கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி
- திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி
- நன்கொடைகள்
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி நிதி
- சுற்றுலாத்துறை நிதி
- அரசு நிதி

**18.3 அரசு மானியம்**

திருக்கோயில்களின் திருப்பணி மற்றும் பழுதுபார்த்தல் பணிகளுக்காக ஆண்டுதோறும் அரசு ரூ.6 கோடி மானியமாக வழங்கி வருகிறது.

**18.4 இந்து சமய அறநிலைக்கொடைகள் நிருவாக நிதி**

சட்டப்பிரிவு 96–ன்படி ஏற்படுத்தப்பட்ட இந்து சமய அறநிலைக் கொடைகள் நிர்வாக நிதியின் உபரி நிதியிலிருந்து திருக்கோயில் திருப்பணிகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. முதற்கட்டமாக உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு அறைகள் அமைத்திட 1749

திருக்கோயில்களுக்கு ரூ.152.68 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**18.5 இந்து சமய அறநிலைக் கொடைகள் பொது நல நிதி**

சட்டப்பிரிவு 97–ன்படி ஏற்படுத்தப்பட்ட பொது நல நிதியிலிருந்து நிதி வசதி குறைவான திருக்கோயில்களின் திருப்பணிக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதியிலிருந்து 07.05.2021 முதல் 31.03.2024 வரை ரூ.337.10 கோடி திருக்கோயில் திருப்பணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**18.6 ஆலய மேம்பாட்டு நிதி**

நிதி வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி வசதியற்ற திருக்கோயில்களின் மேம்பாட்டிற்காக ரூ.8 கோடி பெற்று மைய நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து தொன்மை மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

**18.7 பிற திருக்கோயில்களின் உபரி நிதி மாற்றம்**

நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி வசதியற்ற திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ள சட்டப்பிரிவு 36–ன் கீழ் நிதிமாற்றம் மூலமாக நிதியுதவி வழங்கப்படுகிறது.

**18.8 கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி**

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கிராமப்புறத்தில் அமைந்துள்ள திருக்கோயில்களின் புனரமைப்புப் பணிகளுக்கு நிதியுதவி வழங்கிட "கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணி நிதி" ஏற்படுத்தப்பட்டுள்ளது. பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து பெறப்பட்ட ரூ.2 கோடி மூலதன நிதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.2 இலட்சம் வீதம் 1250 திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 2023–2024–ஆம் ஆண்டிற்கு 1250 கிராமப்புறத்

திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.2 இலட்சம் வீதம் ரூ.25 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டு உள்ளது. மேலும் 27.02.2024 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், 2024–2025 ஆம் நிதியாண்டு முதல் இந்நிதியுதவியினை ரூ.2,00,000/–லிருந்து ரூ.2,50,000/– ஆக உயர்த்திட முடிவெடுக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண். 193, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி.5.1) துறை நாள். 11.06.2024–ன் மூலம் ஆணையிடப்பட்டுள்ளது.

**18.9 திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி**

"முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" 1991–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5–ஆம் நாள் உருவாக்கப்பட்டது. இந்நிதிக்குத் தொண்டுள்ளம் கொண்டோர், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டன. "திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி"

என்று தற்போது அழைக்கப்படும் இந்நிதியில் தற்போது ரூ.9.60 கோடி உள்ளது. இந்நிதி அரசால் நேரடியாக நிருவகிக்கப்பட்டு வருகிறது.

**18.10 திருப்பணி நன்கொடைகள் மற்றும் உபயதாரர் பணிகள்**

திருக்கோயில்களைப் பாதுகாத்தல், புனரமைத்தல் மற்றும் புத்தாக்கம் செய்தல் ஆகிய பணிகளைப் பக்தர்கள் தாமே முன்வந்து தமது சொந்த செலவில், துறை மேற்பார்வையில், திருப்பணிகள் மேற்கொள்வது பொதுவானதொரு நடைமுறையாக இருந்து வருகிறது. தற்போது, இதற்கான நன்கொடைகள் வழங்குவோர் இணையதளம் வழியாக வழங்கும் வகையில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**18.11 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதி**

இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள 1250 சிறு திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திட

திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.2,00,000/- வீதம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

2023-2024-ஆம் ஆண்டில் 1250 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.2 இலட்சம் வீதம் ரூ.25 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டு உள்ளது. மேலும் 27.02.2024 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், 2024-2025-ஆம் நிதியாண்டு முதல் இந்நிதியுதவியினை ரூ.2,00,000/-லிருந்து ரூ.2,50,000/- ஆக உயர்த்திட முடிவெடுக்கப்பட்டு அரசாணை (நிலை) எண்.194, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி.5.1) துறை, நாள். 11.06.2024-ன் மூலம் ஆணையிடப்பட்டுள்ளது.

**18.12 சுற்றுலாத் துறை நிதி**

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்கள் பெரும் சுற்றுலா ஈர்ப்புத் தலங்களாகத் திகழ்கின்றன. திருக்கோயில்களுக்கு வருகை தரும் சுற்றுலாப்

பயணிகள் உள்ளிட்ட பக்தர்களின் நலன் கருதி கழிப்பறைகள், குளியலறைகள், குடிநீர் வசதி, தங்கும் கூடங்கள், தகவல் மையங்கள், அணுகு சாலைகள், உயர்கோபுர மின்விளக்குகள், பொருட்கள் பாதுகாப்பு அறைகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க சுற்றுலாத் துறையும் இந்து சமய அறநிலையத் துறையும் இணைந்து செயல்படுகின்றன.

**18.13 அரசு நிதி**

தமிழ்நாட்டில் உள்ள ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த திருக்கோயில்களை அவற்றின் பழமை மாறாது புனரமைத்தல், புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வது மிகவும் இன்றியமையாதது ஆகும். எனவே, பழமை வாய்ந்த திருக்கோயில்களை தொன்மை மாறாமல் திருப்பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு தமிழ்நாடு அரசு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 100 கோடி நிதியுதவி வழங்கி வருகிறது.

2022–2023–ஆம் நிதியாண்டில் 113 திருக்கோயில்களில் ரூ.157.99 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து பாதுகாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023–2024–ஆம் நிதியாண்டில் 84 திருக்கோயில்களில் ரூ.149.30 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து பாதுகாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**19. பாதுகாப்புக் கையேடு**

பழமை வாய்ந்த திருக்கோயில்களில் அவற்றின் பழமை மாறாது புனரமைத்தல், புதுப்பித்தல், பேணிக்காத்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகிய பணிகளைத் துறையில் உள்ளோர் மேற்கொள்வதற்காக ஸ்தபதிகள் மற்றும் பொறியாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளைக் கொண்ட "பாதுகாப்புக் கையேடு" (Conservation Manual) தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த பாதுகாப்புக் கையேடு, 1923–ஆம் ஆண்டு சர்.ஜான் மார்ஷல் எழுதிய பாதுகாப்புக் கையேட்டில்

தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பாதுகாப்புக் கையேட்டினை பயன்படுத்துபவர்களின் பயன் பாட்டிற்காக விளக்க இணைப்புகளும் இந்தப் பாதுகாப்புக் கையேட்டில் வழங்கப்பட்டுள்ளன.

**20. மாநில அளவிலான வல்லுநர் குழு**

இந்து சமய அறநிலையத்துறை, திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ள தொன்மை மற்றும் பாரம்பரியத்தை பாதுகாத்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளில் நிபுணத்துவம் வாய்ந்த மண்டல அளவிலான வல்லுநர் குழு, மாநில அளவிலான வல்லுநர் குழு மற்றும் மாண்பமை உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவால் வழங்கப்பட்ட கருத்துருக்களின் அடிப்படையில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

தற்போது மாநில அளவிலான பாரம்பரிய பரிசீலனைக்குழு (Heritage Screening Committee) மற்றும்

மாண்பமை உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு ஒருங்கிணைக்கப்பட்டு அரசால் 12 வல்லுநர்களைக் கொண்ட மாநில அளவிலான வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, திருப்பணிக்கான ஆலோசனைகள் பெறப்பட்டு அதன் அடிப்படையில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**21. வரைபடக் குழு**

மாமல்லபுரத்தில் உள்ள அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியின் முதல்வர் வரைபடக் குழுவின் தலைவராக உள்ளார். மாமல்லபுரத்தில் உள்ள அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரியில் உள்ள நிபுணத்துவம் வாய்ந்த பேராசிரியர் / உதவி பேராசிரியர், இந்து சமய அறநிலையத்துறையின் மண்டல ஸ்தபதி, துறை அங்கீகாரம் பெற்ற மர ஸ்தபதி மற்றும் ஒருங்கிணைப்பாளராக இணை ஆணையர் (திருப்பணி) ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். சிற்ப சாஸ்திர அடிப்படையில் திருப்பணி மேற்கொள்ள

ஆலோசனை வழங்குதல், திருக்கோயில்களின் உட்பகுதியில் ஏற்படுத்தப்படவுள்ள புதிய கட்டமைப்புகள், புதிய திருத்தேர் மற்றும் இராஜகோபுரம் குறித்த வரைபடங்களை சரிபார்த்து மேலொப்பம் செய்யும் பணிகளை இக்குழு மேற்கொள்கிறது.

திருக்கோயில்களில் சிற்ப சாஸ்திர அடிப்படையில் பணிகள் மேற்கொள்வதற்கு தக்க ஆலோசனை வழங்குதல், திருப்பணிகள் தொடர்பான வரைபடங்கள், இராஜகோபுரம் மற்றும் திருத்தேர் தொடர்பான வரைபடங்கள் ஆகியவற்றை சரிபார்த்து மேலொப்பம் செய்தல் போன்ற பணிகளை துறையின் தற்போதைய தலைமை ஸ்தபதி மூலம் மேற்கொள்ளவும், தலைமை ஸ்தபதி பணியிடம் காலியிடம் ஏற்படும் பட்சத்தில் மேற்படி பணிகளை செய்வதற்கு வரைபடக் குழுவினை பயன்படுத்திக்கொள்ளவும் அரசாணை (நிலை) எண்.169, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்

(அநி5.2) துறை, நாள் 16.03.2024–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**22. சுவரோவியங்களை புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல்**

திருக்கோயில்களின் பழைமையான சுவரோவியங்களை பழைமை மாறாது புதுப்பித்தல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்வதற்கு உரிய பரிந்துரைகளை வழங்கும் பொருட்டு ஒரு புனரமைப்பு ஓவியர் (Conservation Artist) ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி புனரமைப்பு ஓவியரால் தற்போது வரை 43 திருக்கோயில்களில் உள்ள மூலிகை ஓவியங்களை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**23. திருக்குளங்களைச் சீரமைத்தல் மற்றும் மழைநீர் சேகரித்தல்**

மாநிலம் முழுவதும் 1634 திருக்கோயில்களில் 2372 திருக்குளங்கள் உள்ளன. திருக்கோயில் திருக்குள வல்லுநர்கள்/ஆலோசகர்கள் ஆலோசனை பெற்று சீரமைப்பு மற்றும் புனரமைப்பு

காலமுறைதோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருக்கோயில் திருக்குளங்கள் சீரமைப்புப் பணிகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை விவரம் பின்வருமாறு:–

- திருக்குளங்களின் உட்புறம் மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.
- திருக்குளங்களைச் சுற்றிச் சுற்றுச்சுவர் அமைத்தல்.
- தூர் வாருதல் மற்றும் ஆழப்படுத்துதல்.
- திருக்குளங்களில் உள்ள படிகளைச் சீரமைத்தல்.
- திருக்குளங்களுக்கு மழை நீர் வருவதற்கும் உபரி நீர் வெளியேறுவதற்கும் வழி ஏற்படுத்துதல்.

2023–2024–ஆம் ஆண்டில் 43 திருக்கோயில்களுக்கு சொந்தமான 51 திருக்குளங்களை சீரமைக்க ரூ.32.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 24. மாவட்ட ஆட்சியர் ஒப்புதல் பெற்ற பொறியாளர் பட்டியல்

திருக்கோயில்களைப் பாதுகாப்பதற்கான மதிப்பீடுகள் தயாரிப்பதில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு மாவட்ட நிலையில் மாவட்ட ஆட்சியரால் பட்டியலிடப்பட்டுள்ள, பொதுப்பணித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட பட்டயப் பொறியாளர்களைப் பயன்படுத்திக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களின் நிருவாகிகள் திருப்பணிக்குத் தேவையான வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்க ஆணையர் நிர்ணயிக்கும் கட்டணத்தில் இந்தப் பொறியாளர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

### 24.2 ஸ்தபதிகளைப் பட்டியலிடுதல்

சிற்ப சாஸ்திர மற்றும் ஆகம சாஸ்திர விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், பள்ளிக் கல்வியறிவைக் குறைவாகப் பெற்றிருந்த போதிலும் தம் முன்னோர் மூலம்

வழிவழியாக சிற்பக்கலையில் பட்டறிவு பெற்றவர்கள் ஸ்தபதி/சிற்பிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுவரை 441 ஸ்தபதி/சிற்பிகளின் பெயர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

**24.3 கட்டடக்கலை வல்லுநர்களைப் பட்டியலிடுதல்**

திருக்கோயில் மற்றும் திருக்கோயிலை சார்ந்த பகுதிகளில் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள பெருந்திட்ட வரைபடம் தயார் செய்தலுக்கு இத்துறைக்கென தகுதியான கட்டடக்கலை மற்றும் வடிவமைப்பு நிறுவனங்கள் தேர்வு செய்து பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பட்டியலில் 14 நிறுவனங்கள் உள்ளன. திருக்கோயில்களுக்குத் தேவையான ஒருங்கிணைந்த பெருந்திட்டம் தயாரிப்பதற்கு இந்த நிறுவனங்களில் ஒருவரை திருக்கோயில் நிருவாகம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**25. திருக்குட நன்னீராட்டல்**

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் திருக்குட நன்னீராட்டு

விழா நடைபெறுவது நடைமுறையில் இருந்து வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் 12.06.2024 வரை 1775 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு திருக்குட நன்னீராட்டு விழா சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன.

மேலும், வரலாற்று சாதனையாக கீழ்க்கண்டவை நடைபெற்றுள்ளன:–

- 400 ஆண்டுகளுக்குப் பின் குடமுழுக்கு– கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு, அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில்
- 300 ஆண்டுகளுக்குப் பின் குடமுழுக்கு– காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சாத்தனஞ்சேரி, அருள்மிகு கரியமாணிக்க வரதராஜப்பெருமாள் திருக்கோயில்
- 150 ஆண்டுகளுக்குப் பின் குடமுழுக்கு– இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம்

வட்டம், தக்கோலம் அருள்மிகு கங்காதீஸ்வரர் திருக்கோயில்

- 123 ஆண்டுகளுக்குப் பின் குடமுழுக்கு திருநெல்வேலி மாவட்டம், அரிகேசவநல்லூர், அருள்மிகு பெரியநாயகி சமேத அரியநாத சுவாமி திருக்கோயில்
- 110 ஆண்டுகளுக்குப் பின் குடமுழுக்கு– வேலூர் மாவட்டம், வெட்டுவானம், அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில்
- 100 ஆண்டுகளுக்குப் பின் குடமுழுக்கு – 5 திருக்கோயில்கள்
- 90 ஆண்டுகளுக்குப் பின் குடமுழுக்கு – 3 திருக்கோயில்கள்
- 80 ஆண்டுகளுக்குப் பின் குடமுழுக்கு – 1 திருக்கோயில்
- 70 ஆண்டுகளுக்குப் பின் குடமுழுக்கு – 2 திருக்கோயில்கள்

- 60 ஆண்டுகளுக்குப் பின் குடமுழுக்கு – 7 திருக்கோயில்கள்
- 50 ஆண்டுகளுக்குப் பின் குடமுழுக்கு – 8 திருக்கோயில்கள்
- 40 ஆண்டுகளுக்குப் பின் குடமுழுக்கு – 10 திருக்கோயில்கள்
- 30 ஆண்டுகளுக்குப் பின் குடமுழுக்கு – 5 திருக்கோயில்கள்

**26. மரத் திருத்தேர்**

ஆண்டுதோறும் திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களில் தேரோட்டம் என்பது முக்கியத்துவம் பெற்ற திருவிழாவாகும். திருவாரூரில் அமைந்துள்ள அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலின் ஆழித்தேர் ஆசியாவிலேயே மிகப்பெரும் திருத்தேராக விளங்கி வருகிறது. திருக்கோயில்களில் தேர் திருவிழாவின் போது பக்தர்களுக்கு அருள்பாலிப்பதற்காக இறைவனே திருக்கோயிலுக்கு வெளியே உலா வருவதாக நம்பப்படுகிறது. மொத்தம்

854 திருக்கோயில்களில் 1097 மரத் திருத்தேர்கள் உள்ளன.

2023–2024–ஆம் ஆண்டிற்கு 19 திருக்கோயில்களுக்கு 22 திருத்தேர் திருப்பணி மேற்கொள்வதற்காக ரூ.12.894 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**26.2 தங்க ரதங்கள் மற்றும் வெள்ளி ரதங்கள்**

திருக்கோயில்களில் பக்தர்கள் தங்களது வேண்டுதலை நிறைவேற்ற உற்சவ மூர்த்தியை தங்கரதம் அல்லது வெள்ளிரதத்தில் எழுந்தருளச் செய்து ரதம் இழுப்பது நீண்டகால வழக்கத்தில் உள்ளது. தற்போது 68 திருக்கோயில்களில் தங்கரதங்களும், 55 திருக்கோயில்களில் வெள்ளி ரதங்களும் உள்ளன. தங்க ரதங்கள் மற்றும் வெள்ளி ரதங்கள் உள்ள திருக்கோயில்கள் பட்டியல் இணைப்பு I மற்றும் இணைப்பு II இல் உள்ளது.

சட்டமன்ற அறிவிப்பு 2021–2022–ன்படி, சென்னை, அருள்மிகு காளிகாம்பாள் கமடேஸ்வரர்

திருக்கோயில் மற்றும் இருக்கண்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் ஆகிய இரண்டு திருக்கோயில்களில் ரூ.4.46 கோடி மதிப்பீட்டில் 2 புதிய வெள்ளித் திருத்தேர் திருப்பணி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

சட்டமன்ற அறிவிப்பு 2022–2023–ன்படி, திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மற்றும் திருக்கருக்காவூர் அருள்மிகு முல்லைவனநாதசுவாமி திருக்கோயில் ஆகிய இரண்டு திருக்கோயில்களில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் 2 புதிய வெள்ளி திருத்தேர் திருப்பணி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு, திருத்தணி திருத்தேர் திருப்பணி முடிவுற்று பக்தர்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. திருக்கருக்காவூர் திருத்தேர் திருப்பணி நடைபெற்று வருகிறது.

சட்டமன்ற அறிவிப்பு 2022–2023–ன்படி சென்னை, அருள்மிகு கங்காதீஸ்வரர் திருக்கோயில், நங்கநல்லூர் அருள்மிகு ஆதிவ்யாதிஹர பக்த

ஆஞ்சநேயர் திருக்கோயில் மற்றும் பெரியபாளையம் அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில் ஆகிய மூன்று திருக்கோயில்களில் ரூ.17.98 கோடி மதிப்பீட்டில் 3 புதிய தங்கத்தேர் திருப்பணி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**27. தங்க முதலீட்டுத் திட்டம்**

திருக்கோயில்களில் காணிக்கையாகப் பெறப்பட்டு பயன்பாட்டில் இல்லாத பலமாற்று பொன் இனங்கள், பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யும் பொருட்டு 24 காரட் தங்கக் கட்டிகளாக மாற்றப்படுகின்றன. இந்த முதலீட்டின் மூலம் கிடைக்கப் பெறும் வட்டித் தொகை அந்தந்த திருக்கோயிலின் வளர்ச்சி பணிகளுக்காக பயன்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்திற்காக 3 மண்டலங்களாக பிரித்து கண்காணிக்க ஓய்வு பெற்ற நீதியரசர்கள் தலைமையில் 3 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாண்பமை உச்சநீதிமன்றத்தில்

பணி ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவரும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் பணி ஓய்வு பெற்ற நீதியரசர்கள் இருவரும் அந்தக் குழுக்களுக்கு தலைவர்களாக உள்ளனர்.

திருக்கோயிலுக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத பலமாற்று பொன் காணிக்கைகளில் இருந்து இந்திய அரசின் நாணயச்சாலையில் உருக்கப்பட்டு பாரத மாநில வங்கியில் முதலீடு செய்யப்பட்ட தங்கக் கட்டிகளின் விவரங்கள் பின்வருமாறு :–

| வ. எண் | திருக்கோயில்கள் | பெறப்பட்ட தூய தங்கம் (கிராம் அளவில்) | தோராயமான வட்டித்தொகை வருடத்திற்கு (ரூபாய் இலட்சம்) |
|---|---|---|---|
| 1. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இருக்கண்குடி | 20567.890 | 24.09 |
| 2. | அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில், பெரியபாளையம் | 91061.098 | 104.00 |

| | | | |
|---|---|---|---|
| 3. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு | 31938.677 | 39.00* |
| 4. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு | 32697.867 | 39.00 |
| 5. | அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில் திருச்செந்தூர் | 168068.889 | 224.49 |
| 6. | அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் மேல்மலையனூர் | 19595.138 | 28.99 |
| 7. | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் திருச்செங்கோடு | 6965.630 | 10.30 |

(*தங்கத்தின் மதிப்பு உயர்வின் காரணமாக வரிசை எண்.4-க்கு இணையான தொகை)

## 28. சிறப்புத் திட்டங்கள்

### அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் பணி நியமனம்

திருக்கோயில்களில் சமூக நீதியை நிலைநாட்ட மற்றும் இறைவனுக்காற்றும் சேவையில்

அனைவருக்கும் சம வாய்ப்பினை உறுதி செய்ய 2006–ஆம் ஆண்டில் அரசால் தீர்மானிக்கப்பட்டது. திருக்கோயில்களில் இறைவனுக்கு பூஜை செய்யும் வாய்ப்பு சாதி பாகுபாட்டின் அடிப்படையில் மறுக்கப்படக் கூடாது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.08.2021 அன்று 56 நபர்களுக்கு பணி ஆணை வழங்கினார்கள். அவர்களில் 24 பயனாளிகள் 6 திருக்கோயில்களால் நடத்தப்படும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் பயின்ற இதர சாதியைச் சேர்ந்த நபர்கள் ஆவார்கள். மேலும் 3 பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேற்சொல்லப்பட்ட 6 பயிற்சிப் பள்ளிகளின் விவரம் பின்வருமாறு:–

1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.
2. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி.
3. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

4. அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை.
5. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்.
6. அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில், திருவல்லிக்கேணி.

மேலும் ஒரு அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியை ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் மற்றும் பாஷ்யகார சுவாமி திருக்கோயிலில் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**29. 'கலைஞர் தலமரக்கன்றுகள்' நடும் திட்டம்**

தொன்றுதொட்டு மரங்கள் இறைவன்/ இறைவியை குறிக்கும் சின்னங்களாகவும், பல்வேறு பூஜைகளின் அங்கமாகவும் விளங்குகின்றன. ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ஒரு குறிப்பிட்ட மரம் புனிதமாக தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. **முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர்** அவர்களை நினைவுகூறும் வகையில் **"கலைஞர் தல மரக்கன்றுகள் நடும் திட்டம்"** அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் உள்ள திருக்கோயில்களில் ஒரு இலட்சம் தல மரக்கன்றுகளை நட திட்டமிடப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலக வளாகத்தில் 07.08.2021 அன்று நாகலிங்க மரக்கன்றினை நட்டு இத்திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள்.

20 இணை ஆணையர் மண்டலத்தில் 2597 திருக்கோயில்களில் 1,00,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

**30. அன்னைத் தமிழில் வழிபாடு**

தமிழ் அருளாளர்கள் இறைவனைத் தமிழில் போற்றி பாடியுள்ளனர். அருளாளர்கள் அருளிய திருமந்திரம், தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்வியப்பிரபந்தம், திருப்புகழ் போன்றவை தமிழ் மொழியின் சிறப்பினை எடுத்துரைத்தது

மட்டுமல்லாமல் தமிழின் வளர்ச்சிக்கும் தங்களது பங்களிப்பை அளித்துள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திருக்கோயில்களில் 'அன்னைத் தமிழில் வழிபாடு செய்யப்படும்' என்ற அறிவிப்பு பதாகையினை 03.08.2021 அன்று வெளியிட்டார். இத்திட்டம் முதற்கட்டமாக 48 முதுநிலை திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புப் பதாகையில், தமிழில் அர்ச்சனை செய்யும் அர்ச்சகர்களின் பெயர் மற்றும் அவரது தொடர்பு எண் உள்ளிட்ட விவரங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் 48 முதுநிலை திருக்கோயில்களிலும் அன்னைத் தமிழில் வழிபாடு செய்வதை ஊக்குவித்து, உறுதிப்படுத்தும் வகையில் பற்று அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் அர்ச்சனை நூல்களை பதிப்பிக்கச் செய்து இவ்வரசு, **அன்னைத் தமிழில் அர்ச்சனைத்** திட்டத்திற்கு மேலும் வலுச்சேர்த்துள்ளது.

1. 'அருள்மிகு விநாயகர் போற்றி',
2. 'அருள்மிகு முருகவேள் போற்றி',
3. 'அருள்மிகு உமையம்மை போற்றி',
4. 'அருள்மிகு நடராசர் போற்றி',
5. 'அருள்மிகு தென்முக கடவுள் போற்றி',
6. 'அருள்மிகு கோதண்டராமர் போற்றி',
7. 'அருள்மிகு தாயார் போற்றி',
8. 'அருள்மிகு துர்க்கையம்மன் போற்றி',
9. 'அருள்மிகு காளியம்மன் போற்றி',
10. 'அருள்மிகு மாரியம்மன் போற்றி',
11. 'அருள்மிகு அனுமன் போற்றி'

ஆகிய 108 போற்றிகள் அடங்கிய நூல்களும் 1008 போற்றிகள் அடங்கிய 'அருள்மிகு சிவன் போற்றி' நூலும் ஆக 12 போற்றி நூல்களும் திருக்கோயில்கள் அனைத்திலும் கிடைக்கச் செய்யும் திட்டத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12.08.2021 அன்று தொடங்கி வைத்தார்கள். மேலும் இரண்டு போற்றி நூல்களான 'அருள்மிகு திருமால்

போற்றி' மற்றும் 'அருள்மிகு நவக்கோள்கள் போற்றி' ஆகியனவும் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும் தமிழில் வழிபாடு செய்யப்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு அர்ச்சனை கட்டணச்சீட்டில் 60% தொகை பங்குத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி 2024–ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை 294 திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களுக்கு பங்குத் தொகையாக ரூ.56.98 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**31. அன்னதானத் திட்டம்**

இறையருள் பெற திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு நிறைவான உணவு இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. பக்தர்களது நம்பிக்கை மற்றும் எண்ணங்களுக்கேற்ப இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவு புனிதமானது. இத்திட்டம் 2002–ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டு தற்போது 771 திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

**31.2 பக்தர்களுக்கு நாள் முழுவதும் அன்னதானம் வழங்குதல்**

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் மற்றும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்களில் 13.09.2012 முதல் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

2021–2022–ஆம் ஆண்டில் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகிய மூன்று திருக்கோயில்களிலும் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022–2023 ஆம் ஆண்டில் இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் மற்றும் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் ஆகிய மூன்று

திருக்கோயில்களிலும் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டில் ஆனைமலை அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், பெரியபாளையம் அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில் ஆகிய மூன்று திருக்கோயில்களிலும் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**31.3 நாள் முழுவதும் பிரசாதம்**

இவ்வரசு பொறுப்பேற்ற பின், திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கும் திட்டம் 15 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (பழநி, மதுரை, திருச்செந்தூர், சமயபுரம், திருத்தணி, திருவேற்காடு, திருவரங்கம், வடபழனி, மருதமலை, பண்ணாரி,

மயிலாப்பூர், மேல்மலையனூர், இருக்கண்குடி, ஆனைமலை, நாமக்கல்)

மேலும் 2023-2024-ஆம் ஆண்டு இத்திட்டம் 5 திருக்கோயில்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. (திருவண்ணாமலை, மதுரை அழகர்கோயில், இராமேஸ்வரம், திருவல்லிக்கேணி, திருப்பரங்குன்றம்)

**31.4 மாணாக்கர்களுக்கான காலை சிற்றுண்டி திட்டம்**

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவச காலை உணவு வழங்கும் திட்டம் 2022-2023-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 4000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயனடைகின்றனர்.

**31.5 உணவு தரப் பாதுகாப்புச் சான்றிதழ் (BHOG Certification)**

திருக்கோயில்களில் தயாரிக்கப்படும் பிரசாதம் மற்றும் அன்னதானம் தரத்துடனும், சுகாதாரமான

முறையிலும் தயாரிக்கப்படுவதை உறுதி செய்திட இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையத்தால் வழங்கப்படும் தரச்சான்றினை **(BHOG)** 523 திருக்கோயில்கள் பெற்றுள்ளன.

**32. வஸ்திர மரியாதை**

2022–2023 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, தமிழகத்தில் உள்ள திருக்கோயில்கள் மூலம் பிற மாநிலங்களில் உள்ள கோயில்களுடன் சமயப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் வகையில், திருக்கோயில் மரியாதைகள் அனுப்பப்பட்டுள்ளன. வஸ்திர மரியாதை தொடர்ந்து பரிமாறிக்கொள்ளப்பட்டு வருகிறது. திருக்கோயில்களின் விவரம் பின்வருமாறு:–

1. அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் மற்றும் அருள்மிகு சாமுண்டீஸ்வரி திருக்கோயில், மைசூரு, கர்நாடகா.
2. அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு மல்லிகார்ஜுனேஸ்வரர் திருக்கோயில், ஸ்ரீசைலம், ஆந்திரப் பிரதேசம்.

3. அருள்மிகு யோக நரசிம்மர் திருக்கோயில், சோளிங்கர் மற்றும் அருள்மிகு அகோபிலம் திருக்கோயில், ஆந்திரப் பிரதேசம்.
4. அருள்மிகு ஒப்பிலியப்பன் திருக்கோயில், கும்பகோணம் மற்றும் அருள்மிகு ராகவேந்திரர் பிருந்தாவனம், மந்திராலயம், ஆந்திரப் பிரதேசம்.
5. அருள்மிகு எம்பார் சுவாமிகள் திருக்கோயில், காஞ்சிபுரம் மற்றும் அருள்மிகு செழுவ நாராயணப் பெருமாள் திருக்கோயில், மேல்கோட், கர்நாடகா.
6. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் சமயபுரம் மற்றும் உஜ்ஜயினி மகாகாளேஸ்வரர் திருக்கோயில், மத்தியப்பிரதேசம்.

## 33. ஆன்மிகம் மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள்

பண்டைய தமிழ் இலக்கியங்களில் உள்ள நமது கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் மரபுகளை கதைகள் வாயிலாக குழந்தைகளின் மனதில் ஆழப்பதிந்திட, ஆன்மிக மற்றும் நீதிநெறி வகுப்புகள், 48 முதுநிலைத் திருக்கோயில்கள் அனைத்திலும் வார விடுமுறை தினங்களில் நடத்தப்பட்டு 855 மாணவர்கள் பயின்று பயன்பெறுகின்றனர். அம்மாணவர்களை

ஊக்குவிக்கும் விதமாக திருக்கோயில் பிரசாதம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் ஆன்மிக வகுப்புகளுக்கு ஒரே பாடத்திட்டமாக ஆன்மிக ஒழுக்க நெறி என்ற தலைப்பில் புத்தகம் தயார் செய்யப்பட்டு முதுநிலை திருக்கோயில்களுக்கு அனுப்பப்பட உள்ளது.

**34. சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்**

ஆண்டுதோறும் முக்கியத் திருக்கோயில்களில் சுதந்திரத் திருநாள், பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய தினங்களில் சிறப்பு வழிபாடும் அனைத்துச் சமுதாய மக்களுக்கும் சிறப்பு விருந்தும் வழங்கப்பட்டு வருகிறது.

**35. யானைகள் சிறப்பு நலவாழ்வு**

27 திருக்கோயில்களில் 29 யானைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. திருக்கோயில் யானைகளுக்கு மாதம் இருமுறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டு சிறப்பு இயற்கை உணவுகள் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது திருக்கோயில்கள் மற்றும் மடங்களில் உள்ள யானைகளை இயற்கைச் சூழலில் நன்றாகப் பாராமரிக்கும் பொருட்டு குளியல் தொட்டி, சேற்றுக் குளியல் மற்றும் நடைபாதை போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. (இணைப்பு III).

### 35.2 முக்தியடைந்த யானைகளுக்கு மணிமண்டபம்

திருக்கோயில்களில் நீண்ட காலம் சேவைப்புரிந்து முக்தியடைந்த யானைகளுக்கு அவைகளின் சேவையை போற்றும் விதமாக திருக்கோயிலுக்கு சொந்தமான நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நினைவு மண்டபம் அமைக்கப்படும் என சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. நினைவு மண்டபம் அமைக்கப்படும் திருக்கோயில்கள் விவரம் பின்வருமாறு :

1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.
2. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமநாதபுரம்.

3. அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை.
4. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்.
5. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு.
6. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.
7. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில். திருத்தணி.
8. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்,
9. அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயில், மன்னார்குடி.
10. அருள்மிகு திருத்தளிநாத சுவாமி திருக்கோயில், திருப்பத்தூர், சிவகங்கை.
11. அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில் பவானி

**36. பசுக்கள் காப்பகம்**

திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெறும் கால்நடைகளைப் பராமரிக்க 4 ஒருங்கிணைந்த பசுக்கள் காப்பகம் பழநி, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் ஆகிய

நான்கு இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருக்கோயில்களால் நன்கொடையாக பெறப்படும் உபரி கால்நடைகள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் திருக்கோயில் அர்ச்சகர்களுக்கும், பூசாரிகளுக்கும் விலையின்றி வழங்கப்படுகின்றன. இக்கோசாலைகளை நல்ல முறையில் பராமரிக்க சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. பசுக்கள் காப்பகம் விவரம் இணைப்பு IV–ல் உள்ளது

ஆவடி தாலுகா, கோயில்பதாகை, அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள் திருக்கோயில் வளாகத்தில், 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த பசுக்கள் காப்பகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2023–2024 ஆம் ஆண்டு அறிவிப்பின்படி திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் ரூ.2.95 கோடி மதிப்பீட்டில் பசுக்கள் காப்பகம் அமைக்க அரசாணை பெறப்பட்டு, பசுக்கள் காப்பகம் அமைப்பது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**37. மின்கலச் சிற்றுந்துகள்**

திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் நலனுக்காக திருக்கோயில்களில் மின்கலச் சிற்றுந்துகள் பயன்பாட்டில் உள்ளன. மின்கலச் சிற்றுந்துகள் பயன்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் பட்டியல் இணைப்பு V–இல் வழங்கப்பட்டுள்ளது.

**38. கம்பிவட ஊர்திகள்**

பக்தர்கள் மலை மீதுள்ள திருக்கோயில்களுக்கு விரைவாக சென்று தரிசனம் செய்வதற்காக பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் கம்பிவட ஊர்தி இயக்கப்பட்டு வருகிறது.

சோளிங்கர், அருள்மிகு யோக நரசிம்மர் சுவாமி திருக்கோயிலில் ரூபாய் 20.03 கோடி மதிப்பீட்டில் கம்பி வட ஊர்தி பணிகள் முடிக்கப்பட்டு 08.03.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு பக்தர்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. அய்யர்மலை, அருள்மிகு ரத்தினகீரிஸ்வரர்

திருக்கோயிலில் ரூபாய் 20.03 கோடி மதிப்பீட்டில் கம்பி வட ஊர்தி பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் மற்றும் இடும்பன் கோயில் இடையே கம்பிவட ஊர்தி அமைக்க சாத்தியக்கூறு பெறப்பட்டு, கம்பிவட ஊர்தி அமைப்பது குறித்து தொடர் நடவடிக்கையில் உள்ளது.

**39. ஒரு கால பூஜை திட்டம்**

நிதிவசதியற்ற திருக்கோயில்களுக்கு நாளொன்றுக்கு ஒரு காலமாவது பூஜை நடத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில், 1986–ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது. இதற்காக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ.2 இலட்சம் வீதம் 17,000 திருக்கோயில்களுக்கு வைப்புநிதி ஏற்படுத்தப்பட்டு அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகை மூலம் ஒரு கால பூஜை நடத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட 17,000 ஒரு கால பூஜை நடைபெறும் திருக்கோயில்களில் பூஜை செய்யும் அர்ச்சகர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கத்தில், மாதத்திற்கு ஊக்கத் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் செப்டம்பர் 2021 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**40. அரசு மானியம்**

**சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களுக்கான அரசு மானியம்**

சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்கள் நிருவாகத்தின் கீழ் உள்ள 490 திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் அதன் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு மகளிர் கல்லூரி, ஒரு மேல்நிலைப்பள்ளி மற்றும் இரண்டு உயர்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றிற்கு ஆண்டு மானியமாக ரூபாய் ஆறு கோடி வழங்கப்பட்டு வந்தது.

திருக்கோயில்களின் நிருவாக செலவுகளில் ஏற்படும் உயர்வினைக் கருதி, 24.11.2023 அன்று அரசு மானியம் ரூபாய் ஆறு கோடியிலிருந்து ரூபாய் எட்டு

கோடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**40.2 புதுக்கோட்டை சமஸ்தானங்களுக்கான மானியம்**

புதுக்கோட்டை சமஸ்தான 225 திருக்கோயில்களுக்கு ஆண்டொன்றிற்கு அரசு மானியமாக ரூபாய் மூன்று கோடி வழங்கப்பட்டு வந்தது. நிருவாக செலவுகளில் ஏற்படும் உயர்வினைக் கருதி, 08.03.2024 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இம்மானியம் ரூபாய் மூன்று கோடியிலிருந்து ரூபாய் ஐந்து கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

இத்தொகையிலிருந்து திருக்கோயில் பணியாளர்கள் சம்பளம், ஓய்வூதியம், மின்கட்டணம், பூஜைப் படித்தரம், திருப்பணி, திருவிழாச் செலவு போன்ற செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**40.3 தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்திற்கு உட்பட்ட திருக்கோயில்களுக்கான அரசு மானியம்.**

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான திருக்கோயில்களின் நிதிபற்றாக்குறையினை கருத்தில் கொண்டு, தேவஸ்தான நிருவாகத்திலுள்ள 88 திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கென 2022–2023 ஆம் நிதியாண்டில் முதன்முறையாக ரூ.3 கோடி தொகையானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 04.02.2023 அன்று வழங்கப்பட்டது. கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டிலும் ரூ.3 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இந்த மானியம் தொடர்ந்து வழங்கப்படும்.

**40.4 திருப்பணிகளுக்கான மானியம்**

தொன்மை வாய்ந்த பாரம்பரியமிக்க திருக்கோயில்களை அதன் பழமை மாறாது புதுப்பித்தல்/புனரமைத்தல்/மறுசீரமைப்பு செய்யும்

திருப்பணிகளுக்கென ஆண்டுதோறும் ரூபாய் 6 கோடி அரசு மானியமாக வழங்கப்படுகிறது.

**40.5 தொன்மை வாய்ந்த திருக்கோயில்களின் பழமை மாறாது புதுப்பிக்கும் திருப்பணிகளுக்குச் சிறப்பு மானியம்**

ஆயிரம் வருட தொன்மை வாய்ந்த திருக்கோயில்களின் பழமை மாறாது புதுப்பிக்கும் திருப்பணிகளுக்கு 2022-2023-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் ரூ.100 கோடி நிதியுதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, 47 திருக்கோயிலில்களில் திருப்பணி மேற்கொள்ள ரூ.99.86 கோடி சிறப்பு மானியம் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023-2024-ஆம் ஆண்டில் 73 திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ள ரூ.99.84 கோடி சிறப்பு மானியம் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 41. ஆன்மிக பயணம்

### மானசரோவர் மற்றும் முக்திநாத் புனிதப் பயணங்களுக்கான அரசு மானியம்

இந்து மதத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும், அவர்களது வாழ்நாளில் ஒருமுறையாவது மானசரோவர் மற்றும் முக்திநாத்திற்கு புனிதப் பயணம் செல்வதை ஆன்மிகக் கடமையாக கருதுகின்றனர். தமிழ்நாட்டில் வசித்து வருபவர்கள், சீனாவில் உள்ள மானசரோவருக்கு புனிதப் பயணம் மேற்கொள்ளும் தகுதியுடைய ஒவ்வொருவருக்கும் ரூ.50,000/- அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. அதுபோன்றே, நேபாளத்தில் உள்ள முக்திநாத்திற்கு புனித பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் ரூ.20,000/- அரசு மானியம் வழங்கப்படுகிறது. மேற்கண்ட இரு பயணங்களுக்கும் ஆண்டொன்றுக்கு தலா 500 நபர்களுக்கு, அரசு மானியம் புனிதப் பயணம் முடித்து மானியம் வேண்டி விண்ணப்பிக்கும் தகுதியான

பக்தர்களுக்கு வாழ்நாளில் ஒருமுறை மட்டும் வழங்கப்படுகிறது.

இதன்படி 2022-2023 ஆம் ஆண்டில் முக்திநாத் புனித யாத்திரை மேற்கொண்ட 302 ஆன்மிக பக்தர்களுக்கு 2023-2024ல் தலா ரூ 20,000/- வீதம் ரூ 60,40,000/- வழங்கப்பட்டுள்ளது.

**41.2 இராமேஸ்வரம் முதல் காசி வரை ஆன்மிகப் பயணம்**

2022-2023-ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பில், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலிலிருந்து காசி, அருள்மிகு விஸ்வநாதர் திருக்கோயிலுக்கு 200 பக்தர்கள் அரசு நிதி ரூபாய் 50 இலட்சம் செலவில் அழைத்து சென்று வரப்படுவார்கள் என்று அறிவிப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, 200 பக்தர்கள் இராமேஸ்வரத்திலிருந்து காசி வரையான ஆன்மிகப் பயணத்திற்கு அழைத்து சென்று வரப்பெற்று பயனடைந்துள்ளனர்.

தற்போது இதனை விரிவுப்படுத்தி 2023-2024-ஆம் ஆண்டில் 300 பக்தர்கள் அரசு

நிதி ரூபாய் 75 இலட்சம் செலவில் இராமேஸ்வரத்திலிருந்து காசி வரையான ஆன்மிகப் பயணத்திற்கு அழைத்து சென்று வரப்பெற்று பயனடைந்துள்ளனர்.

**41.3. அறுபடை வீடு ஆன்மிகப் பயணம்**

2024 ஆம் ஆண்டு அறுபடை வீடு ஆன்மிகப் பயணமாக 1000 பக்தர்கள் அழைத்து செல்லப் படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, 28.01.2024 அன்று சென்னை கந்தக்கோட்டம், அருள்மிகு கந்தசாமி திருக்கோயிலிலிருந்து 207 ஆன்மிக பக்தர்கள் முதற்கட்டமாக அழைத்து செல்லப்பட்டனர். இரண்டாவது கட்டமாக 06.03.2024 அன்று பழநியிலிருந்து 200 பக்தர்கள் அழைத்து செல்லப்பட்டனர். மூன்றாம் கட்டமாக 07.06.2024 அன்று திருச்செந்தூரில் இருந்து தொடங்கி 202 பக்தர்கள் அறுபடைவீடு ஆன்மிகப் பயணம் அழைத்து செல்லப்பட்டனர்.

## 42. பக்தர்களுக்கான வசதிகள்

**திருக்கோயில்களில் நவீனத் தொழில்நுட்ப முறையில் திருநீறு மற்றும் குங்குமம் தயாரித்தல்**

திருக்கோயில்களில் நவீன தொழில்நுட்ப முறையில் திருநீறு தயாரிக்கப்பட்டு கீழ்க்காணும் திருக்கோயில்களின் தேவைக்கும், பிற திருக்கோயில்களின் தேவைகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

| வ.எண். | திருக்கோயில்கள் |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் |
| 3. | அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை |
| 4. | அருள்மிகு ஜம்புகேசுவரர் திருக்கோயில், திருவானைக்காவல் |

திருக்கோயில்களில் தரமான குங்குமம் நவீன தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்பட்டு கீழ்க்காணும் திருக்கோயில்களின் தேவைக்கும், பிற

திருக்கோயில்களின் தேவைகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | திருக்கோயில்கள் |
|---|---|
| 1. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை |
| 2. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம் |
| 3. | அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி |
| 4. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு |

**43. சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்குதல்**

மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்றோர்களுக்கு சுதந்திர நாளன்றும், 'பேரறிஞர் அண்ணா' நினைவு நாளன்றும், முக்கியத் திருக்கோயில்களில் காணிக்கையாகப் பெறப்படும் நூல் சேலைகள்/ வேட்டிகள் வழங்கப்படுகின்றன.

2023–2024–ஆம் ஆண்டில் 12566 சேலைகள் மற்றும் 3905 வேட்டிகள் சுதந்திர தினத்தன்றும், 8245

சேலைகள் மற்றும் 905 வேட்டிகள் 'பேரறிஞர் அண்ணா' நினைவு நாளன்றும் வழங்கப்பட்டுள்ளன.

**44. திருக்கோயில்களில் நூலகங்கள்**

திருக்கோயில்களுக்கு வருகை புரியும் பக்தர்களுக்கு ஆன்மிக உணர்வை வளர்க்கும் வகையில் 198 திருக்கோயில்களில் நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஏற்கனவே உள்ள புத்தகங்களோடு புதிதாக பக்தி இலக்கியங்களும் ஆன்மிக இதழ்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்துறை பதிப்பகப்பிரிவின் மூலம் வெளியிடப்படும் அனைத்து ஆன்மிக புத்தகங்களும் திருக்கோயில்கள் மூலம் நடத்தப்படும் நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளன.

**45. ஆணையர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை**

திருக்கோயில் வளாகத்தை கண்காணிப்பு மேற்கொள்வதற்காக, 48 முதுநிலைத் திருக்கோயில்களில் 2,064 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, ஆணையர் அலுவலகத்தில் உள்ள

கட்டுப்பாட்டு அறையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இக்கட்டுப்பாட்டு அறையானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20.01.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. மேற்கண்ட 48 முதுநிலைத் திருக்கோயில்களும் உதவிப் பாதுகாப்பு அலுவலர்களாலும், ஆணையர் அலுவலக கட்டுப்பாட்டு அறையிலுள்ள திட்ட அலுவலராலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**46. பெருந்திட்ட வளாக மேம்பாட்டு பணிகள்**

புகழ்பெற்ற திருக்கோயில்களுக்கு வருகை தரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் நலன் கருதி அவர்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அத்திருக்கோயில்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்காக தரிசன வழி கட்டடம், சுகாதார வளாகங்கள், அன்னதான மண்டபம்,

சூரசம்ஹார மண்டபம், தங்கும் விடுதி உட்பட பல்வேறு மேம்பாட்டு பணிகள் ரூ.305 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெரியபாளையம், அருள்மிகு பவானியம்மன் திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்காக நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதி, புதியதாக வரிசை மண்டபம், திருமண மண்டபத்துடன் கூடிய அன்னதானக் கூடம் கட்டும் பணி உட்பட பல்வேறு மேம்பாட்டு பணிகள் ரூ.170.11 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் திருப்பணி மற்றும் பக்தர்கள் வசதிக்காக அடிப்படை வசதிகள், இராமர் பாதம் திருக்கோயில், கோதண்டராமர் திருக்கோயில் திருப்பணி உள்ளிட்ட மேம்பாட்டு பணிகள் ரூ.146 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் ரூ.99.98 கோடி மதிப்பீட்டிலும்,

சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.64.65 கோடி மதிப்பீட்டிலும், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் ரூ.52.80 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் இருக்கண்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.65.80 கோடி மதிப்பீட்டிலும் பெருந்திட்ட வரைவு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் திருக்கோயில் நிதி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**47. வள்ளலார் சர்வதேச மையம்**

திருவருட்பிரகாச வள்ளலார் அவர்களின் ஆன்மீக கோட்பாடுகளை உலகறியச் செய்யும் பொருட்டு வள்ளலார் சர்வதேச மையம், வடலூரில் அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ரூ.99.90 கோடி மதிப்பீட்டில் சத்திய ஞான சபை ஜோதி தரிசனம் மற்றும் சத்திய தருமசாலை அமைந்துள்ள பகுதியில் தியான

மண்டபம், மின்னணுமயமாக்கப்பட்ட நூலகம், பாடசாலை, அரங்கம், அருங்காட்சியகம் மற்றும் அடிப்படை வசதிகள் போன்றவையும், அருகாமையில் உள்ள பகுதியில் மூத்த குடிமக்கள் தங்குமிடம், மூலிகை பூங்கா மற்றும் உணவகம் கட்டுவதற்கு மதிப்பீடு மற்றும் ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் பெறப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**48. பக்தர்கள் தங்குமிடங்கள்**

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில், இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், ஆலங்குடி அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில் மற்றும் காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பக்தர்கள் தங்குவதற்காக தங்குமிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ.29.16 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.35 கோடி மதிப்பீட்டிலும் 'பக்தர்கள் தங்குமிடங்கள்' கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2022–2023–ஆம் ஆண்டிற்கு 7 திருக்கோயில்களில் 8 பக்தர்கள் தங்கும் விடுதிகள், இளைப்பாறும் மண்டபங்கள் கட்டும் பணி மேற்கொள்வதற்கு ரூ.9.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2023–2024–ஆம் நிதியாண்டில் 9 திருக்கோயில்களில் பக்தர்கள் தங்கும் விடுதி, இளைப்பாறும் மண்டபங்கள் கட்டும் பணி மேற்கொள்வதற்கு ரூ.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**49. பக்தர்களுக்கான சிறப்பு அடிப்படை வசதிகள்**

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில், பக்தர்களின் வசதிக்காக ரூ.23.81 கோடி செலவில் புதிய குடிநீர் திட்டம், அன்னதான உணவருந்தும் கூடம், மேல் கம்பிவட ஊர்தி நிலையத்தில் மின் தூக்கி வசதி மற்றும் நாதமணி மண்டபம் ஆகிய சிறப்பு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**50. திருக்கோயில்களில் இலவச முடிகாணிக்கை**

திருக்கோயில்களில் முடிகாணிக்கை செலுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. இதில் பக்தர்களுக்கு உள்ள இன்னலைக் கருதி, திருக்கோயில் நிருவாகம் முடிகாணிக்கை செலுத்துவதற்கான கட்டணத்தை ஏற்றுக்கொண்டு கட்டணமின்றி முடிகாணிக்கை செலுத்தும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

தற்போது முடி இறக்கும் தொழிலாளிகளுக்கு ஒரு முடி காணிக்கைக்கு ரூ.30/– திருக்கோயில்

சார்பாக வழங்கப்படுவதோடு, மாத ஊக்கத் தொகையாக ரூ.5000/–மும் திருக்கோயில் நிருவாகத்தால் வழங்கப்படுகிறது.

முடி இறக்கும் பணியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.5000/– ஊக்கத் தொகை அந்தந்த திருக்கோயில்களிலிருந்து வழங்கும் திட்டம் 05.10.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 51. மாற்றுத் திறனாளிகளுக்கான கட்டணமில்லா திருமணத் திட்டம்

திருக்கோயில்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு என கட்டணமில்லாத் திருமணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி மணமக்கள் இருவரில், ஒருவர் மாற்றுத் திறனாளியாக இருந்தால், திருமணத்திற்கான கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 137 திருமணங்கள் நடைபெற்றுள்ளன. மேலும் மாற்றுத்திறனாளி இணைகளுக்கு திருக்கோயில் சார்பாக புத்தாடை

மற்றும் தாலிக்கு 4 கிராம் தங்கமும் வழங்கப்பட்டு வருகிறது.

**52. கட்டணமில்லா திருமணத் திட்டம்**

2022–2023–ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் 500 திருமணங்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, திருக்கோயில் சார்பில் 500 ஏழை எளிய இணைகளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது.

மேலும் 2023–2024–ஆம் ஆண்டு சட்டப் பேரவை அறிவிப்பின்படி 600 ஏழை எளிய இணைகளுக்கு திருக்கோயில் மூலம் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இத்திருமணத்திற்கு அரசாணை (நிலை) எண்.189, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி 1–1) துறை, நாள்.09.05.2023 மற்றும் அரசாணை (நிலை) எண். 247, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி1–1) துறை, நாள்.03.07.2023–ன்படி ரூ.30,000/–

மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் மற்றும் 4 கிராம் தங்கத்திலான தாலியும் வழங்கப்பட்டு வருகிறது

**53. திருக்கோயில்களில் உழவாரப் பணி**

துறையின் ஆளுகைக்குட்பட்ட அனைத்து திருக்கோயில்களிலும் "திங்கள்தோறும் தூய்மைப்பணி" என்ற திட்டத்தின்படி பிரதிமாதம் முதல் புதன்கிழமை திருக்கோயில்களில் அனைத்து இடங்களிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், உழவாரப்பணி மேற்கொள்ள ஆர்வம் காட்டும் தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக சேவை அமைப்புகளுக்கு திருக்கோயில்களில் முன்அனுமதிப்பெற்று உழவாரப் பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்றன. 48 முதுநிலை திருக்கோயில்களிலும் இணைய வழியில் முன்பதிவு செய்து உழவாரப் பணியினை மேற்கொள்ள பதிவு செய்து கொள்ளும் புதிய வசதி 27.07.2021 அன்று தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது உழவாரப்பணிக்கு தேவையான

உபகரணங்கள் திருக்கோயில் நிருவாகம் மூலம் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது வரை 18,227 திருக்கோயில்களில் 36,615 உழவாரப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**53.2 திருக்கோயில் வளாகத்தில் நெகிழி பயன்பாட்டினைத் தவிர்த்தல்**

திருக்கோயில்களில் சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக பராமரித்து பாதுகாக்கும் வகையில், திருக்கோயில் வளாகம் மற்றும் சுற்றுப்புறங்களில் நெகிழி (பாலிதீன்) பைகள் பயன்பாடு தடை செய்யப்பட்டு அதற்கு மாற்றாக துணிப்பைகள் மற்றும் பாக்குமட்டைத் தட்டுகள் ஆகியவற்றின் பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது.

**54. பாதுகாப்பு நடவடிக்கைகள்**

**திருக்கோயில்கள் பாதுகாப்பு**

திருக்கோயில்களின் பாதுகாப்பிற்காக, மின்னனு பாதுகாப்பு உபகரணங்களான கள்வர் எச்சரிக்கை மணி, பரிசோதனைக் கருவி (Metal Detector), நவீன ஒளிப்பதிவுக்கருவி (Digital Video), கண்காணிப்பு

கேமராக்கள் (CCTV Cameras) மற்றும் உறுதியான கம்பித் தடுப்புக் கதவுகள் (Grill Gates) போன்றவை பொருத்தப்பட்டுள்ளன. மேலும், திருக்கோயில்களின் பாதுகாப்பு பணியில் இரவு மற்றும் பகல் நேரக் காவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 54.2 உலோகத் திருமேனிகள் மற்றும் மதிப்புமிகு பொருட்கள் பாதுகாப்பு

திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகளையும் அணிகலன்களையும், மதிப்புமிகு பொருள்களையும் பாதுகாத்திட, உலோகத் திருமேனி பாதுகாப்பு மையங்கள், பாதுகாப்பு அறைகள் உருவாக்கப்பட்டு, கள்வர் எச்சரிக்கை மணி பொருத்துதல், உள்பூட்டு (தொட்டிப்பூட்டு) அமைப்பு ஏற்படுத்துதல், இரும்பு வாயிற்கதவுகள் பொருத்துதல், கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகள் பொருத்துதல் ஆகிய பணிகளும் பகல்/இரவு நேரக் காவலர்கள் நியமனம், திருக்கோயில் பாதுகாப்புப் படையினர் நியமனம் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டு

வருகின்றன. மேலும், சிலைகள்/உலோகத் திருமேனிகளைப் பதிவு செய்து ஆவணப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**54.3 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்**

திருக்கோயில்களில் உள்ள விலை மதிப்புமிக்க உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்க 34 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருக்கோயில்களில் உள்ள சிலைகள் மற்றும் தொலை தூரப் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகள் இந்த மையங்களில் வைத்து பாதுகாக்கப்படுகின்றன. திருவிழாக் காலங்களில் இத்திருமேனிகள், தொடர்புடைய திருக்கோயில்களுக்குக் கொண்டு சென்று திருவிழா முடிந்த பின்பு, மீண்டும் அத்திருமேனிகளை உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்திற்குக் கொண்டு வந்து பாதுகாப்பாக வைப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது 8,693 உலோக சிலைகள் 23 உலோக திருமேனிகள் பாதுகாப்பு மையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்த திருமேனிகள் பாதுகாப்பு மையங்களுக்கு கண்காணிப்பு கேமரா, கள்வர் எச்சரிக்கை மணி மற்றும் ஆயுதம் ஏந்திய காவலர் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உலோக திருமேனிகள் பாதுகாப்பு மையப் பட்டியல் இணைப்பு VI–இல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 11 உலோகத் திருமேனி மையங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த 11 உலோகத் திருமேனி மையங்களுக்கும் முழுநேரப் (24x7) பாதுகாப்பு அளிக்குமாறு காவல் துறையிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. புதிய உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்தின் பட்டியல் இணைப்பு VII–ல் வழங்கப்பட்டுள்ளது.

**54.4 பாதுகாப்பு அறைகள்**

திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகளை பாதுகாக்க கண்காணிப்பு கேமரா

மற்றும் கள்வர் எச்சரிக்கை மணி போன்ற நவீன பாதுகாப்பு வசதிகளுடன் கூடிய பாதுகாப்பு அறை ரூ.308.70 கோடி செலவில் இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாக நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், 1858 திருக்கோயில்களில் பாதுகாப்பு அறை கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தற்போது வரை 535 பாதுகாப்பு அறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 1323 பாதுகாப்பு அறைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றன.

### 54.5 திருக்கோயில் பாதுகாப்புப் படை

திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள், உண்டியல்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் ஆகியவற்றின் பாதுகாப்புக்காக "திருக்கோயில் பாதுகாப்புப் படை" என்ற ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் 1,000 நிலை–II காவலர்கள், 3,000 முன்னாள் இராணுவத்தினர் ஆகியோரை நியமனம்

செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. திருக்கோயில் பாதுகாப்புப் படையில் உள்ள முன்னாள் இராணுவத்தினருக்கு அளிக்கப்பட்டு வந்த மாதத் தொகுப்பூதியத்தினை ரூ.1,500/–லிருந்து ரூ.5,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**54.6 திருக்கோயில்களில் தீ–தடுப்பு நடவடிக்கைகள்**

திருக்கோயில்களில் தீ விபத்து மற்றும் இதர பேரிடர்களை தவிர்க்கும் பொருட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. துறையின் ஆளுகைக்குட்பட்ட சட்டப்பிரிவு 46(iii)–இன் கீழ் விளம்புகை செய்யப்பட்ட அனைத்து திருக்கோயில்களிலும் தீயணைப்பு துறையின் உதவிகளுடன் 6 மாதங்களுக்கு ஒருமுறை தீத்தடுப்பு தணிக்கை (Fire Audit) செய்யப்பட்டு வருகிறது. மேலும், தீயணைப்பு கருவிகள், மணல்/தண்ணீர் வாளிகள், மின்தடை கருவிகள், நீர்தூம்பிகள் முதலிய தீத்தடுப்பு சாதனங்கள் திருக்கோயில்களில் ஆங்காங்கே பொருத்தப்பட்டுள்ளன.

தீ விபத்து ஏற்படும்போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான தீத்தடுப்பு பயிற்சி திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது வரை சட்டப்பிரிவு 46(iii)–இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள 286 திருக்கோயில்களில் தீத்தடுப்பு தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**55. அருளாளர்கள் விழா**

**வள்ளலார் முப்பெரும் விழா**

2022–2023–ஆம் ஆண்டில் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வள்ளலார் நெறியினை கடைப்பிடிப்பவர்களை கொண்ட சிறப்புக் குழு அமைக்கப்பட்டு, 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 52 வாரங்கள் வள்ளலாரின் 200வது ஆண்டு பிறந்தநாள், தர்ம சாலை தொடங்கி 156–வது ஆண்டு மற்றும் ஜோதி தரிசனத்தின் 152–வது ஆண்டு ஆகிய முப்பெரும் விழா கொண்டாடப்பட்டது. விழாவின்போது அன்னதானம் வழங்கப்பட்டது.

5.10.2022ல் தொடங்கப்பட்ட மேற்படி முப்பெரும் விழா கடந்த 05.10.2023 அன்று வடலூரில் வெகு விமரிசையாக முடிவுற்றது.

**55.2 சித்தர் விழா**

கமலமுனி சித்தருக்கு வைகாசி மாதம் பூசம் நட்சத்திரத்தன்று திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் சார்பிலும், சுந்தரானந்த சித்தருக்கு ஆவணி மாதம் ரேவதி நட்சத்திரத்தன்று மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் சார்பிலும், பாம்பாட்டி சித்தருக்கு கார்த்திகை மாதம் மிருகசீரிடம் நட்சத்திரத்தன்று சங்கரன்கோயில் அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில் சார்பிலும் ஆண்டுதோறும் சித்தர் விழா சிறப்புற நடத்தப்பட்டு வருகிறது.

**55.3 சேக்கிழார் விழா**

சேக்கிழார் ஒரு புனிதத் துறவி. சிவபெருமானைப் போற்றி அவர் எழுதிய 'பெரியபுராணம்' எனும் நூல் 63 நாயன்மார்களை பற்றிய ஒரு தொகுப்பாகும்.

இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் தெய்வச் சேக்கிழார் பிறந்த இடமான சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூரில், சேக்கிழார் திருநட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் சேக்கிழார் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவிற்கு இதற்கென ஏற்படுத்தப்பட்ட மூலதன நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலிலும் ஆகஸ்ட் திங்கள்தோறும் 12 நாட்களுக்கு பன்னிரு திருமுறை விழாவும், சேக்கிழார் விழாவும் கொண்டாடப்படுகின்றன.

### 55.4 திருஞானசம்பந்தர் இசை விழா

சிறந்த சமய அருளாளரான திருஞானசம்பந்தரைப் போற்றும் வகையில் செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் திருஞானசம்பந்தர் இசை விழா ஆண்டுதோறும் வைகாசி மாதம் மூல நட்சத்திர தினத்தன்று

கொண்டாடப்படுகிறது. இதற்கான செலவு இந்து சமய அறநிலைக் கொடைகள் பொதுநல நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

### 55.5 ஔவையார் விழா

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாப்பட்டினம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் தமிழ் மூதாட்டி ஔவையார் கோயில் கொண்டுள்ளார். இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் சதய நட்சத்திரத்தன்று ஔவையார் விழா கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் துளசியாப்பட்டினத்தில் நடைபெறும் இந்த விழாவிற்கு இதற்கான மூலதன நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

### 55.6 தாயுமானவர் விழா

தமிழ் ஞானப் பாடல்களை உலகிற்கு அருளிய தாயுமானவ அடிகளைப் போற்றும் வகையில் தாயுமானவர் விழா திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை,

அருள்மிகு தாயுமானவசுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

### 55.7 திருவள்ளுவர் திருநாள்

ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் பிறந்த நாளாக நம்பப்படும் தைத் திங்கள் இரண்டாம் நாளன்று சென்னை, மயிலாப்பூரில் அமைந்துள்ள தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருக்கோயிலில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின்போது பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, ஒப்புவித்தல் போட்டி, கட்டுரைப்போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப்படுகின்றன.

### 55.8 அருணகிரிநாதர் விழா

அருளாளர் அருணகிரிநாதருக்கு திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் ஆவணி மாதம், "கேட்டை" நட்சத்திரத்தன்று "முக்திப்பேறுவிழா" ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மேலும், திருவண்ணாமலையில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில்

அருணகிரிநாதர் மணி மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு, அதில் அமைந்துள்ள அருணகிரிநாதர் சிலைக்கு 20.10.2023 அன்று திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றது.

### 55.9 கோச்செங்கட்சோழ நாயனார் விழா

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான அருட்திரு கோச்செங்கட்சோழ நாயனார் அவதரித்த திருநாளான மாசி மாதம், சதய நட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் "கோச்செங்கட்சோழ நாயனார் விழா" திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவானைக்காவல், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலில் கொண்டாடப்படுகிறது.

### 55.10 ஆழ்வார்கள் விழா

பன்னிரண்டு ஆழ்வார்களால், திருமாலின் வைபவங்களை மங்களாசாசனம் செய்த பாசுரங்கள் நாலாயிர திவ்வியப்பிரபந்தம் என்று போற்றப்படுகிறது. ஆண்டுதோறும் பன்னிரு ஆழ்வார்களுக்கும் அவரவர் திருநட்சத்திர நாளில் திருச்சிராப்பள்ளி

மாவட்டம், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் "ஆழ்வார்கள் விழா" சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

### 55.11 மங்கையர்க்கரசியார் விழா

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், பழையாறை கிராமம் அருள்மிகு சோமநாதசுவாமி திருக்கோயிலானது, சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலுடன் இணைந்த உபகோயிலாகும். இந்த பழையாறை கிராமத்தில் சைவ சமயத்தைச் சார்ந்த 63 நாயன்மார்களில் ஒருவரான மங்கையர்க்கரசியார் மணிமுடிசோழனின் மகளாகப் பிறந்தார்.

இங்கு அமைந்துள்ள அருள்மிகு சோமநாதசுவாமி திருக்கோயிலில் அவருக்கு தனியாக திருவுருவம் உள்ளது. மங்கையர்க்கரசியார் சித்திரை மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர் என்பதால், ஆண்டுதோறும் மேற்காணும் நட்சத்திர தினத்தில் அவருக்கு விழா எடுக்கப்படுகிறது. அன்றைய

தினத்தில் மங்கையர்க்கரசியாருக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனைகள் செய்யப்பட்டு ஓதுவார்கள் சைவ திருமுறைகள் பாட, வீதி உலா நடைபெற்று விழா நிறைவு பெறும். ஆண்டுதோறும் இவ்விழா திருக்கோயில் நிர்வாகத்தின் சார்பில் நடத்தப்படுகிறது.

**55.12 பாவை விழா**

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள், 'திருப்பாவை' என்ற தலைப்பின் கீழ் 30 பாசுரங்கள் அருளியுள்ளார். இப்பாசுரங்கள் தமிழ் மாதம் மார்கழியில் முப்பது நாட்களிலும் பக்தர்களால் பாடப்படுகின்றன.

மாணிக்கவாசகர் சிவபெருமானைத் துதித்து அருளிய திருவெம்பாவை மற்றும் திருப்பள்ளியெழுச்சி பாடல்கள் பக்தர்களால் மார்கழி மாதத்தில் பாடப்படுகின்றன.

ஆண்டுதோறும் 'மார்கழி' திங்களில் திருப்பாவை, திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டிகள் திருக்கோயில்களில் நடைபெறுவது வழக்கத்தில் உள்ளது. பாவை விழா மாவட்ட அளவில் சிறப்பாகக்

கொண்டாடப்படுகிறது. ஐந்தாம் வகுப்பு வரை, ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை மற்றும் ஒன்பது முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலான பல்வேறு பிரிவுகளில் திருப்பாவை, திருவெம்பாவை பண்ணோடு பாடும் போட்டி, கட்டுரைப் போட்டி என தனித்தனியாக போட்டிகள் நடத்தப்படுகின்றன.

### 55.13 திருக்கோயில்களில் அறிவிக்கப்பட்ட விழாக்கள்

முக்கியத் திருக்கோயில்களில் அறிவிக்கப்பட்ட விழாக்கள் கீழ்க்கண்டவாறு கொண்டாடப்படுகின்றன.

| வ. எண் | திருவிழா மற்றும் திருக்கோயில் பெயர் | இடம் | தமிழ் மாதம் |
|---|---|---|---|
| 1. | மீனாட்சி திருக்கல்யாணம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் | மதுரை | சித்திரை |
| 2. | கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்குதல், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில். | மதுரை | சித்திரை |
| 3. | சித்திரைத் திருத்தேர் விழா, அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் | ஸ்ரீரங்கம் | சித்திரை |

| | | | |
|---|---|---|---|
| 4. | சித்திரைத் திருத்தேர் விழா, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் | சமயபுரம் | சித்திரை |
| 5. | ஆடிக் கிருத்திகை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் | திருத்தணி | ஆடி |
| 6. | தசரா திருவிழா, அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோயில் | குலசேகரப் பட்டணம் | புரட்டாசி |
| 7. | கந்தசஷ்டி, சூரசம்ஹாரம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் | திருச்செந்தூர் | ஐப்பசி – கார்த்திகை |
| 8. | கார்த்திகை தீபம், அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் | திருவண்ணா மலை | கார்த்திகை |
| 9. | வைகுண்ட ஏகாதசி, அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் | ஸ்ரீரங்கம் | மார்கழி |
| 10. | பூ சொரிதல் விழா, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் | சமயபுரம் | மாசி |

| | | | |
|---|---|---|---|
| 11. | மாசிக் கொடை விழா, அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில் | மண்டைக்காடு | மாசி |
| 12. | குண்டம் திருவிழா, அருள்மிகு பண்ணாரியம்மன் திருக்கோயில் | பண்ணாரி, சத்தியமங்கலம் | பங்குனி |

### 55.14 மகா சிவராத்திரி விழா

சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் மகா சிவராத்திரி விழா, நாட்டியம், நாடகம், பட்டிமன்றம், கிராமிய கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளுடன் மிகச் சிறப்பான முறையில் 2022–2023–ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. பின்வரும் 7 திருக்கோயில்களில் சிறந்த முறையில் மகா சிவராத்திரி விழா பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் 2023–2024–ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.

| வ.எண். | திருக்கோயில்கள் |
|---|---|
| 1. | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர் |

| | |
|---|---|
| 2. | அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயில், பேரூர் |
| 3. | அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி |
| 4. | அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை |
| 5. | அருள்மிகு பெருவுடையார் திருக்கோயில், தஞ்சாவூர் |
| 6. | அருள்மிகு ஜெம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சி |
| 7. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை |

### 55.15 நவராத்திரி விழா

சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் திருக்கோயில்களின் சார்பில் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது.

### 55.16 பௌர்ணமிநாளில் 108 திருவிளக்கு பூஜை

அம்மன் திருக்கோயில்களில் மாதந்தோறும் பௌர்ணமிநாளில் 108 திருவிளக்கு பூஜை செய்தல் நடைமுறையில் உள்ளது. இந்த பௌர்ணமிநாள் வழிபாடு பெண் பக்தர்கள் அதிக அளவில்

பங்கேற்கும் வகையில் நெறிப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

2022–2023–ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்புகளின்படி தற்போது கீழ்க்கண்ட 17 திருக்கோயில்களில் மாதந்தோறும் வரப்பெறும் பௌர்ணமி தினங்களில் திருவிளக்கு பூஜை தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது:–

**2022–2023**

1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.
2. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு.
3. அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், மேல்மலையனூர்.
4. அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி.
5. அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில், மண்டைக்காடு, கன்னியாகுமரி மாவட்டம்.
6. அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோயில், குலசேகரப்பட்டனம்.

7. அருள்மிகு அபிராமி அம்மன் திருக்கோயில், திண்டுக்கல்.
8. அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு.
9. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்.
10. அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், மீனாட்சிபுரம், காரைக்குடி.
11. அருள்மிகு காளிகாம்பாள் திருக்கோயில், சென்னை.
12. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், புன்னைநல்லூர். தஞ்சாவூர்

2023–2024

13. அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை.
14. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இருக்கண்குடி, விருதுநகர் மாவட்டம்.
15. அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயில், பட்டீசுவரம், தஞ்சாவூர் மாவட்டம்.
16. அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில், பெரியபாளையம், திருவள்ளூர் மாவட்டம்.
17. அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயில், அ.கோ.படைவீடு, திருவண்ணாமலை மாவட்டம்.

108 திருவிளக்கு பூஜைக்கான அங்கீகரிக்கப்பட்ட திட்டச் செலவு ரூ.800/- ஆகும். இதில் நான்கில் ஒரு பங்கு அதாவது ரூ.200/- மட்டுமே திருவிளக்கு பூஜையில் கலந்து கொள்ளும் பக்தர்களிடமிருந்து கட்டணமாக பெறப்படுகிறது. இதர செலவுகள் திருக்கோயிலால் மேற்கொள்ளப்படுகிறது. திருவிளக்கு பூஜையில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு பித்தளை காமாட்சியம்மன் விளக்கு, குங்குமச்சிமிழ், புடவை மற்றும் ஜாக்கெட் போன்றவை வழங்கப்பட்டு வருகிறது.

**56. அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு**

உலக முருக பக்தர்கள் அனைவரும் முருகப் பெருமானின் பெருமைகளை அறிந்து கொள்ளும் வகையில் 27.02.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்ட தீர்மானத்தின்படி 2024-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 மற்றும் 25 ஆகிய இரு

தினங்கள் பழநியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு சிறப்புற நடைபெறவுள்ளது.

## 57. கல்வி மற்றும் அறப்பணிகள்

### கல்வி நிறுவனங்கள்

திருக்கோயில்களில் உபரி நிதியை தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 பிரிவு 66(1)–ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக பயன்படுத்த சட்டப்பிரிவு 36 வழிவகை செய்கிறது. பொது கல்வியோடு, ஆன்மிக நெறிகளையும், பண்பாடு மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் நோக்கோடு பின்வரும் பள்ளிகளையும், கல்லூரிகளையும், பாடசாலைகளையும் திருக்கோயில் நிருவாகங்கள் நடத்தி வருகின்றன.

கல்வி நிறுவனங்களின் விவரங்கள் இணைப்பு VIII–ல் வழங்கப்பட்டுள்ளது.

**கல்வி நிறுவனங்களின் வகைப்பாடு**

| வ. எண். | கல்வி நிறுவனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 9 |

| | | |
|---|---|---|
| 2. | பல்தொழில்நுட்பக் கல்லூரி | 1 |
| 3. | மேல்நிலைப் பள்ளிகள் | 11 |
| 4. | உயர்நிலைப் பள்ளிகள் | 5 |
| 5. | தொடக்கப் பள்ளிகள் | 6 |
| 6. | மெட்ரிகுலேஷன் பள்ளி | 2 |
| 7. | சி.பி.எஸ்.இ. பள்ளி | 1 |
| 8. | நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப் பயிற்சி பள்ளிகள் | 3 |
| 9. | அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் | 6 |
| 10. | வேத ஆகம பாட சாலைகள் | 3 |
| 11. | ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள் | 3 |
| 12. | நாலாயிர திவ்ய பிரபந்த பயிற்சிப்பள்ளி | 1 |
| | **கூடுதல்** | **51** |

கடந்த 21.10.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, கொளத்தூர், அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியையும், 01.12.2021 அன்று திருச்செங்கோடு, அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம், அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி கலை மற்றும்

அறிவியல் கல்லூரி மற்றும் விளாத்திகுளம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகியவற்றையும் தொடங்கி வைத்தார்கள். அறிவிக்கப்பட்ட 10 புதிய கல்லூரிகளில் மேற்சொல்லப்பட்ட 4 கல்லூரிகள் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றன.

**57.2 பள்ளி, கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள்**

இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கு, நிதிவசதிமிக்க திருக்கோயில்களிடமிருந்து உபரி நிதியை பெற்று, ரூ.10 கோடி மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மூலதன நிதியிலிருந்து கிடைக்கப்பெறும் திரள் வட்டித் தொகையினைக் கொண்டு கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள், கணினிகள், குடிநீர் மற்றும் கழிப்பறைகள் போன்ற வசதிகள் செய்து தரப்பட்டு வருகின்றன.

2021-2022-ஆம் ஆண்டில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கென அடிப்படை வசதிகளை

மேற்கொள்ள ரூ. 26.26 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2022–2023–ஆம் ஆண்டில், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் வளர்ச்சி பணிகள் மேற்கொள்வதற்காக ரூ.30.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2023–2024–ஆம் ஆண்டில், பள்ளிகளில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்வதற்காக ரூ.21.85 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **கல்வி ஆண்டு** | **பணிகளின் எண்ணிக்கை** | **தொகை (ரூபாய் கோடியில்)** |
|---|---|---|
| 2021–2022 கல்லூரி மேம்பாட்டுப் பணிகள் | 27 | 13.41 |
| 2022–2023 கல்லூரி மேம்பாட்டுப் பணிகள் | 7 | 28.11 |

| **கல்வி ஆண்டு** | **பணிகளின் எண்ணிக்கை** | **தொகை (ரூபாய் கோடியில்)** |
|---|---|---|
| 2021–2022 பள்ளிகள் மேம்பாட்டுப் பணிகள் | 83 | 12.85 |
| 2022–2023 பள்ளிகள் மேம்பாட்டுப் பணிகள் | 7 | 2.33 |

| | | |
|---|---|---|
| 2023-2024 பள்ளிகள் மேம்பாட்டுப் பணிகள் | 3 | 21.85 |

**57.3 காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை**

சென்னையில் உள்ள காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 32 கிரவுண்டு நிலம் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் 13.06.2021 அன்று திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. இவ்விடத்தில் செயல்பட்டு வந்த சீதா கிங்ஸ்டன் ஹவுஸ் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி திடீரென்று தனது செயல்பாட்டை நிறுத்திக் கொண்டதால், பள்ளியில் பயின்று வந்த மாணவ மாணவியரின் நலனையும், பணிபுரிந்து வந்துள்ள ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் நலனையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளியின் நிருவாகப் பொறுப்பை, திருக்கோயிலே தன்வசம் எடுத்துக் கொள்ளுமாறு ஆணை பிறப்பித்தார். தற்போது

இப்பள்ளி காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு திருக்கோயிலின் பொறுப்பில் திறம்படச் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் தற்போது 1067 மாணவர்களும், 49 ஆசிரியர்களும் உள்ளனர். ரூபாய் 1.43 கோடி மதிப்பீட்டில் இப்பள்ளியின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளும், ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைக்கான கட்டடம் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**58. பயிற்சிப்பள்ளிகள்**

**அர்ச்சகர் பயிற்சிப்பள்ளி**

2006–ஆம் ஆண்டு, கோயில்களில் சமூக நீதிக் கொள்கையை அமல்படுத்தவும், கடவுளின் சேவையில் அனைவரும் சமமாக நடத்தப்படுவதை உறுதி செய்யவும் அரசு தீர்மானித்தது. கோவிலில் பூஜை செய்யும் வாய்ப்பை சாதியின் அடிப்படையில் மட்டும் யாரும் மறுக்கக் கூடாது. அர்ச்சகர் பயிற்சிப்

பள்ளியானது கீழ்க்கண்ட விவரப்படியான 6 திருக்கோயில்கள் சார்பாக நடைபெற்று வருகிறது;–

I. அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில், திருவல்லிக்கேணி
II. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
III. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி
IV. அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில் திருச்செந்தூர்
V. அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை
VI. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

மேற்கண்ட 6 திருக்கோயில்களில் 111 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இந்த பள்ளிகள் குருகுல அடிப்படையில் உணவு மற்றும் தங்கும் வசதியுடன் நடத்தப்படுகின்றன. இங்கு பயிலும் மாணவர்களுக்கு மாத இறுதியில் உதவித்தொகையாக ரூ.4000/– மட்டும் பயிற்சி காலமான ஓராண்டிற்கு வழங்கப்படுகிறது.

**58.2 வேத ஆகம பயிற்சிப் பள்ளி**

வேத ஆகம பயிற்சிப்பள்ளியானது கீழ்க்கண்ட விவரப்படியான 3 திருக்கோயில்கள் சார்பாக நடைபெற்று வருகிறது:–

I. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி
II. அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்
III. அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை

மேற்கண்ட பயிற்சிப் பள்ளிகளில் 36 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இந்த பள்ளிகள் குருகுல அடிப்படையில் உணவு மற்றும் தங்கும் வசதியுடன் நடத்தப்படுகின்றன. இங்கு முழுநேரமாக பயிலும் மாணவர்களுக்கு மாதம் உதவித்தொகையாக ரூ.4,000/–ம் பகுதி நேரமாக பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.2,000/–மும் பயிற்சி காலத்தில் வழங்கப்படுகிறது.

**58.3 ஓதுவார் பயிற்சிப் பள்ளி**

திருக்கோயில்களில் இறைவனின் மொழியாகிய தமிழ் தேவார திருமுறைகள் ஓங்கி ஒலித்திட வழிவகை செய்யும் பொருட்டு கீழ்க்கண்ட விவரப்படியான 3 திருக்கோயில்கள் சார்பாக ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள் நடைபெற்று வருகிறது:–

I. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
II. அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை
III. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்

மேற்கண்ட பயிற்சிப் பள்ளிகளில் 45 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இவர்களுக்கு உணவுடன் தங்கும் வசதி செய்து தரப்படுகிறது. முழு நேரம் பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.4,000/–ம் பகுதி நேரமாக பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.2,000/–மும் உதவித் தொகையாக பயிற்சி காலத்தில் வழங்கப்படுகிறது.

**58.4 தவில் மற்றும் நாதஸ்வரம் பயிற்சிப்பள்ளி**

திருக்கோயில்களில் கால பூஜை மற்றும் திருவிழாக்காலங்களில் தவில் மற்றும் நாதஸ்வரம் இசைக்கப்பட்டு வருகிறது. இந்த நடைமுறை சமய பழக்கவழக்கங்களில் ஒன்றாகும். இதன் காரணமாக, 1957 முதல் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் தவில் மற்றும் நாதஸ்வரம் பயிற்சிப் பள்ளி தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் தற்போது 44 மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். இந்நிலையில் கடந்த, 2021-2022-ஆம் நிதியாண்டில் சட்டமன்ற அறிவிப்பின்படி, திருநாகேஸ்வரம், அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் நடத்தும் தவில் மற்றும் நாதஸ்வரம் பயிற்சிப் பள்ளி மேம்படுத்தப்பட்டு தற்போது 24 மாணவர்களுடன் செயல்பட்டு வருகிறது. திருத்தணி, அருள்மிகு கோட்டா ஆறுமுக சுவாமி திருக்கோயில் நடத்தும் தவில் மற்றும் நாதஸ்வரம் பயிற்சிப்பள்ளி மேம்படுத்தப்பட்டு தற்போது

7 மாணவர்களுடன் செயல்பட்டு வருகிறது. மொத்தம் 75 மாணவர்கள் இந்த பயிற்சிப்பள்ளிகளில் பயின்று வருகின்றார்கள். இவர்களுக்கு தங்கும் வசதி மற்றும் உணவுடன் மாதம் ரூ.4,000/-ம், பகுதி நேரமாக பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.2,000/-மும் உதவித் தொகையாக பயிற்சி காலத்தில் வழங்கப்படுகிறது.

**58.5 நாலாயிர திவ்யபிரபந்த பயிற்சிப் பள்ளி**

நாலாயிர திவ்யபிரபந்தங்கள் என்பது 12 ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட பாசுரங்கள் ஆகும். உற்சவ மூர்த்தி புறப்பாடு ஆகும் போதும் மண்டபத்தில் வைத்து பூஜை செய்யும் போதும் திவ்யபிரபந்த பாசுரங்கள் பாராயணம் செய்யப்படும்.

2021-2022-ஆம் ஆண்டில் மாமல்லபுரத்தில் உள்ள ஆளவந்தார் அறக்கட்டளைக்கு சொந்தமான இடத்தில் புதிய வைணவ பிரபந்த பாடசாலை துவங்குவதற்கு ரூ.96 இலட்சம் மதிப்பில் புதிய கட்டடம் கட்ட அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் முடிவுற்றது.

2022–2023 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட பயிற்சிப்பள்ளி (பகுதி நேரம்) ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயிலில் இயங்கி வருகிறது. பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 25 ஆகும். பயிற்சிக்காலம் 4 வருடங்கள் ஆகும்.

**59. சமூக நல நிறுவனங்கள்**

திருக்கோயில்கள், வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாது சமூக நோக்கத்தோடு முதியோர் இல்லங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றை நடத்தும் அறநிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. தற்போது 6 கருணை இல்லங்கள் செயல்பாட்டில் உள்ளன. 6 சித்த மருத்துவமனைகள் மற்றும் ஒரு மனநலக்காப்பகம் ஆகியன திருக்கோயில்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

**59.2 புதிய சித்த மருத்துவமனை**

2021–2022 சட்டமன்ற அறிவிப்பின்படி பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பாக சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கும்

பொருட்டு, சித்த மருத்துவமனை குறைந்தபட்சம் 2 ஆண்டுகளுக்கு நடத்தினால் மட்டுமே சித்த மருத்துவக் கல்லூரி தொடங்க அனுமதி கிடைக்கும் என்ற நிபந்தனையை நிறைவேற்றும் பொருட்டு சித்த மருத்துவமனை 25.12.2022 அன்று போதிய மருத்துவர் மற்றும் செவிலியர்களுடன் தொடங்கப்பட்டது. இதுவரை 33807 நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

**59.3 திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் அமைத்தல்**

2021–2022–ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் பக்தர்கள் அதிக அளவில் வருகைபுரியும் திருக்கோயில்களில் தேவையான மருத்துவர் மற்றும் மருத்துவப் பணியாளர்களுடன் கூடிய முதலுதவி மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து 10 திருக்கோயில்களில் 31.12.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால்

காணொலிக்காட்சி வாயிலாக முதலுதவி மருத்துவ மையங்கள் திறந்து வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, 2022–2023–ஆம் நிதியாண்டில் மானியக் கோரிக்கையில் கூடுதலாக 5 திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட 5 திருக்கோயில்களில் 02.12.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலிக்காட்சி வாயிலாக மருத்துவ மையங்கள் திறந்து வைக்கப்பட்டன.

மேலும், 2022–2023–ஆம் நிதியாண்டில் மானியக் கோரிக்கையில் கூடுதலாக 2 திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட 2 திருக்கோயில்களில் 06.03.2024 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டன. நாளதுவரை

கீழ்க்காணும் 17 திருக்கோயில்களில் மருத்துவர் மற்றும் மருத்துவப் பணியாளர்களுடன் கூடிய மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்பட்டு பக்தர்கள் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி மருத்துவ மையங்கள் மூலம் இதுவரை ரூ.4.68 இலட்சம் பயனாளர்கள் பயனடைந்துள்ளனர்:—

1. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி.
2. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்.
3. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.
4. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி.
5. அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை.
6. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம்.
7. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், திருவரங்கம்.
8. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை.

9. அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர்.
10. அருள்மிகு அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், மேல்மலையனூர்.
11. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.
12. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இருக்கண்குடி.
13. அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி.
14. அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில், மதுரை.
15. அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோயில்.
16. அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில், கந்தக்கோட்டம், சென்னை.
17. அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோவை.

**60. பதிப்பக வெளியீடு**
**தல வரலாறு மற்றும் தல புராணம்**

2021–2022–ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பு மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் தலைமையிலான ஆலோசனைக் குழுவின் தீர்மானங்களின்படி, பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு எளிதில் கிடைக்காத பழைய அரிய சமய நூல்களை மறுபதிப்பு செய்ய இத்துறையின் வெளியீட்டுப் பிரிவு உருவாக்கப்பட்டது. இதன் மூலம் திருக்கோயில்களின் தலவரலாறு (கோயில்களின் வரலாறு) மற்றும் தலபுராணம் (கோயில்களின் புராணங்கள்) ஆகியவற்றைப் படிக்க, பழங்கால கோவில்களின் பாரம்பரியம், வரலாறு, முக்கியத்துவம், புராணங்கள், கட்டடக்கலை, கல்வெட்டுகள் மற்றும் வழிபாட்டின் முக்கியத்துவத்தை பொதுமக்கள் அறிந்து கொள்ள முடியும்.

19.01.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 108 அரிய பழைய சமயத் தமிழ் நூல்கள் மறுபதிப்பு வெளியிடப்பட்டது. முதற்கட்டமாக, மறுபிரசுரம் செய்யப்பட்ட சில நூல்கள் சிற்ப சாஸ்திர நூல்கள், ஆலய நிர்மாண பிம்ப லட்சண நூல், சிற்ப செந்நூல், இந்து மத இணைப்பு விளக்கம்,

சைவமும் வைணவமும் முதலானவை. மேலும் முதற்கட்டமாக 108 புத்தகங்களும் இரண்டாம் கட்டமாக 108 புத்தகங்களும் அச்சிடப்பட்டு பொதுமக்கள் பயன்பெறும் வகையில், திருக்கோயில்களில் உள்ள 103 ஆன்மிக புத்தக விற்பனை நிலையங்களிலும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள புத்தக விற்பனைக் கூடத்திலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**60.2 "திருக்கோயில்" திங்களிதழ்**

இந்து சமய அறநிலையத்துறையால் 1958 ஆம் ஆண்டு முதல் "திருக்கோயில்" என்ற பெயரில் திங்களிதழ் வெளியிடப்படுகிறது. இந்த மாத இதழ் ஆன்மிக சான்றோர்கள் மற்றும் தலைசிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகள், துணுக்கு செய்திகள் மற்றும் ஆன்மிக வினா விடைகள் என எழில்மிகு வண்ணங்களுடன் வெளியிடப்படுகின்றன. சந்தாதாரர்கள் பயனடையும் வகையில் இணைய

வழியாக (online) சந்தா செலுத்தி இவ்விதழை பெறுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 60.3 ஓலைச்சுவடி

திருக்கோயில்கள் நமது தொன்மத்தின் அடையாளம் என தமிழ் மொழி பதிவு செய்கிறது. இதனால் இம்மொழி மதிப்பார்ந்த பக்தி மொழியாகக் கருதப்படுகிறது. பழங்கால சிற்பங்கள், உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள் உள்ளிட்டவைகளை தன்னகத்தே கொண்டு திருக்கோயில்கள் பாதுகாத்து வருகின்றன. ஆவணப்படுத்த வேண்டிய தகவல்களை பதிவு செய்ய முன்னோர்கள் காகிதப் பயன்பாடு வருவதற்கு முன் பனைவோலைகளையே பதிவுத் தாள்களாக பயன்படுத்தி வந்தனர். திருக்கோயில்கள் சார்ந்த ஆவணப்பதிவுகளுக்கு திருக்கோயில்களே பாதுகாப்பு பெட்டகங்களாக இருந்துள்ளன.

அந்நாளில் அன்றாடம் நடைபெற்ற திருக்கோயில் நிர்வாகம், மன்னர்களால் திருக்கோயில்களுக்கு வழங்கிய கொடை முதலிய விவரங்களை

ஓலைச்சுவடிகள் தெரிவிப்பதால், பண்டைய கால கலாச்சாரத்தின் பிம்பங்களாக திகழ்வதால் ஓலைச்சுவடிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்விவரங்களை வருங்கால தலைமுறை அறிந்து கொள்ளும் வகையில் ஓலைச்சுவடிகளை மின்பதிவாக்கி தற்கால தமிழுக்கு மாற்றும் நடவடிக்கையில் உள்ளது.

இந்து சமய அறநிலையத்துறையால் இப்பணி உலக தமிழாராய்ச்சி நிறுவன சுவடியியல் துறையில் ஒப்படைக்கப்பட்டு, 979 திருக்கோயில்கள் கள ஆய்வு செய்யப்பட்டன. இவற்றில் 31 திருக்கோயில்களில் ஓலைச்சுவடிகள் உள்ளன. இதுவரை 2,12,585 ஓலைச்சுவடிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. செப்பேடுகள் 22, செப்பு பட்டயங்கள் 67, வெள்ளி ஏடுகள் 2, தங்க ஏடு 1 மற்றும் 365 இலக்கியச் சுவடிகளும் கிடைத்துள்ளன. இதில் மொத்தம் 26,734 சுவடிகள் அறிவியல் முறைப்படி உலக தமிழாராய்ச்சி நிறுவனத்தால்

பராமரிக்கப்பட்டுள்ளன. பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**60.4 ஓலைச்சுவடி பாதுகாப்பு மையம்**

திருக்கோயில்களில் கண்டறியப்பட்ட ஓலைச் சுவடிகளை ஒளிவருடல் செய்து நூலாக்கம் செய்வதற்கும் திருக்கோயில்களில் உள்ள மூலிகை சுவர் ஓவியங்களை பாதுகாத்திடவும், சென்னை ஆணையர் அலுவலகத்தில் ஆய்வு மையம் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் அமைய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**61. பயிற்சித் திட்டங்கள்**

**புத்தொளிப் பயிற்சி**

திருக்கோயில்களில் பணிபுரியும் 'அர்ச்சகர்கள்', 'பட்டாச்சாரியார்கள்', 'ஓதுவார்கள்' தங்கள் பணிகளைத் திறம்பட செய்திட ஏதுவாக 1991–ஆம் ஆண்டு "புத்தொளிப் பயிற்சி திட்டம்" தொடங்கப்பட்டது. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் இறையுணர்வை மதித்து வழிபாட்டு முறைகளைக்

கனிவோடு செய்திட திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்கும் இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

துறைப்பணியாளர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்களுக்கு புத்தொளிப்பயிற்சி வகுப்புகள் நடத்த முடிவு செய்யப்பட்டு இதற்காக திருத்தணி அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் ஒரு நிர்வாக பயிற்சி மையம் கட்டப்பட்டு வருகிறது.

## 62. திருக்கோயில் பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள்

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பல்வேறு வகையான பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களது நலன் காத்திட பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 62.2 குடும்ப நல நிதித் திட்டம்

பணிக்காலத்தில் இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்காக "குடும்ப நல

நிதித் திட்டம்" ஏற்படுத்தப்பட்டது. இந்த திட்டத்திற்காக, திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூபாய் 15 கோடி மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு ரூபாய் 3 இலட்சம் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

### 62.3 திருக்கோயில் பணியாளர்கள் நல நிதி

நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.6.5 கோடி பெறப்பட்டு "திருக்கோயில் பணியாளர்கள் நல நிதி" என்ற ஒரு மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களில், ரூ.750/–க்கும் குறைவாக மாத ஊதியம் பெறுகின்றவர்களின் ஊதிய நிலுவைத் தொகை மேற்கண்ட மூலதன நிதியிலிருந்து கிடைக்கும் திரள் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

மேலும், ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சம் மற்றும் அதற்கு மேலாக உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு, அவர்கள் தங்களது சேவைக் காலத்தின்போது செலுத்தி வந்துள்ள சந்தா தொகையுடன் ரூ.5,000/-ம் சேர்த்து ஓய்வு பெறும் போது சிறப்பு வருங்கால சேமநல நிதி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த மூலதன நிதியிலிருந்து பெறப்படுகின்ற திரள் வட்டித் தொகையினைக் கொண்டு திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் இசைவாணர்களுக்கு ஊதிய நிலுவைத் தொகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒரு கால பூசை திட்ட திருக்கோயில்களில், அர்ச்சகர்களின் மகன் / மகளுக்கு மேற்படிப்பிற்கு உயர்கல்வியில் கல்வி உதவி தொகையாக ஆண்டொன்றுக்கு ரூ.10,000/- வீதம் 400 மாணவ மாணவியருக்கு மொத்தம் ரூ.40 இலட்சம், பள்ளி மற்றும் கல்லூரிகள் மேம்பாட்டு நிதி மூலம் வழங்கப்பட்டது.

### 62.4 கருணை அடிப்படையில் பணி நியமனம்

திருக்கோயில்களில் பணியில் இருக்கும்போது இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு "கருணை அடிப்படையில் பணி நியமனம்" வழங்கப்படுகிறது. திருக்கோயில்களில் பணியின்போது இறந்த 109 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 62.5 இசைவாணர்கள் மற்றும் ஓதுவார்கள் நியமனம்

திருக்கோயில்களில் திருவிழாக்களின்போது மங்கல இசை இசைக்கப்படுவது வழக்கத்தில் உள்ளது. இந்த நோக்கத்திற்காக, திருக்கோயில்களில் போதிய எண்ணிக்கையிலான இசைக்கலைஞர்கள் மற்றும் ஓதுவார்கள் பணி நியமனம் செய்யப்படுகிறார்கள்.

### 62.6 ஓய்வூதியத் திட்டம்

'அர்ச்சகர்', 'ஓதுவார்', 'வேதபாராயணர்', 'அரையர்', 'திவ்ய பிரபந்தம் பாடுவோர்', 'இசைக் கலைஞர்கள்'

ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டம் வகுக்கப்பட்டது. திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து, 60 வயது நிறைவடைந்து ஓய்வுபெற்றுள்ள அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்ய பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கு மாதந்தோறும் ரூ. 1,000/- ஓய்வூதியமாக அரசால் வழங்கப்பட்டு வந்தது.

அரசு நிதியிலிருந்து மாதந்தோறும் ரூ.1,000/- வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியம், ரூ.3000/- ஆக 2021-2022-ஆம் நிதியாண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 84 ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுகின்றனர்.

**62.7 திருக்கோயிலில் பணிபுரியும் இதர பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்**

திருக்கோயில் பணியாளர்களுக்கென இருவகை ஓய்வூதியத் திட்டங்கள் 2006-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**(i) பணியாளர் சேமநல நிதித் திட்டம்**

நிதி வசதிமிக்க திருக்கோயில்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் இத்திட்டம் பொருந்தக் கூடியதாகும். இத்திட்டத்தின்படி, வருங்கால சேமநல நிதித் திட்டத்தில் சேர்ந்துள்ள திருக்கோயில் பணியாளர்களில், 13.02.2006 முதல் ஓய்வுபெற பத்து ஆண்டிற்கு மேல் பணிக்காலம் உள்ளவர்கள், பணியாளர் சேமநல நிதித் திட்டத்தின் கீழ், ஓய்வூதியம், குடும்ப நல ஓய்வூதியம் ஆகிய பயன்களைப் பெறுவர்.

**(ii) துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்**

01.01.2006 முதல் ஓய்வு பெறுவதற்கு பத்து ஆண்டிற்கு கீழ் பணிக்காலம் உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கும், பத்து ஆண்டிற்கு மேல் பணிக்காலம் இருந்தும் பணியாளர் சேமநல நிதித் திட்டத்தில் சேர்க்கும் அளவிற்கு நிதிவசதியில்லாத திருக்கோயில்களில் பணியாற்றுபவர்களுக்கும், துறை நிலையிலான

ஓய்வூதியம் பெறும் திட்டம் 2006–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் 5091 ஓய்வு பெற்ற பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**(iii) குடும்ப ஓய்வூதியம்**

துறை நிலையிலான ஓய்வூதியர் இறந்துவிட்டால், அவரது நேரடி வாரிசுதாரர்களான கணவனோ, மனைவியோ வாழ்நாள் முழுவதும் பயன்பெறும் விதத்தில் 2015–ஆம் ஆண்டிலிருந்து குடும்ப ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வூதியதாரர்கள் இறுதியாக பெற்று வந்துள்ள ஓய்வூதியத் தொகையில் 50 விழுக்காடு குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் 359 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

2023–2024 ஆம் ஆண்டில், 110 பணியாளர்கள் குடும்பத்தினருக்கு குடும்ப ஓய்வூதிய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

**62.8 திருக்கோயில் அர்ச்சகர்களுக்குப் புத்தாடை மற்றும் பணியாளர்களுக்குச் சீருடை**

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் தமிழர் திருநாளாம் தைத் திருநாளில் அர்ச்சகர்களுக்குப் புத்தாடைகள் மற்றும் பணியாளர்களுக்குச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் 2023–2024–ஆம் நிதியாண்டில் 13,059 திருக்கோயில் பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**62.9 திருக்கோயில் பணியாளர்களுக்குத் திருத்திய ஊதிய விகிதம் நிர்ணயம் செய்து வழங்குதல்**

அரசு பணியாளர்களுக்கு ஏழாவது ஊதிய குழுவின் பரிந்துரையின்படி திருத்திய ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டது போல 48 முதுநிலை திருக்கோயில்களில் பணிபுரியும் 2826 திருக்கோயில் பணியாளர்களுக்கு திருத்திய ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**62.10 திருக்கோயில் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு**

அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இந்து சமய

அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ரூபாய் ஒரு இலட்சம் மற்றும் அதற்கு மேல் ஆண்டு வருவாய் வரப்பெறும் திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் நிரந்தர பணியாளர்களுக்கு 01.01.2024 முதல் அகவிலைப்படியை 46 விழுக்காட்டிலிருந்து, 4 விழுக்காடு உயர்வு செய்து, 50 விழுக்காடாக நிர்ணயம் செய்து வழங்கிட உத்தரவிடப்பட்டது.

**62.11 திருக்கோயில் பணியாளர்களுக்கு பொங்கல் கருணைக்கொடை உயர்வு**

அரசு ஊழியர்களுக்கு பொங்கல் திருநாளை முன்னிட்டு சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படுவது போல் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் முழுநேரம், பகுதிநேரம், தொகுப்பூதியம், தினக்கூலி பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து பணியாளர்களுக்கும். ரூ.2000/–ஆக வழங்கப்பட்டு வந்த பொங்கல் கருணைக்கொடை 2023 ஆம் ஆண்டிலிருந்து ரூ.3000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

ஓய்வுப்பெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு பொங்கல் கருணைக்கொடை ரூ.1000 வழங்கப்பட்டது.

**62.12 திருக்கோயிலில் தற்காலிகமாக பணிபுரியும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்தல்**

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பல ஆண்டுகளாக தினக்கூலி / தொகுப்பூதிய அடிப்படையில் தற்காலிகமாக பணிபுரியும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்து காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்து பணியாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கில் 2021–2022–ஆம் ஆண்டில் "திருக்கோயில்களில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் தற்காலிகமாக பணிபுரியும் சுமார் 1500 தகுதியான பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்படுவர்" எனும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

திருக்கோயில்களில் காலியாக உள்ள அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்களில் தினக்கூலி / தொகுப்பூதிய அடிப்படையில் ஐந்து வருடங்களுக்கு மேலாக தற்காலிகமாக பணிபுரியும் தகுதி

வாய்ந்த பணியாளர்களின் பணியினை நிபந்தனைகளுக்குட்பட்டு பரிசீலித்து ஒவ்வொரு பணியாளராக ஆய்வு செய்து பணிவரன்முறை செய்ய அரசாணை (நிலை) எண்.121, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி.4–1) துறை, நாள்.18.10.2021–ன் மூலம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.04.2022 அன்று 33 நபர்களுக்குப் பணிவரன்முறை ஆணை வழங்கினார்கள்.

அரசாணை (நிலை) எண்.128, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி.4.1) துறை, நாள்.21.06.2022–ன்படி பணிவரன்முறை செய்வதற்கான காலம் 31.07.2021 வரை நீட்டிக்கப்பட்டது. தற்போது வரை 1289 பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளனர்.

## 63. கிராமக்கோயில் பூசாரிகள் நலத்திட்டங்கள்
## கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமத் திருக்கோயில்களில் பூசை செய்யும் பூசாரிகளுக்கென 'கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்' ஒன்று உருவாக்கப்பட்டு அதன் மூலமாக நலத்திட்ட உதவிகள் பூசாரிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

கிராமப்புற பூசாரிகள் நலவாரிய உறுப்பினர்கள் மரணமடைந்தால் அன்னாரின் இறுதிச் சடங்கிற்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை ரூ.2,000/– லிருந்து ரூ.5,000/– ஆகவும் மற்றும் அவரது வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.15,000/–லிருந்து ரூ.50,000/– ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்ட உறுப்பினர்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடிகள், திருமண நிதியுதவி, கல்வியுதவி மற்றும் மகளிர் நல உதவிகள் வழங்கப்படுகின்றன.

**63.2 கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்**

இந்து சமய அறநிலையத்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படாத திருக்கோயில்களில், 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து 60 வயதினை நிறைவு செய்து ஓய்வுபெற்ற பூசாரிகளுக்கு, கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாத ஓய்வூதியம் ரூ.3,000/- வழங்கப்பட்டு வந்தது.

இத்திட்டத்தினை பரிசீலித்து 2021-2022-ஆம் நிதியாண்டில் கிராமக்கோயில் பூசாரிகளுக்கான மாத ஓய்வூதியம் ரூ.3,000/-லிருந்து ரூ.4,000/-ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள நிலையில் 5919 கிராமக்கோயில் பூசாரிகள் பயனடைந்து வருகின்றனர்.

**64. இந்து சமய அறநிலையத்துறை மற்றும் திருக்கோயில்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல்**

திருக்கோயில்களில் வழிபடுவோருக்கான சேவைகள் தொடர்பான விவரங்கள் மற்றும்

ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிருவாக மேலாண்மைத் திட்டம் (Integrated Temple Management System) ஆகியவற்றிற்கான வலைதள முகப்பு தேசிய தகவல்கள் மையத்தின் (NIC) உதவியுடன், இந்து சமய அறநிலையத்துறையில் தொடங்கப்பட்டது. தற்போதுள்ள மின்னணு காலத்திற்கேற்ற வகையில் மின்னணு உலகத்தில் உள்ள நற்பயன்களைப் பயன்படுத்தி வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் தகவல் பாதுகாப்பு போன்ற தரவுகளை முறைப்படுத்தி பக்தர்கள் பார்வைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள் இந்த மின்னணுவியல் காலத்தில் திருக்கோயில் அனுபவத்தை முழுமையாகப் பெறவைப்பதே ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிருவாக மேலாண்மைத் திட்டத்தின் (Integrated Temple Management System) நோக்கமாகும். தமிழ்நாட்டின் ஒவ்வொரு திருக்கோயிலிலும் உள்ள பல்வேறு சேவைகளை ஒரு வலைதள முகப்பில்

ஒருங்கிணைத்து மின்னணு பரிவர்த்தனை (Digital Transaction) மூலமாகக் கட்டணம் செலுத்தி பக்தர்கள் எளிதில் சேவைகளைப் பெறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருக்கோயில்களில் நெடுங்காலமாகக் கடைபிடிக்கப்பட்டு வரும் பாரம்பரியத்தையும், பழக்கங்களையும், ஆகம விதிகளையும் காப்பதுடன், மின்னணுப் பரிமாற்றங்களைப் பயன்படுத்தி பக்தர்களுக்கு மேம்பட்ட ஆன்மிக அனுபவத்தையும் வசதிகளையும் வழங்குவது ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிருவாக மேலாண்மைத் திட்டத்தின் (Integrated Temple Management System) அடிப்படை நோக்கமாகும்.

திருக்கோயில் ஆவணங்களைப் பாதுகாத்தல், நிதி நிருவாகத்தைக் கண்காணித்தல், திருக்கோயில் சொத்துகளின் பாதுகாப்பினை உறுதி செய்தல், திருக்கோயில் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புகளைச் சேகரித்துக் காத்தல், திருக்கோயிலுக்குச் சொந்தமான

சிலைகள்/உலோகத் திருமேனிகள் குறித்து விவரங்கள் சேகரித்தல், திருக்கோயில் நிலங்கள் மற்றும் கேட்பு வசூல் நிலுவை விவரங்களை மின்னணு வசதியுடன் கண்காணித்தல், பொதுமக்களையும் திருக்கோயில்களின் சுற்றுச் சூழலையும் ஒருங்கிணைத்தல் போன்ற பணிகள் ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிருவாக மேலாண்மைத் திட்டத்தின் (Integrated Temple Management System) முக்கிய பணியாகும்.

ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிருவாக மேலாண்மைத் திட்டத்தில் (Integrated Temple Management System), திருக்கோயில் நிருவாகம் மற்றும் செயல்பாடுகள் தொடர்பான பல்வேறு அம்சங்களுக்குத் தனித்தனி தொகுப்புகள் (modules) உருவாக்கப்பட்டு, தகவல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் – Dual Language) தனித்தனியாகத் தொகுக்கப்பட்டு வருகின்றன. நிலங்கள் மீட்பு, புவியியல் தகவலமைப்பு (Geographic Information System) வழக்குகள்,

திருக்கோயில் சொத்துகள், இணையம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோருதல், கைப்பேசி செயலி, அன்னதானத் திட்டம், கற்சிலைகள் மற்றும் உலோகத் திருமேனிகளின் விவரம், கேட்பு வசூல் நிலுவை விவரம், இணையம் மூலம் மின்னணு சேவை போன்றவைகள் நடைமுறையில் உள்ளன.

ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிர்வாகம் மேலாண்மை திட்டத்தின் (Integrated Temple Management System) கீழ் எந்தெந்த சேவைகள் திருக்கோயில் பக்தர்களுக்கு இணையம் வழியாக வழங்குதல், துறை நிர்வாகத்திற்கு சிலைகள் / உலோக திருமேனிகள் குறித்த தகவல்கள் மற்றும் நில ஆவணங்கள் பதிவேற்றம் செய்தல் போன்றவைகளை திருக்கோயில் நிர்வாகமே முடிவுகள் எடுக்க வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

நிருவாகம் தொடர்பான தொகுப்புகளில் உள்ளவை:–

- சொத்துப் பதிவேடுகள்
- வரவு செலவுத் திட்டம் மற்றும் தணிக்கை
- நிலங்கள்

- கேட்பு வசூல் நிலுவை
- திருப்பணி
- நீதிமன்ற வழக்குகள் தொகுப்பு
- கற்சிலைகள் மற்றும் உலோக சிலைகள்
- (GIS) புவியியல் தகவலமைப்புப் பதிவுகள் ஒருங்கிணைப்பு
- ஒரு கால பூஜை திட்டம்
- திருக்கோயில் பாதுகாப்பு
- இணையம் மூலம் ஒப்பந்தப் புள்ளிகள்
- HRCE கைப்பேசி செயலி

பக்தர்கள் தொடர்புடைய தொகுப்புகளில் உள்ளவை:

- திருக்கோயில்கள் தகவல்கள்
- இணைய வழி மூலம் சேவைகள் முன்பதிவு, நன்கொடை, வாடகை செலுத்துதல், அஞ்சல் வழி பிரசாதம் முன் பதிவு
- திருக்கோயில் கைப்பேசி செயலி
- இணையம் மூலம் கோரிக்கை நிறைவேற்றும் இலவச அழைப்பு மையம்
- அன்னதானம்

- கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியம் உறுப்பினர் சேர்க்கை
- அறங்காவலர் நியமன விண்ணப்பம்
- திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களின் நேரலை
- புத்தகங்கள் வெளியீடு
- திருக்கோயில் நிலம் மீட்பு
- முப்பரிமாணக் காட்சி

கடந்த 08.10.2021 அன்று, கேட்பு வசூல் நிலுவை தொடர்பான தொகுப்புகளுடன் இணையதளம் தொடங்கப்பட்டது. இதுவரை ரூ.728.39 கோடி நிலுவை வசூலாகி உள்ளது. 11.04.2022 அன்று தொடங்கப்பட்ட இணையவழி திருக்கோயில் சேவைகள் மூலம் 577121 பரிவர்த்தனைகள் மூலம் ரூ.22,76,69,613/- வசூலாகியுள்ளது.

பக்தர்கள் திருக்கோயில்களில் எளிதில் தரிசனம் செய்வதற்கான வாய்ப்புகளை ஒருங்கிணைக்கப்பட்ட திருக்கோயில் நிருவாக மேலாண்மைத் திட்டத்தின்

(Integrated Temple Management System) மூலம் மேற்கொள்ள இத்துறை தொடர்ந்து முயன்று வருகிறது. இந்த மின்னணுக் காலத்தில் திருக்கோயில் நிருவாகத்தின் வெளிப்படைத் தன்மையையும், பொறுப்புணர்ச்சியையும் இத்துறை உறுதி செய்து நிருவாகத்தை மேம்படுத்தி பக்தி உணர்வையும் போற்றி வருகிறது.

**65. கட்டணமில்லாத் தொலைபேசி சேவை**

திருக்கோயில்களுக்கு செல்லும் பக்தர்கள் தங்களது ஆலோசனைகள் மற்றும் குறைகளை தெரிவிக்க ஆணையர் அலுவலகத்தில் கட்டணமில்லாத் தொலைபேசி கடந்த 04.01.2023 அன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கட்டணமில்லாத் தொலைபேசி எண் **1800 428 1757** ஆகும். கடந்த 14.05.2024 வரை 412 புகார்கள் பதிவு செய்யப்பட்டு தீர்வு காண்பதற்காக உரிய அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு தீர்வு காணப்பட்டு வருகிறது.

## 66. நிறைவுரை

**"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப்படும்"**

**–திருவள்ளுவர்**

நாட்டையாளும் மன்னவன், செங்கோலாட்சி புரிந்து, சீரிய திட்டங்கள் வகுத்து, நல்லியல்புடைய அமைச்சரவையோடு கூடியிருந்து தம் ஆட்சித்திறத்தால், நல்லாட்சி தருபவரை, மக்கள் இறைவனுக்கு இணையாக வைத்துப் போற்றுவர்.

திருக்கோயில்களைப் புனரமைத்தல், ஆயிரக் கணக்கான திருக்கோயில்களில் திருக்குட நன்னீராட்டு நடத்துதல், திருவிழாக்கள் நடத்துதல், திருக்கோயில் சொத்துகளை பாதுகாத்தல், சாதி வேறுபாடின்றி அர்ச்சகர் நியமனம் மற்றும் தமிழ் மரபை மீட்டெடுக்கும் வகையில் திருக்கோயில் வழிபாட்டின் முக்கியத்துவம் உணர்ந்து தமிழில் அர்ச்சனை, சமயம் சார்ந்த இலக்கிய நூல்களை வெளியிடுதல், திருக்கோயில்களில் அன்னதான திட்டத்தின்கீழ் நாள்

முழுவதும் பக்தர்களுக்கு உணவளித்தல், திருமணங்களை நடத்தி வைத்தல், உள்ளிட்ட பல திட்டங்களைத் துறை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.

பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட திருக்கோயில் நிலங்கள் சட்ட வழியிலான தொடர் நடவடிக்கைகளால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

மேலும் தமிழக அரசு மேற்கொண்ட முயற்சியால் ஒரு வேளை பூசை கூட செய்ய வாய்ப்பு இல்லாத பல திருக்கோயில்களைக் கண்டறிந்து அவற்றில் முறையாக ஒரு கால பூசை நடைபெற அரசே நிதி வழங்கி தற்போது ஒரு கால பூசை சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பக்தர்கள் இறைவனின் திருவருளை நிறைவாகப் பெற்று, பயனடைந்து வருகின்றனர்.

ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்பதற்குத் தேவையான அளவீட்டுக் கருவிகள் மற்றும் நில அளவைக்குரிய துணைக் கருவிகளைக் கொண்டு நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு எல்லைக் கற்கள் நடப்பட்டு வருகின்றன.

ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்கள் கண்டறியப்பட்டு அரசு நிதியின் மூலம் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி ஆட்சி பொறுப்பேற்ற மூன்று ஆண்டுகளிலேயே இந்து சமய அறநிலையத் துறையானது பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி பல சாதனைகளைப் படைத்து வருகின்றது. இனிவரும் காலங்களிலும் இத்துறை தனது வெற்றிப் பாதையில் தொடர்ந்து பயணிக்கும்.

**பி.கே.சேகர்பாபு**

இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்

## இணைப்பு –I

## தங்கரதம் உள்ள திருக்கோயில்கள்

| வ.எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி |
| 2. | அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை |
| 3. | அருள்மிகு வடபழனியாண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை |
| 4. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி |
| 5. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு |
| 6. | அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை |
| 7. | அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில் |
| 8. | அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சநாரி, கோயம்புத்தூர் |
| 9. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம் |

| | |
|---|---|
| 10. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை |
| 11. | அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோயில் |
| 12. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் |
| 13. | அருள்மிகு வானமாமலைப் பெருமாள் திருக்கோயில், நாங்குநேரி (சப்பரம்) |
| 14. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 15. | அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி |
| 16. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை |
| 17. | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர் |
| 18. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு |
| 19. | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம் |
| 20. | அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர் |

| | |
|---|---|
| 21. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை |
| 22. | அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி |
| 23. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை |
| 24. | அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை |
| 25. | அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில், திண்டல்மலை, ஈரோடு |
| 26. | அருள்மிகு அனந்தபத்மநாபசுவாமி திருக்கோயில், அடையாறு, சென்னை |
| 27. | அருள்மிகு கருநெல்லிநாதசுவாமி திருக்கோயில், திருத்தங்கல், சிவகாசி |
| 28. | அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை |
| 29. | அருள்மிகு வேங்கடாசலபதி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், கும்பகோணம் |
| 30. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம் |
| 31. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கரூர் |

| | |
|---|---|
| 32. | அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில், கோயம்புத்தூர் |
| 33. | அருள்மிகு சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில், ஓசூர் |
| 34. | அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல் |
| 35. | அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், நாமக்கல் |
| 36. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பச்சைமலை, கோபிசெட்டிபாளையம் |
| 37. | அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாக்குறிச்சி |
| 38. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில், திருநெல்வேலி. |
| 39. | அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை, சிவகங்கை |
| 40. | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல் |
| 41. | அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர், திருச்சிராப்பள்ளி |

| | |
|---|---|
| 42. | அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம் |
| 43. | அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம் |
| 44. | அருள்மிகு முருகன் திருக்கோயில், சோலைமலை மண்டபம், அழகர்கோயில், மதுரை |
| 45. | அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர், இராணிப்பேட்டை |
| 46. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை |
| 47. | அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல் |
| 48. | அருள்மிகு அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், மேல்மலையனூர், விழுப்புரம் |
| 49. | அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், பாரியூர், ஈரோடு |
| 50. | அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், திருப்போரூர், காஞ்சிபுரம் |
| 51. | அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோயம்புத்தூர் |
| 52. | அருள்மிகு திருமலைக்குமாரசுவாமி திருக்கோயில், பண்பொழி, திருநெல்வேலி |

| | |
|---|---|
| 53. | அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 54. | அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயில், மடப்புரம், சிவகங்கை |
| 55. | அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில், பேளூர், சேலம் |
| 56. | அருள்மிகு பாலதண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், சுக்கிரவாரபேட்டை, கோயம்புத்தூர் |
| 57. | அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயில், சிவகாசி, விருதுநகர் |
| 58. | அருள்மிகு ஆமருவிப்பெருமாள் திருக்கோயில், தேரழுந்தூர், நாகப்பட்டினம் |
| 59. | அருள்மிகு பூங்கா முருகன் திருக்கோயில், தல்லாக்குளம், மதுரை |
| 60. | அருள்மிகு வாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், விருதுநகர் |
| 61. | அருள்மிகு சண்முகநாத சுவாமி திருக்கோயில், குன்றக்குடி (கேடகம் / சப்பரம்) |
| 62. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், திருவப்பூர், புதுக்கோட்டை |

| | |
|---|---|
| 63. | அருள்மிகு சௌந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், நாகப்பட்டினம் |
| 64. | அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில், மண்டைக்காடு, கன்னியாகுமரி |
| 65. | அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், கல்விடங்கம், சங்ககிரி வட்டம், சேலம் |
| 66. | அருள்மிகு வரசித்தி விநாயகர் திருக்கோயில், பெசன்ட்நகர், சென்னை |
| 67. | அருள்மிகு வஞ்சியம்மன் திருக்கோயில், மூலனூர், தாராபுரம், திருப்பூர் |
| 68. | அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயில், பட்டீஸ்வரம், மயிலாடுதுறை |

**இணைப்பு –II**

**வெள்ளிரதம் உள்ள திருக்கோயில்கள்**

| வ. எண். | திருக்கோயில் பெயர் |
|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் |
| 3. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை |

| | |
|---|---|
| 4. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி |
| 5. | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம் |
| 6. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை |
| 7. | அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை |
| 8. | அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம் |
| 9. | அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோயில் |
| 10. | அருள்மிகு சட்டநாதசுவாமி திருக்கோயில், சீர்காழி. |
| 11. | அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை |
| 12. | அருள்மிகு மாரியம்மன், அங்காளம்மன் திருக்கோயில், பொள்ளாச்சி |
| 13. | அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில், உடுமலைப்பேட்டை |
| 14. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு |

| | |
|---|---|
| 15. | அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர் |
| 16. | அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 17. | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 18. | அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை |
| 19. | அருள்மிகு திருவேங்கடமுடையான் திருக்கோயில், அரியக்குடி |
| 20. | அருள்மிகு சண்முகநாத சுவாமி திருக்கோயில், குன்றக்குடி |
| 21. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், கீழச்சேவல்பட்டி |
| 22. | அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை |
| 23. | அருள்மிகு நகரசிவன் என்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்,தேவகோட்டை |
| 24. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், கொன்னையூர், திருமயம் |
| 25. | அருள்மிகு ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயில், ஈரோடு |

| | |
|---|---|
| 26. | அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி |
| 27. | அருள்மிகு பழநியாண்டவர் திருக்கோயில், பவானி |
| 28. | அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், ஆய்க்குடி, திருநெல்வேலி |
| 29. | அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், தொட்டியம், திருச்சிராப்பள்ளி |
| 30. | அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நெய்வேலி |
| 31. | அருள்மிகு வெயிலுக்கு உகந்த விநாயகர் திருக்கோயில், உப்பூர், இராமநாதபுரம் |
| 32. | அருள்மிகு சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல் |
| 33. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குமரக்கோட்டம், காஞ்சிபுரம் |
| 34. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், எட்டுக்குடி, நாகப்பட்டினம் |
| 35. | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் மற்றும் தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், செட்டிக்குளம், பெரம்பலூர் |
| 36. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காரைக்குடி, சிவகங்கை |

| | |
|---|---|
| 37. | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில்,<br>தங்கசாலை, சென்னை |
| 38. | அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில்,<br>காஞ்சிபுரம் |
| 39. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,<br>விராலிமலை, புதுக்கோட்டை |
| 40. | அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில்,<br>திருவத்திபுரம், திருவண்ணாமலை |
| 41. | அருள்மிகு சேவுகப் பெருமாள் திருக்கோயில்,<br>சிங்கம்புணரி, சிவகங்கை |
| 42. | அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயில்,<br>பாலாற்றங்கரை, வேலூர் |
| 43. | அருள்மிகு நவநீதேஸ்வரர் திருக்கோயில்,<br>சிக்கல், நாகப்பட்டினம் |
| 44. | அருள்மிகு காளிகாம்பாள் கமடேஸ்வரர்<br>திருக்கோயில், சென்னை |
| 45. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,<br>சைதாப்பேட்டை, சென்னை |
| 46. | அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில்,<br>திருக்கோகர்ணம், புதுக்கோட்டை |
| 47. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,<br>கோயில்கந்தன்குடி, திருவாரூர் |

| | |
|---|---|
| 48. | அருள்மிகு கன்னிகா பரமேஸ்வரா ஆலயம், கடைவீதி, சேலம் |
| 49. | அருள்மிகு கம்பரேசுவரர் திருக்கோயில், திருபுவனம், தஞ்சாவூர் |
| 50. | அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயில், திருவேகைமருதூர், தஞ்சாவூர் |
| 51. | அருள்மிகு பரிமளரெங்கநாதர் திருக்கோயில், திருஇந்தலூர், மயிலாடுதுறை |
| 52. | அருள்மிகு வளரொளீஸ்வரர் திருக்கோயில், நகரவைரவன்பட்டி, சிவகங்கை |
| 53. | அருள்மிகு மங்களநாதசுவாமி திருக்கோயில், பிரான்மலை, சிவகங்கை |
| 54. | அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில், உத்திரமேரூர் |
| 55. | அருள்மிகு ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலயசுவாமிகள் திருமடம், பொம்மாபாளையம், விழுப்புரம். |

## இணைப்பு III

**யானைகளுக்கு மண் தரை, குளியல் தொட்டி, நடைபாதை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள திருக்கோயில்கள்.**

| வ. எண். | திருக்கோயில் பெயர் | யானையின் பெயர் மற்றும் வயது |
|---|---|---|
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி. | கஸ்தூரி 57 |
| 2. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை. | பார்வதி 27 |
| 3. | அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம். | இராமலட்சுமி 22 |
| 4. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர். | தெய்வானை 26 |
| 5. | அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில், சங்கரன்கோயில். | கோமதி 30 |

| | | |
|---|---|---|
| 6. | அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம். | தெய்வானை 14 |
| 7. | அருள்மிகு கள்ளழகர் சுவாமி திருக்கோயில், அழகர்கோயில். | சுந்தரவள்ளி தாயார் 17 |
| 8. | அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயில், மலைக்கோட்டை | இலட்சுமி 33 |
| 9. | அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயில், ஒப்பிலியப்பன் கோயில். | பூமா 26 |
| 10. | அருள்மிகு பட்டீஸ்வரர் சுவாமி திருக்கோயில், பேரூர். | கல்யாணி 32 |
| 11. | அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், திருவரங்கம். | ஆண்டாள் 43, பிரேமி என்கிற இலட்சுமி 23 |
| 12. | அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல் | அகிலா 20 |

| | | |
|---|---|---|
| 13. | அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் மற்றும் பாஷ்யகாரசுவாமி திருக்கோயில், ஸ்ரீபெரும்புதூர் | கோதை 25 |
| 14. | அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயில், இணைந்த அருள்மிகு ராமர் திருக்கோயில், படவேடு. | இலட்சுமி 28 |
| 15. | அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை | அபயாம்பிகை 57 |
| 16. | அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் சுவாமி திருக்கோயில், திருக்கடையூர் | அபிராமி 18 |
| 17. | அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் சுவாமி திருக்கோயில், கும்பகோணம் | மங்களம் 57 |
| 18. | அருள்மிகு இராஜகோபால சுவாமி திருக்கோயில், மன்னார்குடி | செங்கமலம் 36 |

| | | |
|---|---|---|
| 19. | அருள்மிகு பஞ்சாநதீஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருவையாறு (தருமபுர ஆதீனம்) | தர்மாம்பாள் 39 |
| 20. | அருள்மிகு சொர்ணகாளீஸ்வரர் திருக்கோயில், காளையார்கோயில் | சொர்ணவள்ளி என்கிற காந்தி 30 |
| 21. | அருள்மிகு நாச்சியார் திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர் | ஜெயமாலா என்கிற ஜெயமால்யதா 21 |
| 22. | அருள்மிகு சண்முகநாதசுவாமி திருக்கோயில், குன்றக்குடி | சுப்புலட்சுமி 60 |
| 23. | அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி | காந்திமதி 53 |
| 24. | அருள்மிகு ஆதிநாத ஆழ்வார் திருக்கோயில், திருநகிரி | ஆதிநாயகி 23 |
| 25. | அருள்மிகு வைத்தமாநிதி பெருமாள் திருக்கோயில், திருக்கோளூர் | குமுதவள்ளி 27 |

| | | |
|---|---|---|
| 26. | அருள்மிகு அரவிந்த லோச்சனார் திருக்கோயில், இரட்டைத் திருப்பதி (ஸ்ரீவைகுண்டம்) | இலட்சுமி 20 |
| 27. | அருள்மிகு அழகிய நம்பிராயர் திருக்கோயில், திருக்குறுங்குடி (ஜீயர் மடம்) | குறுங்குடிவல்லி 28 சுந்தரவல்லி 18 |

## இணைப்பு -IV

### பசுக்கள் காப்பகம் விவரம்

| வ. எண் | மண்டலங்கள் | பசுக்கள் காப்பகம் எண்ணிக்கை | பசுக்களின் எண்ணிக் கை |
|---|---|---|---|
| 1 | சென்னை 1 | 14 | 86 |
| 2 | சென்னை 2 | 12 | 115 |
| 3 | வேலூர் | 7 | 708 |
| 4 | சேலம் | 1 | 17 |
| 5 | கோயம்புத்தூர் | 6 | 46 |
| 6 | தஞ்சாவூர் | 4 | 71 |

| | | | |
|---|---|---|---|
| 7 | மயிலாடுதுறை | 14 | 163 |
| 8 | விழுப்புரம் | 1 | 23 |
| 9 | திருச்சிராப்பள்ளி | 9 | 179 |
| 10 | மதுரை | 3 | 156 |
| 11 | சிவகங்கை | 1 | 24 |
| 12 | திருநெல்வேலி | 3 | 70 |
| 13 | காஞ்சிபுரம் | 6 | 146 |
| 14 | ஈரோடு | 11 | 135 |
| 15 | திருப்பூர் | 6 | 66 |
| 16 | திருவண்ணா மலை | 3 | 85 |
| 17 | கடலூர் | 5 | 211 |
| 18 | தூத்துக்குடி | 12 | 40 |
| 19 | நாகப்பட்டினம் | 10 | 89 |
| 20 | திண்டுக்கல் | 2 | 640 |
| **கூடுதல்** | | **130** | **3070** |

## இணைப்பு -V

## மின்கலச் சிற்றுந்து வசதிகள் உள்ள திருக்கோயில்கள்

| வ.எண் | திருக்கோயில் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் | 4 |
| 2. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி | 4 |
| 3. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் | 5 |
| 4. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி | 1 |
| 5. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் | 1 |
| 6. | அருள்மிகு அருணாச்சலசுவரர் திருக்கோயில்,<br>திருவண்ணாமலை | 2 |
| 7. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர் | 1 |
| 8. | அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் | 1 |

| | | |
|---|---|---|
| | திருக்கோயில்,<br>திருவானைக்காவல் | |
| 9. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை | 2 |
| 10. | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம் | 4 |
| 11. | அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர் | 2 |
| 12. | அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், மதுரை | 3 |
| 13. | அருள்மிகு பட்டீஸ்வரர் சுவாமி திருக்கோயில், பேரூர் | 1 |
| 14. | அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம் | 1 |
| **கூடுதல்** | | **32** |

## இணைப்பு –VI

## உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்

| | |
|---|---|
| 1. | திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம் (அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகம்) |
| 2. | அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி |
| 3. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி |
| 4. | அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம் |
| 5. | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காந்திநகர், வேலூர் |
| 6. | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை |
| 7. | அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம் |
| 8. | அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிபுலியூர், கடலூர் |
| 9. | அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில், கும்பகோணம் |

| | |
|---|---|
| 10. | அருள்மிகு பட்டீஸ்வரர் சுவாமி திருக்கோயில், பேரூர், கோயம்புத்தூர் |
| 11. | அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருக்கோகர்ணம், புதுக்கோட்டை |
| 12. | அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை |
| 13. | அருள்மிகு சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், சிவகங்கை |
| 14. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் (கூடுதல் மையம்) |
| 15. | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர் |
| 16. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி |
| 17. | அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், அதியமான் கோட்டை, தருமபுரி |
| 18. | அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், விழுப்புரம் |
| 19. | அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் |

| | |
|---|---|
| 20. | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு மலைக்காவலர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல் |
| 21. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை, திருப்பூர் |
| 22. | அருள்மிகு சோழீஸ்வரர் பிரசன்ன வெங்கடரமணசுவாமி திருக்கோயில், பெருந்துறை, ஈரோடு |
| 23. | அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில், வீரபாண்டி, தேனி |

## இணைப்பு – VII

## புதிய உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர் |
| 2. | அருள்மிகு மதனகோபாலசுவாமி மற்றும் பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில், பெரம்பலூர் |
| 3. | அருள்மிகு நாகராஜா திருக்கோயில், நாகர்கோயில், கன்னியாகுமரி |
| 4. | இணை ஆணையர் அலுவலக வளாகம், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர் |

| | |
|---|---|
| 5. | அருள்மிகு காளியம்மன் திருக்கோயில்,<br>தான்தோன்றிமலை, கரூர் |
| 6. | அருள்மிகு ஆலந்துறையார் மற்றும்<br>கோதண்டராமசுவாமி திருக்கோயில், அரியலூர் |
| 7. | அருள்மிகு காயாரோகணசுவாமி உடனுறை<br>நீலாயதாட்சியம்மன் திருக்கோயில், நாகப்பட்டினம் |
| 8. | அருள்மிகு ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்கோயில்,<br>திண்டுக்கல் |
| 9. | அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில்,<br>கிருஷ்ணாபுரம், பாளையங்கோட்டை<br>(திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி<br>திருக்கோயிலின் உபகோயில்) |
| 10. | அருள்மிகு பரிமள ரெங்கநாதர் திருக்கோயில்,<br>திருஇந்தளூர், மயிலாடுதுறை |
| 11. | அருள்மிகு கபர்தீஸ்வரசுவாமி திருக்கோயில்,<br>திருவலஞ்சுழி, கும்பகோணம் |

## இணைப்பு –VIII

**கல்வி நிறுவனங்களின் பட்டியல் கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு பழநியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழநி, திண்டுக்கல். |
| 2. | அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழநி, திண்டுக்கல். |
| 3. | ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், திருநெல்வேலி. |
| 4. | ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி, குழித்துறை, கன்னியாகுமரி. |
| 5. | பூம்புகார் கல்லூரி, மேலையூர், நாகப்பட்டினம். |
| 6 | அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கொளத்தூர், சென்னை |
| 7 | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு |
| 8 | அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம் |
| 9 | திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விளாத்திக்குளம் |

## பல்தொழில்நுட்பக் கல்லூரி

| | |
|---|---|
| 1. | அருள்மிகு பழநியாண்டவர் பல்தொழில்நுட்பக் கல்லூரி, பழநி, திண்டுக்கல் |

## மேல்நிலைப் பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | அருள்மிகு பெரியநாயகியம்மன் மகளிர் மேல்நிலைப்பள்ளி, கோவிலூர், முத்துப்பேட்டை, திருவாரூர். |
| 2. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மேல்நிலைப்பள்ளி, மருதமலை, வடவள்ளி, கோயம்புத்தூர். |
| 3. | அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் மேல்நிலைப்பள்ளி, அய்யம்பாளையம், சாமளாபுரம், சோமனூர், திருப்பூர். |
| 4. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மதுரை. |
| 5. | அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருப்பரங்குன்றம், மதுரை. |
| 6. | அருள்மிகு திருமலை குமாரசுவாமி தேவஸ்தான பெண்கள் மேல்நிலைப்பள்ளி, குற்றாலம், தென்காசி. |

| | |
|---|---|
| 7. | தேவஸ்தான பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மண்டைக்காடு, கன்னியாகுமரி. |
| 8. | ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேல்நிலைப்பள்ளி, திருநெல்வேலி. |
| 9. | அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்தினி அம்பாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராமேஸ்வரம், இராமநாதபுரம். |
| 10. | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம். |
| 11. | ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மேல்நிலைப்பள்ளி, மயிலம், திண்டிவனம், விழுப்புரம். |

**உயர்நிலைப் பள்ளிகள்**

| | |
|---|---|
| 1. | அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப்பள்ளி, கீழ்வேளூர், திருவாரூர். |
| 2. | அருள்மிகு கலியுகவரதராஜப்பெருமாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கல்லங்குறிச்சி, அரியலூர். |
| 3. | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம். |

| | |
|---|---|
| 4. | அருள்மிகு சுந்தரராஜா உயர்நிலைப்பள்ளி, அழகர்கோயில், மதுரை. |
| 5. | தேவஸ்வம் உயர்நிலைப்பள்ளி, திற்பரப்பு, கன்னியாகுமரி. |

**தொடக்கப் பள்ளிகள்**

| | |
|---|---|
| 1. | சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரமம் தொடக்கப்பள்ளி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி. |
| 2. | சங்கரநாராயணசுவாமி திருக்கோயில் தொடக்கப்பள்ளி, சங்கரன்கோயில், தென்காசி. |
| 3. | ஸ்ரீ மெய்கண்டார் தொடக்கப்பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம். |
| 4. | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் தொடக்கப்பள்ளி, பழநி, திண்டுக்கல். |
| 5. | அருள்மிகு சுந்தரராஜா தொடக்கப்பள்ளி, அழகர்கோயில், மதுரை. |
| 6. | அஞ்சுகம் தொடக்கப்பள்ளி, கோடம்பாக்கம், சென்னை. |

## மெட்ரிகுலேஷன் பள்ளிகள்

| | |
|---|---|
| 1. | பழநி ஆண்டவர் மெட்ரிகுலேஷன் பள்ளி, பழநி, திண்டுக்கல். |
| 2. | காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை |

## சி.பி.எஸ்.இ. பள்ளி

| | |
|---|---|
| 1. | பராசக்தி வித்யாலயா, குற்றாலம், தென்காசி. |

# இராமானுஜர் நூல் வெளியீடு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.06.2024 அன்று தலைமைச் செயலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கைவண்ணத்தில் உருவான "இராமானுஜர் - மதத்தில் புரட்சி செய்த மகான்" எனும் தொலைக்காட்சித் தொடரை அனைத்து தரப்பினரும் அறிந்து கொள்ளும் வகையில் இந்து சமய அறநிலையத்துறையின் பதிப்பகப் பிரிவின் வாயிலாக நூலாக்கம் செய்யப்பட்ட "இராமானுஜர்" எனும் நூலினை வெளியிட்டார்.

# 1,100 வது திருமணம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.11.2023 அன்று சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், திருக்கோயில்கள் சார்பில் 1,100 மணமக்களுக்கு திருமணம் நடத்தி வைக்கும் நிகழ்வை நிறைவு செய்திடும் விதமாக, இரண்டு மணமக்களுக்கு திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

# இரண்டாவது கட்டமாக 108 அரிய பக்தி நூல்கள் வெளியீடு






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் பதிப்பகப் பிரிவு மூலம் இரண்டாவது கட்டமாக புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட 108 அரிய பக்தி நூல்களை வெளியிட்டார்.

# திருப்பணி நிதியுதவி



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.7.2023 அன்று தலைமைச் செயலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில், 2022 - 2023 ஆம் ஆண்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்ள 2 இலட்சம் ரூபாய் வீதம் 50 கோடி ரூபாய்க்கான வரைவோலைகளை வழங்கினார்.

# பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கு ஊக்கத்தொகை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.11.2023 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் பயிலும் மாணவர்களுக்கான ஊக்கத் தொகையை முறையே ரூ.4,000/- மற்றும் ரூ.2,000/-மாக உயர்த்தி 292 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 8 மாணவர்களுக்கு அதற்கான வங்கி வரைவோலைகளை வழங்கினார்.

# பணி நியமன ஆணை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.01.2024 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் சார்நிலைப் பணியில் செயல் அலுவலர் நிலை-3 பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

# நாள் முழுவதும் அன்னதானத் திட்டம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.01.2024 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் பெரியபாளையம், அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில், மேல்மலையனூர், அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், ஆனைமலை, அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தைக் காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

# ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் உயர்த்தி வழங்குதல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.09.2023 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை ரூ.3,000/-லிருந்து ரூ.4,000/-மாகவும், குடும்ப ஓய்வூதியத்தை ரூ. 1,500/-லிருந்து ரூ.2,000/-மாகவும் உயர்த்தி அதற்கான காசோலைகளை வழங்கினார்.

# கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களுக்கு அரசு மானியம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.11.2023 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்காக தற்போது வழங்கப்பட்டு வரும் அரசு மானியத்தை ரூ.6 கோடியிலிருந்து ரூ.8 கோடியாக உயர்த்தி அதற்கான காசோலையை வழங்கினார்.

# கல்விக் கட்டணம் மற்றும் உபகரணங்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 31.7.2023 அன்று கொளத்தூரில் உள்ள அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி, கல்லூரியில் பயிலும் 685 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி கட்டணம் ரூ.10,000/- மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளை வழங்கினார்.

# உயர்கல்வி உதவித்தொகை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.11.2023 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஒருகால பூஜைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் / மகள்களின் மேற்படிப்பிற்கு உயர்கல்வித் தொகையாக ரூ.10,000/-ஐ 400 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 8 மாணவர்களுக்கு அதற்கான வங்கி வரைவோலைகளை வழங்கினார்.

# முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 14 திருக்கோயில்களில் ரூ.131.15 கோடி மதிப்பீட்டிலான 20 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 15 திருக்கோயில்களில் ரூ.29.27 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 17 பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

# புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.02.2024 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 592 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 36 திருக்கோயில்களில் கட்டப்படவுள்ள 43 புதிய திட்டப் பணிகளுக்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

# தங்க முதலீட்டுப் பத்திரம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.9.2023 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசின் உருக்காலையில் உருக்கி தூய தங்கக்கட்டிகளாக முதலீடு செய்யப்பட்டதற்கான தங்க முதலீட்டு பத்திரத்தினை, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. ஆர்.அருள்முருகன் அவர்களிடம் வழங்கினார்.

# வள்ளலார் – 200 நிறைவு விழா



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 5.10.2023 அன்று இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற வள்ளலார் - 200 ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில், வள்ளலாரின் இறை அனுபவங்கள் என்ற நூலினை வெளியிட்டார்.

# திருக்கோயில்களில் சமத்துவ விருந்து




சுதந்திர தினத்தை முன்னிட்டு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களும் மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்களும் சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் 15.8.2023 அன்று நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்து நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## ஏழை, எளியோருக்கு வேட்டி, புடவைகள் வழங்குதல்



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் 15.08.2023 அன்று சுதந்திர தினத்தை முன்னிட்டு, நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி, சேலைகளை வழங்கினார்.

# பணியாளர் குடியிருப்பு



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, திருவல்லிக்கேணியில், 12.03.2024 அன்று அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் சார்பில் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணியாளர்கள் குடியிருப்பை திறந்து வைத்தார்.

# 1,000 வது குடமுழுக்கு





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், 1,000-வது குடமுழுக்காக 10.09.2023 அன்று நடைபெற்ற சென்னை, மேற்கு மாம்பலம், அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, தவத்திரு ஆதீனங்கள், இறையன்பர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நில அளவீடு பணிகள்




மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் 14.09.2023 அன்று தருமபுரி மாவட்டம், கோபாலம்பட்டி, அருள்மிகு பேட்ராய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 2.93 ஏக்கர் நிலத்தினை அளவீடு செய்ததன் மூலம் 1,50,000 ஏக்கரை நிறைவு செய்து, 1,50,001-வது ஏக்கரை நில அளவீடு செய்யும் பணியினை தொடங்கி வைத்தார்.

# இராமேசுவரம் - காசி ஆன்மிகப் பயணம்



மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் 01.02.2024 அன்று சென்னை, எழும்பூர் ரயில் நிலையத்தில் இராமேஸ்வரம் - காசி ஆன்மிகப் பயணத்தின் முதற்கட்ட பயணத்தில் பங்கேற்கும் பக்தர்களுக்கு பயண வழிப்பைகளை வழங்கி ஆன்மிகப் பயணத்தை தொடங்கி வைத்தார்.

# அறுபடைவீடு ஆன்மிகப் பயணம்



மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் 28.01.2024 அன்று சென்னை, கந்தகோட்டம் அருள்மிகு முத்துக்குமாரசாமி திருக்கோயிலில் அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் முதற்கட்ட பயணத்தில் பங்கேற்கும் 207 மூத்த குடிமக்களுக்கு பயணவழிப் பைகளை வழங்கி ஆன்மிகப் பயண பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# பெண் ஓதுவார்கள் நியமனம்



மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் 25.09.2023 அன்று ஆணையர் அலுவலகத்தில் திருக்கோயிலுக்கு நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 5 பெண் ஓதுவார்கள் உட்பட 15 ஓதுவார்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

# ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு பொங்கல் கொடை



மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் 10.01.2024 அன்று ஆணையர் அலுவலகத்தில் திருக்கோயிலில் பணியாற்றி ஓய்வு பெற்ற அர்ச்சர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பொங்கல் கொடை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து ரூ. 1,000/- க்கான காசோலைகளை வழங்கினார்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.